இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100
1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 111 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – கார்த்திகை 14 – வியாழக்கிழமை 30 நவம்பர் 2023 – வெளியூர் 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 111 : Thiruvalluvar Year - 2054 - Karthigai 14 - Thursday 30 November 2023 - Dak 12 Pages ₹ 5.00

## இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (8)

# கரும்பு வெட்டும் தொழிலாளி; இரும்பு நெஞ்சப் போராளி!



**நெல்லைச் சீமையில் 2007ஆம் ஆண்டு டிசம்பர் 15, 16 ஆகிய இரண்டு நாட்கள் கழக இளைஞர் அணியின் முதல் மாநில மாபெரும் மாநாட்டை - அப்போதைய கழக இளைஞர் அணிச் செயலாளர் - தற்போதைய கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மிக பிரம்மாண்டமான முறையில் எழுச்சியோடு நடத்திக் காட்டினார். இம்மாநாட்டிற்காக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், 'இளைஞர்களுக்கு வழி விடுவோம்' எனும் தலைப்பில் முரசொலி'யில் 2007 நவ.7-ந் தேதி முதல் டிச.2-ந் தேதி வரை தொடர்ச்சியாக 25 'கலைஞர் கடிதங்கள்' எழுதி உடன்பிறப்புகளுக்கு அழைப்பு விடுத்தார். தற்போது சேலத்தில் 2023 - டிச.17 அன்று கழக இளைஞர் அணிச் செயலாளர் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நடத்த விருக்கும் கழக இளைஞர் அணியின் 2-வது மாநில மாநாட்டையொட்டி, அக்கடிதங்களை இங்கே எடுத்து வெளியிடுவதில் மகிழ்கிறோம்.**

**உடன்பிறப்பே,**

பேரறிஞர் அண்ணா அவர்கள், "இளைஞர்கள் ஒரு இயக்கத்தின் ஈட்டி முனைகள்" என்று கூறியதை வைத்து, 1999ஆம் ஆண்டு, சென்னை கலைஞர் அரங்கத்தில் தி.மு.க. இளைஞர் அணி சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றபோது, பேசிய நான், இளைஞர்கள் ஈட்டி முனைகளாக இருப்ப தோடு, இயக்கத்திற்கு ஒவ்வொருவரும் ஆயிரக்க ணக்கான மக்களைத் திரட்டிடும் முனைகளாகவும் இருக்க வேண்டுமென்று கூறியிருந்தேன். ஆனால் அரசியலுக்கு வந்துள்ள சில புதிய வரவு கள், நான் ஏதோ இப்போதுதான் இளைஞர்களுக் காக எழுதுவதைப் போல சொல்லிக் கொண்டு திரிகின்றன. 1966ஆம் ஆண்டு இன்று என்னிடம் செயலாளர்களில் ஒருவராக இருக்கும் தம்பி ராஜமாணிக்கம், ஐ.ஏ.எஸ்., உள்ளிட்டோர் எடுத்த முயற்சியின் காரணமாகத் தஞ்சையில் மாணவர் அணியின் சார்பில் மாநாடு ஒன்று நடைபெற்ற போது, அண்ணா அவர்கள் மேடைக்கு வந்தார் கள். மேடையில் கழகத்தின் மூத்தவர்கள் எல்லாம் அமர்ந்திருந்தார்கள். உடனே அண்ணா, கழகத் தின் மூத்த தலைவர்களையெல்லாம் பார்த்து, இது மாணவர்கள் நடத்தும் மாநாடு, எனவே நீங்கள் எல்லாம் எதிரே சென்று அமர்ந்து கொள்ளுங்கள் என்று கூறி அந்த இடத்தில் மாணவர் அணி யினைச் சேர்ந்தவர்களையெல்லாம் அமரச் சொன்னார்.

மேலும், அங்கே கழகத்தின் மூத்த தலைவர்கள் யாரும் உரையாற்ற வேண்டாமென்றும், மாணவர் அணியைச் சேர்ந்தவர்கள் மட்டுமே பேச வேண்டுமென்றும், அவர்களின் உரையைக் கேட் பதற்காகத் தான் வந்திருப்பதாகவும் தெரிவித்தார் கள். நாற்றங்கால் வளமாக இருந்தால்தான் பயிர் கள்செழிப்பாக வளர்ந்திட முடியும். ஒரு இயக்கத்தின் நாற்றங்கால்தான் இளைஞர் சமுதாயம். இளை ஞர் சமுதாயம் எந்தவொரு இயக்கத்தில் பலமாக இருக்கின்றதோ, அந்த இயக்கம்தான் வலுவாக வளர இயலும். நான் தொடர்ந்து எழுதி வருவ தைப் போல, அகில உலகத் தலைவர்கள் எல்லாம் இளைஞர்களாக இருந்த போது சாதித்த சாதனை கள்தான், அவர்கள் வயது முதிர்ச்சியுற்ற பிறகு ஆற்றிய சாதனைகளை மிஞ்சியவை ஆகும்.

அந்த வரிசையில்தான் பிடல் காஸ்ட்ரோவின் அருமைத் தோழன் சேகுவாராவைப் பற்றி இன் றைய கடிதத்தில் எழுதுவதாகக் குறிப்பிட்டிருந்தேன்.

சேகுவாராவைப் பற்றி மட்டும் எத்தனை நாட் களுக்கு வேண்டுமானாலும், எத்தனை கடிதங்கள் வேண்டுமென்றாலும் எழுதிக் கொண்டேயிருக்க லாம். இதைத்தான் எழுத்தாளர் காப்ரியில் கார் சியா மார்கோஸ் "**இலட்சக்கணக்கான பக்கங்களில், ஆயிரம் வருடங்கள் வேண்டுமானாலும் எழுதிக் கொண்டிருக்கலாம்**" என்று குறிப்பிட்டார்.

நள்ளிரவில் அரண்மனையைவிட்டு வெளியே றினான் புத்தன். அவனுக்கு ஞானத்தின் கதவுகள் திறந்தன. ஒரு முப்பதாண்டுக் காலம் இயேசுவும் உலகம் முழுவதும் சுற்றி வந்ததாகக் கூறப்படுவதுண்டு. தென்னாப்பிரிக்காவில் இருந்து திரும்பிய அண்ணல் காந்தியடிகளுக்கும், இந்திய மக்களின் இதயத்துடிப்பை அறிந்திட ஓர் இரண் டாம் வகுப்பு இரயில் பயணம் தேவைப்பட்டது. மாசேதுங்கின் சீனப்புரட்சி ஒரு நீண்ட பயணமா கவே நிகழ்த்தப்பட்டது. அதைப்போலவே, இரு பத்தி மூன்று வயது நிரம்பிய சேகுவாரா மோட்டார்

**கலைஞர் கடிதம்**

சைக்கிளில் பசிபிக் கடலோர நாடுகளுக்குப் பய ணம் சென்றார். அந்தப் பயணத்தைப் பற்றி அவர் தனது அன்னையாருக்கு எழுதிய கடிதத்தில், "**ஒரு புரட்சிக்காரனின் தேவைகள் என்ன? வலிமை வாய்ந்த கால்கள், எளிமையான சுமை, ஒரு பிச்சைக் காரனின் வயிறு.**" பயணம் சென்றபோது இலத்தீன் அமெரிக்காவின் அழகோடு, அதன் மக்களை அதன் உள்நாட்டு வெளிநாட்டு எதிரிகளைத் தனது சொந்தக் கண்களால் நேரடியாக அறிந்து கொண் டார் சேகுவாரா என்கிற அந்த இலட்சிய இளைஞர்.



**இளம் வயதில் சேகுவாரா**

பிற்காலத்தில் எதேச்சாதிகாரத்திற்கும், அதிகார துஷ்பிரயோகத்திற்கும், எளியோர் உரிமைகளைப் பறிக்கும் தன்னல ஆட்சியாளர்களுக்கும் எதிராகப் போராடுகின்ற புரட்சியாளர்களுக்கும், போராளி களுக்கும் தள நாயகனாக மாறப்போகிற சேகுவாரா வின் எதிர்காலப் போராட்டக் கூறுகளுக்கு முன்னோட்டமாக இந்தப் பயணம் அமைந்தது. இந்தப் பயணத்தைப் பற்றி சேகுவாரா எழுதுகை யில், நமது மக்களின் ஏழ்மையை, பசியை, அவர் களைப் பீடித்திருக்கும் நோய்களை நெருக்கமாகச் சென்று பார்த்ததாலேயே, தன்னால் இந்த அரசியல் சூழலில் ஒரு முழுநேர மருத்துவராக மனசாட்சிப் படி பணியாற்றவே முடியாது என்பதையும், மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்கு முன் அவர்கள் வாழ்வைக் கவ்வியிருக்கும் நாசகாரச் சக்திகளை ஒழிப்பதுதான் முதல் வேலையாக இருக்க

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

## எட்டாக் கனியாக இருந்த கல்வி எல்லோருக்கும் கிடைக்க சமூக நீதி சீர்திருத்தத் தலைவர்கள்தான் காரணம்!

# தமிழ்நாட்டு மாணவர்கள் படித்து உலகெங்கும் சென்று சாதிக்க வேண்டும்!

## தீரன் சின்னமலை மகளிர் கலை - அறிவியல் கல்லூரியைத் திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, நவ. 30 -**

**எட்டாக் கனியாக இருந்த கல்வி எல்லோருக்கும் கிடைக்க சமூக நீதி சீர்திருத்தத் தலைவர்கள்தான் கார ணம் என்றும், தமிழ்நாட்டு மாணவ - மாணவிகள் நன்கு படித்து உலகெங்கும் சென்று சாதிக்க வேண்டும் என்பதே எனது கனவு, மகிழ்ச்சி எனவும் தீரன் சின்னமலை மகளிர் கலை - அறிவியல் கல்லூரி யைத் திறந்து வைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரை யாற்றுகையில் குறிப்பிட்டார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர் கள் நேற்று (29.11.2023) காணொலிக் காட்சி வாயிலாக கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து, தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டி ஆற்றிய உரை வருமாறு:–

தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைப்பதிலும், CBSE பள்ளிக்கு அடிக் கல் நாட்டி வைப்பதிலும் மகிழ்ச்சி அடை கிறேன்!

தீரன் சின்னமலையின் பெயரை சொன்னாலே, இப்போதும் உணர்ச்சி யும் எழுச்சியும் ஏற்படும்!

'சென்னிமலைக்கும் சிவன் மலைக் கும் இடையில் ஒரு சின்னமலை' என்று சொல்லி இன்றைக்கும் வரலாற்றில் பெரும் மலையாக வாழுகிறவர்தான் தீரன் சின்னமலை.

**தீரன் சின்னமலையின் உயிர் தியாகம்!**

விடுதலை உணர்வுடன் போராடிய தற்காக சிறை பிடிக்கப்பட்டு, தூக்கிலிடப்பட்டவர் தீரன் சின்னமலை!

அவரைப் போன்றவர்களின் உயிர்த் தியாகத்தால்தான் இந்திய நாடு விடு தலை பெற்றது.

அவருடைய பெயரை கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு வைப்பதற்கு முதலில் என்னுடைய பாராட்டுகளை தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

திருப்பூர் அங்கேரிபாளையம் சாலையில், 1991ஆம் ஆண்டு, கொங்கு வேளாளர் மெட்ரிக் மேல்நி லைப் பள்ளி துவங்கப்பட்டு, இன் றைக்கு 3,135 மாணவ – மாணவியர் பயின்று வரும் மிகப்பெரிய பள்ளியாக உயர்ந்திருக்கிறது. பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கியுள்ள குடும்பங் களைச் சேர்ந்த குழந்தைகள்தான் இங்கே அதிகம் படிக்கிறார்கள்.

**தீரன் சின்னமலை பெயரில் கல்லூரி!**

இதன் அடுத்தகட்டமாக, மகளிர் கல்லூரி தொடங்கப்பட்டிருக்கிறது. கல் லூரி கட்டியது போக மீதமிருக்கின்ற இடத்திலேயும் பள்ளி தொடங்க முடிவு செய்திருக்கிறீர்கள்.

கல்லூரியை தொடங்கி வைப்பது பள்ளிக்கு அடிக்கல் நாட்டுவது என்று,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) காணொலிக் காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், வஞ்சிபாளையம், அவிநாசி – மங்கலம் சாலையில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
வியாழக்கிழமை 30-11-2023

# சமூக நீதியில் அடைய வேண்டியவை!

சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களது சிலைத் திறப்பு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூகநீதி வரலாற்றில் நாம் அடைய வேண்டிய இலக்குகளை விரிவாகப் பட்டியலிட்டுள்ளார்கள்.

★ கல்வி நிறுவனங்களில் ஓ.பி.சி. இடஒதுக்கீடு 2006க்கு பிறகுதான் நடைமுறைக்கு வந்தது.

★ பல்கலைக்கழக மானியக்குழு இணை இயக்குநர் பதவிக்கு இடஒதுக்கீடே கிடையாது. எல்லாமே பொதுப்பிரிவு!

★ ஒன்றிய அரசின் துறைச் செயலாளர்கள் 89 பேரில் பட்டியலினப் பிரிவைச் சேர்ந்தவர் ஒரே ஒருவர், பழங்குடிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 3 பேர். பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் ஒருவர் கூட கிடையாது!

★ ஒன்றிய அரசு துறைகளின் கூடுதல் செயலாளர்கள் 93 பேரில், பிற்படுத்தப்பட்டவர் ஒருவர் கூட கிடையாது!

★ ஒன்றிய அரசு துறைகளின் இணைச் செயலாளர்கள் 275 பெயரில், 19 பேர் மட்டுமே பிற்படுத்தப்பட்டவர்கள்!

★ அசாம், உத்தரப் பிரதேசம், சத்தீஸ்கர், ஜார்கண்ட் உள்ளிட்ட பல மாநிலங்களில் இருக்கின்ற மத்திய சட்டப் பல்கலைக்கழக மாணவர் சேர்க்கையில் இந்த ஆண்டு வரை இடஒதுக்கீடே இல்லாத நிலைதான் நீடிக்கிறது.

★ 45 மத்தியப் பல்கலைக்கழகங்களில், பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்த பேராசிரியர்கள் 4விழுக்காடு மட்டுமே.

★ 2018 முதல் 2023 வரை நாடு முழுவதும் உயர்நீதி மன்றங்களில் நியமிக்கப்பட்ட 604 நீதிபதிகளில், 72 பேர் மட்டும்தான் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சேர்ந்தவர்கள்.

★ உயர்நீதிமன்ற, உச்சநீதிமன்ற நீதிபதிகள் நியமனத்தில் இடஒதுக்கீடு முறை அமல்படுத்தப்படவில்லை.

★ அரசுத் துறைகளின் பதவி உயர்வுகளின் போது இடஒதுக்கீடு முறை நடைமுறைப்படுத்தப்படவில்லை.

★ தாமதப்படுத்தப்பட்ட மக்கள் தொகை கணக்கெடுப்பை அந்தக் கணக்கெடுப்பின்போது சாதிவாரி கணக்கெடுப்பையும் ஒன்றிய அரசு நடத்த வேண்டும்.

★ பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீடு முழுமையாக முறையாக வழங்கப்படவேண்டும்.

★ பட்டியலின பழங்குடியின மக்களுடைய இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்படவேண்டும்.

★ சிறுபான்மையினர் இடஒதுக்கீடும் முறையாக வழங்கப்பட வேண்டும்.

★ இதையெல்லாம் அகில இந்திய ரீதியில் கண்காணித்து, உறுதி செய்ய அனைத்துக் கட்சி எம்.பிக்கள் கொண்ட குழு அமைக்கப்படவேண்டும். இதனையெல்லாம் அகில இந்திய அளவில் சமூகநீதியில் ஆர்வம் கொண்ட அனைத்து அரசியல் இயக்கங்களும் ஒற்றுமையாக இணைந்து மக்கள் நலனுக்காகச் செயல்படவேண்டும்.

இவைதான் மாண்புமிகு முதலமைச்சர் வைத்த இலக்குகள் ஆகும். கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டும் இதில் மிக முக்கியமானவையாக அமைந்துள்ளது. கல்வி, வேலை வாய்ப்பு ஆகிய இரண்டுக்குமான தடையை உடைத்தால் போதும், அதுவே அடுத்தடுத்த வெற்றியை உருவாக்கித் தரும். இதனை தான் வி.பி.சிங் சொன்னார்.

**“கல்வி வேறு, அறிவு வேறு. அந்த அறிவு மனிதனுக்கு அதிகாரத்தைத் தர இருக்கிறது. அப்படி அறிவு அதிகாரத்தைத் தருகிறது என்பதை ஈராயிரம், மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னாலே ‘அவர்கள்’ உணர்ந்தார்கள். அதனால்தான் அதிகாரத்தைத் தங்கள் கையிலேயே வைத்துக் கொள்ள வேண்டும் என்று கருதி, ஒன்றைச் செய்தார்கள். மற்றவர்கள் படித்து அறிவு பெறக் கூடாது என்று நினைத்தார்கள். அப்படி நினைத்ததால்தான், சூத்திரர்கள் வேதத்தைப் படித்தால், அவர்கள் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்று என்று சொன்னார்கள். அந்த அளவிற்கு அறிவுத் துறையைத் தங்கள் கையிலே ஏகபோகமாக வைத்துக் கொண்டார்கள்.**

**ஒடுக்கப்பட்ட மக்களுக்கு அந்தக் காலத்திலிருந்து இந்தக் காலம் வரை, தொழில் நுணுக்கங்களைக் கொடுக்க மறுத்தார்கள். இருந்த போதிலும் தானாகவே முயன்று ஏகலைவன் (வில் வித்தையைக்) கற்றுக் கொண்டான். அவனது கட்டை விரலையே வெட்டி விட்டார்கள். பணத்தை தருவார்கள், பொருளைத் தருவார்கள், கல்வியை மட்டும் தர மாட்டார்கள்”** என்பதை தெளிவுபடுத்தி பேசினார் வி.பி.சிங் அவர்கள்.

“ஒரு குடும்பத்தில் அண்ணன் தம்பிகளிடையே பாகப் பிரிவினை நடந்தது. வீட்டில் இருந்த ஒரே மாட்டையும் இரண்டாகப் பிரித்துவிட வேண்டும் என்றார்கள். மாட்டின் தலைப்பகுதி தம்பிக்கும் பின்பகுதி அண்ணனுக்கும் பிரிக்கப்பட்டது. தம்பியின் கடமை ஒவ்வொரு நாளும் தலைப் பகுதியிலுள்ள வாய்க்கு மாட்டின் தீவனம் போட வேண்டும். அண்ணனோ ஒவ்வொரு நாளும், பின் பகுதியிலுள்ள மாட்டின் மடியிலிருந்து பால் கறந்து கொண்டே இருந்தார். எத்தனை காலத்துக்குத்தான் இந்த அநீதியை தம்பி சகித்துக் கொண்டிருப்பான்? ஒரு நாள் அண்ணன் பால் கறந்து கொண்டிருக்கும்போது தம்பி, தலைப்பகுதியிலிருந்த கொம்பைப் பிடித்து ஆட்டி விட்டான். அவ்வளவுதான்; இத்தனை ஆண்டுகாலம் தீனி போடாமலேயே பாலை மட்டும் கறந்து கொண்டிருந்த அண்ணனை மாடு எட்டி உதைத்தது. அண்ணன் இது அநீதி; அநியாயம் என்று அலறுகிறான். அந்தக் கொம்பைப் பிடித்து ஆட்டிய வேலையைத்தான் நான் செய்தேன்” என்று சொன்னவர் வி.பி.சிங் அவர்கள்.

இன்றைக்கு இடஒதுக்கீட்டுக்கு வேட்டு வைக்கத் துடிப்பது இதனால்தான். நீட் தேர்வைக் கொண்டு வந்து மருத்துவக் கனவை சிதைத்துவிட்டார்கள். புதிய கல்விக் கொள்கையானது அனைவரையும் தரநீக்கம் செய்யும் கல்வியாக மாறப் போகிறது. ‘ஒரே தகுதி முறை’ என்பதன் மூலமாக அனைவரையும் பலவீனப்படுத்தப் பார்க்கிறார்கள். இவை அனைத்தையும் உடைக்கும் ஒரே ஆயுதமாக இருக்கப் போவது சமூகநீதி எனப்படும் இடஒதுக்கீடு முறையே ஆகும்.

**பட்டியலின பழங்குடியின மிகவும் பிற்படுத்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின மகளிர் மாற்றுத்திறனாளிகள் திருநங்கையர் விளிம்பு நிலை மக்கள் அனைவர்க்கும் இடஒதுக்கீடு வழங்கி அதிகாரத்தை சமப்படுத்த வேண்டும். அனைத்து தரப்பட்ட மக்களும் பங்களிப்பதே அதிகாரச் சமநிலை ஆகும். அதனை நோக்கிய இலக்குகளையே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வைத்துள்ளார்கள். ‘இந்தியா’ கூட்டணி ஆட்சி அமையும் போது இவை சமூகநீதி இலக்குகளாக நிச்சயம் அமையும்.**

●●

மணல் குவாரி விவகாரத்தில் போலி ஆதாரங்களை வைத்து அமலாக்கத்துறை வழக்குப் பதிவு!

# தி.மு.க. அரசு மீது களங்கம் விளைவிக்கவே - அமலாக்கத்துறையை ஒன்றிய அரசு ஏவுகிறது!

## மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. பேட்டி – கடும் கண்டனம்!

**புதுடெல்லி, நவ.30-**

**மூத்த வழக்கறிஞரும் – நாடாளுமன்ற மாநிலங்களவை கழக உறுப்பினருமான என்.ஆர்.இளங்கோ, நேற்று முன்தினம் அளித்த பேட்டியில், “மணல் குவாரி விவகாரத்தில் போலி ஆதாரங்களை வைத்து அமலாக்கத்துறை வழக்குப் பதிகிறது!” என்றும், “தி.மு.க. அரசு மீது களங்கம் விளைவிக்கவே – அமலாக்கத் துறையை ஒன்றிய பா.ஜ.க. அரசு ஏவுகிறது” என்றும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ எம்.பி. அளித்த பேட்டி வருமாறு :-

அமலாக்கத் துறை சட்டவிரோத பண பரிமாற்றச் சட்டத்தின் அடிப்படையில் விசாரிக்க வேண்டும் என்றால், அதற்கு அடிப்படையான ஒரு வழக்கு உரிய காவல்துறையால் பதியப்பட்டு விசாரிக்கப்பட வேண்டும். அமலாக்கத்துறை 4 முதல் தகவல் அறிக்கையை வைத்துக்கொண்டு இந்த வழக்கை விசாரிக்கப் போவதாக சொல்லியுள்ளார்கள். அந்த 4 வழக்குகளும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட மணல் குவாரிகளுக்குச் சம்பந்தம் இல்லாதவை. தனியார் மணல் கொள்ளைக்காரர்களால் நடத்தப்பட்ட குவாரிகளில் போலியாக ஆதாரங்களை வைத்துக்கொண்டு அமலாக்கத் துறை இந்த வழக்கைப் பதிவுசெய்து தமிழ்நாடு அரசுக்கு அவப்பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற அடிப்படையில் விசாரித்து வருகின்றனர்.

அமலாக்கத்துறை தன்னுடைய பதிலில், ‘நாங்கள் எவ்வளவு மணல் கொள்ளை நடந்துள்ளது என்பதைச் சேகரித்துள்ளோம்’ என பொய்யான தகவல்களை உயர்நீதிமன்றத்தில் கொடுத்துள்ளார்கள். ஆனால் மணல் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளதா இல்லையா என்பதை விசாரிக்க அமலாக்கத்துறைக்கு அதிகாரம் இல்லை என்பதை உயர்நீதிமன்றம் சொல்லியுள்ளது.

மணல் விவகாரத்தில் கொள்ளை போயிருப்பதாக அமலாக்கத்துறைக்குத் தகவல் கிடைத்தாலும், சட்டவிரோத பணபரிமாற்றச் சட்டம் 66இன்கீழ் அரசிற்கும், அரசின் புலன் விசாரணை அமைப்புகளுக்கும் தகவல் தந்துதான் விசாரிக்கச் சொல்லியிருக்க வேண்டும், அமலாக்கத் துறையினரே அந்த விசாரனையை நடத்தக் கூடாது.

அதேபோல் மாநில புலன் விசாரனை அமைப்புகளால் மணல் உட்பட ஏதேனும் விவகாரங்களில் குற்றம் நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை கொடுக்கப்பட்டால் மட்டும் தான், அந்த விவகாரத்தில் சட்டவிரோதமாகப் பணம் கைமாறப்பட்டுள்ளதா என்ற வகையில் அமலாக்கத் துறை விசாரணை நடத்த முடியும். தங்களுக்கு அதிகாரம் இல்லாத, மணல் கொள்ளை நடந்ததா இல்லையா என்ற விசாரணையை அமலாக்கத் துறைச் சட்டத்திற்குப் புறம்பாக நடத்தக் கூடாது என்றுதான் வாதம் செய்தோம். அதற்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

### பா.ஜ.க.வின் கையாளான அமலாக்கத்துறை!

சட்டப்படி அமலாக்கத் துறை இந்த விசாரணையைச் செய்ய முடியாது. ஒருவேளை மணல் விவகாரத்தில் முறைகேடு நடைபெற்றதாக அமலாக்கத் துறைக்குத் தெரிய வந்திருந்தால், அந்த தகவலைத் தமிழ்நாடு அரசின் புலன் விசாரணை அமைப்புகளுக்குத் தெரியப்படுத்தினால், அந்தப் புலன் விசாரணை அமைப்புகள் மட்டுமே விசாரிக்க முடியும். அப்படி புலன் விசாரணை அமைப்புகள் விசாரணை மேற்கொண்டு தவறு நடந்திருப்பதாக முதல் தகவல் அறிக்கை கொடுத்தால், அதனடிப்படையில் சட்டவிரோதமாகப் பணப் பரிமாற்றம் நடந்துள்ளதா என்ற விசாரணையை மட்டும்தான் அமலாக்கத் துறைச் செய்ய முடியும்.

அரசு அதிகாரிகளை அழைக்கும்போது பிரிவு 50 (2)இன் கீழ் சம்மன் கொடுக்க அதிகாரம் கிடையாது. அது முறையற்ற புலன் விசாரனை. சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்ட அடிப்படையில் அமலாக்கத் துறையினர் மாநில அரசின் அதிகாரிகளை விசாரிக்க வேண்டும் என்றால் பிரிவு 54இன்கீழ் மட்டும்தான் சம்மன் கொடுத்து விசாரிக்க வேண்டும். ஒன்றிய அரசு எங்குப் புலன் விசாரணை செய்ய வேண்டுமோ, அங்கு மட்டும் தான் செய்ய வேண்டும். மாநில அரசின் அதிகாரங்களைக் கையில் எடுப்பது மாநில சுயாட்சிக்கு எதிரானது என்ற வாதத்தையும் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டுள்ளது.

இந்த வழக்கை பா.ஜ.க.வின் கையாளாகச் செயல்படும் அமலாக்கத் துறை தமிழ்நாடு அரசின் மீது களங்கம் விளைவிக்க மட்டுமே போட்டுள்ளார்கள் என்பது அவர்கள் தந்துள்ள பதில் மனுவிலே குறிப்பிடப்பட்டுள்ளது. 2016 தேர்தலில் பா.ஜ.க. தனித்துப் போட்டியிட்டது. அப்போது தேர்தல் பரப்புரையில் அமித்ஷா, அ.தி.மு.க. ஆட்சியில் ஏறக்குறைய 20 ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் மணல் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டார். ஆனால் பா.ஜ.க.வினர், அ.தி.மு.க. மீது ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்ற கேள்வியும் எழுகிறது. இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் மணல் கொள்ளை குறித்த வழக்குகள் நடைபெற்று கொண்டுள்ளன. பா.ஜ.க. ஆட்சி செய்யும் மாநிலங்களில் எவ்வளவு மணல் கொள்ளை வழக்குகள் உள்ளன என்ற பட்டியலையும் நீதிமன்றத்திலும் சமர்பித்துள்ளோம். அங்கு அமலாக்கத்துறையினர் எந்தப் புலன் விசாரனைகளையும் மேற்கொள்ளவில்லை.

2024 தேர்தலை எதிர்நோக்கி உள்ள நேரத்தில், தி.மு.க. அரசிற்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் 4730 கோடி ரூபாய் அரசிற்கு வந்திருக்க வேண்டியது வரவில்லை என பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளனர். 201112ஆம் ஆண்டில் 31 லட்சம் லோடுகள் மணல் விற்பனை அரசால் நடந்துள்ளது. 2020-21இல் 1.5 லட்சம் லோடுகள் மட்டும் தான் விற்பனை செய்ய முடிந்தது. ஆற்று மணலுக்கு பதிலாக இசேண்ட் மணல் விற்பனைக்கு வந்ததால் மக்களிடம் ஆற்று மணல் வாங்கும் ஆர்வம் குறைந்து விட்டது. 2021-22ஆம் ஆண்டில் அது 80 ஆயிரம் லோடுகள் மட்டுமே விற்பனை செய்யப்பட்டுள்ளது. இந்த அடிப்படை ஆய்வுகூட இல்லாமல் 27.75 லட்சம் லோடுகள் விற்கப்பட்டிருக்க வேண்டும் என்ற தவறான கணக்கை பதில் மனுவில் தாக்கல் செய்துள்ளனர். விளக்கம் கேட்ட நோட்டீசில், தமிழ்நாடு அரசு மணல் கொள்ளையைத் தடுக்க சிறப்பான நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளனர். இதற்கு அரசியல் காழ்ப்புணர்ச்சி மட்டும்தான் காரணம் என்பதை தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது.

பா.ஜ.க.வின் முகத்திரை கிழிக்கப்பட்டுள்ளதாலும், மக்கள் அவர்கள் மீது கோபமாக இருப்பதாலும் மிகப்பெரிய பின்னடைவு வரக்கூடிய தேர்தலில் அவர்களுக்கு ஏற்படும்.

பா.ஜ.க.வினர் யாரையாவது திட்டுகிறார்கள் என்றால், அவர்கள் நல்லவர்கள் என்று மக்கள் புரிந்துகொள்வார்கள். பொய்யர்கள் கூறுவதை மக்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணி விரிசல் என்பதும் போலியான நாடகம் என்பதை பலமுறை தி.மு.க.வின் மூத்த தலைவர்கள் கூறியுள்ளனர்.

### துன்புறுத்தல்!

எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த அரசியல்வாதிகள் மீது மட்டும்தான் பா.ஜ.க.வினர் வழக்குப் போட்டுள்ளனர். அரசு அதிகாரிகளை மிரட்டி ஒரு வாக்குமூலம் வாங்கினால் அதை வைத்து வழக்கு போட முடியாதா என்றும் அமலாக்கத்துறையினர் பார்க்கின்றனர். முத்தையா என்ற அதிகாரி கூறும்போது கூட, தன்னைத் துன்புறுத்தி அமலாக்கத்துறையினர் வாக்குமூலம் வாங்கியதாக பதில் மனுவில் குறிப்பிட்டுள்ளதோடு காவல்துறையில் புகாரே கொடுத்துள்ளார்.

இந்த வழக்கை முழு விசாரணைக்கு வரும் 21ஆம் தேதி எடுத்துக்கொள்வதாக நீதிமன்றம் கூறியுள்ளது. அப்போது அரசு குவாரிகளில் எந்தவிதமான மணல் கொள்ளையும், முறைகேடுகளும் நடக்கவில்லை என்பதை உரிய ஆதாரங்களுடன் நீதிமன்றத்தில் சமர்ப்பிப்போம்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற சட்ட அடிப்படையில் சிறையில் இருக்கும் ஒருவர், ஜாமீன் வேண்டும் என்றால், எந்தக் குற்றத்தையும் செய்யவில்லை என்பதை நீதிமன்றத்திற்கு நிரூபிக்கும் வகையில் ஆதாரங்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதேநேரம் அவரின் உடல்நிலை பாதிப்படைந்திருந்தால் இந்த விதி தளர்த்தப்படும். அதனால் தான் மருத்துவக் காரணங்களுக்காக ஜாமீன் கேட்டோம். அது நீதிமன்றத்திற்குத் திருப்தியாக இல்லை என்பதால், கீழ் நீதிமன்றத்திற்குச் சென்று முறையிடச் சொல்லியுள்ளார்கள். ஜாமீன் வழங்குவதற்காக முகாந்திரம் இல்லை என நீதிமன்றம் கருதியிருந்தால் டிஸ்மிஸ் செய்திருக்கலாம், ஆனல் அப்படிச் செய்யாமல், ஜாமீன் வழங்க முகாந்திரம் இருப்பதால், கீழ் நீதிமன்றம் சென்று மெரிட்ஸ் படி கேட்க அறிவுறுத்தியுள்ளார்கள்.

செந்தில்பாலாஜி தொடர்புடைய வழக்கும் பொய்யான ஆதாரங்களின் அடிப்படையில்தான் பதிவுசெய்யப்பட்டுள்ளது என்பதற்கான ஆதாரங்கள் உள்ளன. அதை மெரிட்ஸ்படி ஜாமீன் கேட்கும் போது தாக்கல் செய்வோம்.

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. தனது பேட்டியில் குறிப்பிட்டார்.



# இளைஞர்களுக்கு வழி விடுவோம்! (8)

# கரும்பு வெட்டும் தொழிலாளி; இரும்பு நெஞ்சப் போராளி!

## கலைஞர் கடிதம்!... முதல் பக்கத் தொடர்ச்சி

வேண்டும் என்பதை தான் உணர்ந்ததாகக் குறிப்பிட்டுள்ளார்.

தனது இருபத்தி ஆறாவது வயதில், தலைமறைவாயிருந்த கியூபா புரட்சியாளர்களைச் சந்தித்தார் சேகுவாரா. 1955இல் பிடல் காஸ்ட்ரோ விடுதலை செய்யப்பட்டதும், சேகுவாரா காஸ்ட்ரோவைச் சந்தித்தார். இருபத்தொன்ப தாவது வயதில் சேகுவாரா புரட்சிப்படையின் மூன்றாவது அணிக்குத் தலைவராக அறிவிக்கப்பட்டார். முதல் அணிக்கு காஸ்ட்ரோவே தலைவராக இருந்தார். அவரது முப்பதாவது வயதில் புரட்சிப்படை வெற்றி அடைந்தது. கியூபா விடுதலைக்கு அவர் ஆற்றிய பணிகளை கவுரவித்து, முப்பத்தொன்றாவது வயதில், கியூபக் குடிமகனாக அறிவிக்கப்பட்டார். கியூபா நிர்வாகத்தில் பங்குபெற்று வந்த சேகுவாரா 1961-இல், அதாவது, அவரது முப்பத்து மூன்றாவது வயதில் கியூபாவின் தொழில்துறை அமைச்சராக நியமிக்கப்பட்டார்.

அவர் அமைச்சராக இருந்தபோது பெற்ற மகிழ்ச்சியை விட, கரும்பு வெட்டுகிற தொழிலாளியாக வேலை செய்த போதுதான் அதிக மகிழ்ச்சியாக இருந்திருக்கிறார். அமர்ந்திருந்தது அமைச்சர் நாற்காலியில் என்றாலும், அவர் மனமோ களம் தேடி அலைந்து கொண்டிருந்தது என்கிறார்கள் அவர் வரலாறு தீட்டியோர்.

அமைச்சராக இருந்து கொண்டே களம் தேடிய அவரால், இயல்பான குடும்ப வாழ்க்கையை நடத்த முடியவில்லை. அலெய்டா மார்க்சை அவர் காதலித்துத் தான் திருமணம் செய்து கொண்டார். அவர் சாதாரண இல்லத்தரசியாக மட்டும் இருக்கவில்லை, அவரது செயலாளராகவும், சக போராளியாகவும் திகழ்ந்தார். ஆனால் அவருக்கு, வரிசையாக நான்கு குழந்தைகள் பிறந்தன. அவர்களை வளர்க்க வேண்டிய பொறுப்பு அலெய்டா மீது மட்டுமே விழுந்தது. நியாய விலைக் கடைகளில் பொருட்களை வாங்க நடந்தோ, பேருந்திலோ போய் வர வேண்டிய நிலைமை. ஓரிரு முறை சேகுவாராவின் அரசு வாகனத்தை மருந்து வாங்கி வர அலெய்டா எடுத்துச் சென்றதை பெரும் தவறு என்று சேகுவாரா கண்டித்தார். **“இந்தக் கார் யார் கார் தெரியுமா? மக்கள் வரிப் பணத்தால் வாங்கப்பட்டது. அதில் மக்கள் பணத்தால் வாங்கப்பட்ட பெட்ரோல் ஊற்றப்பட்டிருக்கிறது. அதை காய் கறி வாங்க நாம் எப்படி பயன்படுத்தலாம்?”** என்று சேகுவாரா கேட்க, மனம் வருந்தி அலெய்டா குழந்தைகளைக் கைகளில் தூக்கிக் கொண்டு பேருந்தில் போய் வந்தார்.

சேகுவாரா தொழில் துறைக்கு அமைச்சராக இருந்தபோதிலும், வங்கிகளைக் கையாளும் பொறுப்பும் அவரிடம்தான் இருந்தது. அவரிடம் பொருளியல் அறிவு இல்லை என்று கூற முடியாது. எனவே அந்தத் துறையையும் அனைவரும் பாராட்டும் வகையிலே நடத்தினார்.

ஆனால் பிறகு எல்லாவற்றையும் ஒரு நாள் துறந்து விட்டு, துப்பாக்கியோடு காடுகளை நோக்கிப் புறப்பட்டு விட்டார். உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான ஒரு உலகத்தைப் படைக்க வேண்டுமென்ற வேட்கையுடன் தொடங்கிய அந்தப் பயணத்தில், காட்டுப் பூச்சிகள் அவரைக் கடித்ததால் உடம்பு முழுவதும் வீங்கி விட்டதாம். சாப்பிட எதுவும் கிடைக்காமல், கிடைத்த குதிரை மாமிசத்தைச் சாப்பிடுகிறார். அதன் காரணமாக வயிற்று வலி. ஆஸ்த்துமா தொல்லை வேறு. ‘இவ்வளவிற்கும் இடையே ஏகாதிபத்தியத்திற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டுமென்ற வேள்வியில் ஈடுபடுகிறார். தன்னைக் காவு கொடுத்துக் கொண்டாவது, மக்களுக்கு வெளிச்சத்தைக் காட்ட வேண்டுமென்ற வெறி அவரது கண்களில் எப்போதும் ஒளிவிட்டுக் கொண்டே இருந்தது.

**“உருவுகண்டு எள்ளாமை வேண்டும் -**
**உருள்பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து”**

என்றார் அய்யன் வள்ளுவர். உருவத்தின் சிறுமையைக் கண்டு இகழக் கூடாது என்பதுதான் இந்தக் குறளின் மையக் கருத்து. நேற்று நான் எழுதியதைப் போல கியூபா ஒரு சின்னஞ்சிறிய நாடு. அதன் மக்கள் தொகை அறுபது லட்சம். அந்த நாட்டின் எல்லையைக் கொண்டோ, மக்கள் தொகையைக் கொண்டோ அதனை மதித்து விட முடியாது. உலக அளவில் சிந்திக்கக் கூடிய ஒரு நாடாக இடம் பெற காரணமாக இருந்த - இருக்கிற பிடல் காஸ்ட்ரோ, பல்கலைக் கழக மாணவர் பேரவைத் தலைவராக இருந்தபோது அந்த நாட்டின் வெற்றிக்கான விதையை விதைத்தார். மிகப் பெரிய வல்லரசான அமெரிக்காவிற்குப் பக்கத்திலே மிகச் சிறிய நாடான கியூபா இருந்து கொண்டு, ஏகாதிபத்தியத்திற்கு அடி பணிய மாட்டேன் என்று குரல் எழுப்பி, உலக மக்களையெல்லாம் வியந்து நோக்கச் செய்யும் அளவிற்கு கடந்த ஐம்பதாண்டு காலமாக வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகின்றது. பிடல் காஸ்ட்ரோவும், அவரது ஆருயிர் தோழரான சேகுவாராவும் 1955ஆம் ஆண்டு ஜூலை அல்லது ஆகஸ்டில்தான் முதன் முதலாக சந்தித்துக் கொண்டிருக்கிறார்கள். இதுபற்றி சேகுவாரா எழுதும் போது, **“குளிர் நிறைந்த ஒரு நாள் இரவு, மெக்சிகோ நகரில், அவரை நான் சந்தித்தேன். முதலில் உலக அரசியல் நிலவரங்கள் குறித்து பேசினோம். பொழுது விடியும் முன்பாகவே எனது அடுத்த பயணத்தைப் பற்றிய முடிவுக்கு நான் வந்து விட்டேன். அறிவுக் கூர்மைமிக்க, தன்னம்பிக்கை நிறைந்த, அசாத்திய துணிச்சல் வாய்ந்த இளைஞரை நான் பார்த்தேன். கண்ணீரை நிறுத்தி விட்டு, போராட வேண்டிய நேரம் வந்து விட்டது” என்றும் குறிப்பிட்டுள்ளார்.**

இந்தச் சந்திப்பு குறித்து காஸ்ட்ரோ என்ன எழுதினார் தெரியுமா? **“ஒரே நாள் இரவில் நடைபெற்ற உரையாடலில் சேகுவாரா கிராண்மா நோக்கிச் செல்லும் படையில் ஓர் உறுப்பினராகி விட்டார்”** என்கிறார் பிடல் காஸ்ட்ரோ. அப்போது தொடங்கிய சந்திப்பு, இருவரையும் நண்பர்களாக, தோழர்களாக, போராளிகளாக, சகோதரர்களாக, கியூபாவின் வெற்றிக்கு வித்திட்ட வர்களாக உலகத்தின் முன் நிலை நிறுத்தியது.

தொடக்கத்தில் ஒரு குழப்பமான சமுதாய அமைப்பைக் கொண்ட நாடாக விளங்கிய கியூபாவில், புரட்சியை வெற்றிகரமாக நடத்தியதுதான் பிடல் காஸ்ட்ரோவின் வெற்றி. இவரது அன்பு காரணமாக, சேகுவாரா உலக நாடுகள் பலவற்றுக்கும் பயணம் மேற்கொள்ளவும், ஆப்பிரிக்க நாடுகளின் மீது கவனம் செலுத்தவும் முடிந்தது. எகிப்து நாட்டின் அதிபராக இருந்த கமால் அப்துல் நாசர், நெக்ருமா, சிகோதேர, நயாரரே போன்ற பல உலகத் தலைவர்களுடன் சேகுவாரா நெருங்கிய நட்பு கொண்டிருந்தார். தனது புரட்சிகரமான எண்ணங்களை இவர்களிடமெல்லாம் அவ்வப்போது பகிர்ந்து கொண்டார். சீனாவின் அதிபரான சூ-என்-லாய் இவருக்கு அளித்த ஊக்கம் அயர்வு போக்கும் அருமருந்தாயிற்று! அடிக்கடி ஊக்கமளித்து வந்தார். கியூபாவின் விடுதலைக்காகத் துப்பாக்கியை கையிலே தூக்கிக் கொண்டு, இவர் பயணம் செய்த தூரம் மிகவும் அதிகம்.

மிக இளம் பருவத்தில், சேகுவாரா, கரும்பு வெட்டும் கூலித் தொழில் புரிவதற்காக சென்றார் என்றறிந்த தாய் செலியா, **“என் மகனே, இறுதியாக கரும்பு வெட்டும் தொழிலுக்குத்தான் அருகதையானவன் என்று கருதிவிட்டாயா? மரணத்தை எதிர்த்துப் போராட தகுதியானவன் அல்லவா நீ? அந்த இடம்தான் உனக்குரியது”** என்று கூறியதாக அந்த நூலாசிரியர் எழுதியிருப்பதை நான் படித்தபோது, புறநானூற்றில் இடம் பெற்ற தமிழ்க் குல தாய்மார்களின் குரல்தான் என் செவிகளில் எதிரொலித்தன. அதே தாய், சில நாட்கள் கழித்து, தன்னுடைய மகனை ராணுவ பள்ளியில் சேர்த்துக் கொள்ளாமல் விலக்களித்து விட்டார்கள் என்ற செய்தியைக் கேட்டு மகிழ்ச்சி அடைந்தாளாம். அப்போது அவளை பாசம் கவ்விக் கொண்டது போலும். அப்போதும் அந்தத் தாய், **“நல்லவேளையாக என் மகன் தப்பி விட்டான்! ராணுவப் பயிற்சி என்ற பெயரால் என் மகனை ஏதாவது ஒரு சார்ஜண்டின் மனைவி, காய்கறி வாங்க பையோடு சந்தைக்கு அனுப்பியிருப்பதிலிருந்து தப்பித்துக் கொண்டு விட்டான் அவன். ஆனாலும் அவன் போராடுகின்ற காலம் வந்தே தீரும்”** என்றும் கூறினாராம்.

இந்தத் தாயின் வார்த்தைகள் பின்னர் எப்படி மெய்ப்பிக்கப்பட்டன என்பதை பிடல் காஸ்ட்ரோவின் இளவலும், சேகுவாராவின் நண்பனுமான ரால் காஸ்ட்ரோ - **“சேகுவாராவின் டைரியை படித்த போது ஒரு உன்னதமான புரட்சிக்காரனுடைய குருதியால் இது தீட்டப்பட்டுள்ளது என்பதை உணருகிறேன். அவரது தைரியம், உறுதி, இறுதிவரை போராடுகிற மனோதிடம் ஆகியவற்றின் மீது நான் அபிமானம் கொண்டேன். கொரில்லா குழுவிற்கு தோல்வி ஏற்பட்டது பற்றி எழுதும் போதும் அவர் பெரும் நம்பிக்கையோடு இருந்திருக்கிறார். இறுதிவரை பணிந்து போகாத வீரராக இருந்திருக்கிறார்”** என்று எழுதியிருப்பதிலிருந்து உணர்ந்து கொள்ள முடிகிறது.

சேகுவாராவின் தனி மனித வாழ்க்கை முறையைப் பார்த்தால் கூட, இளம் வயதில் அவர் சாதாரண சராசரி மனிதர்களைப் போல இருக்கவில்லை. சியாரா மீஸ்ட்ராவில் காடுகளில் பதுங்கியிருந்த போதும், விவசாயிகள் மத்தியில் கிராமங்களில் அவர் இருந்தபோதும், போராளிகளாக இருந்த அவரது நண்பர்கள், சூழ்நிலைகள் காரணமாக காம வேட்கை நிறைந்தவர்களாக மாறி, சில கிராமப் பெண்களுடன் உறவு கொண்டதாக அறிந்த சேகுவாரா அவர்களையெல்லாம் கடுமையாகக் கண்டித்திருக்கிறார். அது இரண்டு ஆண் பெண்களுக்கு நடுவிலே எழும் உறவு முறை சம்பந்தப்பட்டதல்ல, அவர்கள் புரட்சிக்காரர்களாகத் தான் கிராமங்களுக்குள் சென்றார்கள். அப்படியேதான் செயல்பட்டிருக்க வேண்டும். அதற்கு மாறாக அவர்கள் செயல்பட்டால், அது புரட்சியை பாதிக்கும் என்று கூறியிருக்கிறார்.

புரட்சிக்காரனான சேகுவாரா தன் குழந்தைகளுக்கு தன் மறைவுக்கு முன் எழுதிய மடலை இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன்.

**“என் பிள்ளைக்கனி அமுதங்களாம்,**

**பிரியத்திற்குரிய ஹில்டிடா, அலெய்டா, காமிலோ, செலியா, ஏர்னஸ்டோ ஆகியோருக்கு.**

**இந்தக் கடிதத்தை நீங்கள் எப்போதாவது படிக்கிறபோது நான் உங்களுடன், இல்லை என்பது தெரிந்து விடும்.**

**என்னை நீங்கள் அதிகம் நினைத்திருக்க மாட்டீர்கள். சின்னஞ்சிறார்களுக்கோ என்னைப் பற்றி நினைத்துப் பார்க்க எதுவும் இருக்காது.**

**உங்கள் தந்தை தன் கருத்துக்களுக்கு ஏற்பச் செயலாற்றியவன். அவன் தன் நம்பிக்கைக்கேற்ப வாழ்ந்தவன்.**

**நீங்கள் நல்ல புரட்சிக்காரர்களாக வளர வேண்டும். நன்றாகப் படியுங்கள். இயற்கையைக் கட்டுப்படுத்த தொழில் நுட்பத்தை தன் வயப்படுத்திக் கொள்ளுங்கள். புரட்சிதான் மிக முக்கியமானது என்பதை நினைவில் கொள்க. நாம் ஒவ்வொருவரும் அதில் தனித் தனியாக ஒரு துளிதான்.**

**இந்த உலகத்தில் எங்கு அநியாயம் இழைக்கப்பட்டாலும், அதுகுறித்து பிரதிபலிப்பைக் காட்ட வேண்டியது மிகவும் முக்கியமானதாகும். அதுதான் ஒரு புரட்சிக்காரனின் பாராட்டத்தக்க தன்மையாகும்.**

**விடைபெறுகிறேன், குழந்தைகளே.... உங்களை மீண்டும் பார்ப்பேன் என நம்புகிறேன்.**

**உங்கள் அப்பா அரவணைத்து, ஒரு பெரும் முத்தத்துடன்.**

**அப்பா “சே”**

சேகுவாரா தன் புரட்சியை கியூபா நாட்டின் வெற்றியுடன் முடித்துக் கொள்ளவில்லை. பக்கத்திலே உள்ள பொலிவியா நாட்டிலும் புரட்சி விதையை ஊன்றிட விரும்பிச் சென்றான். **“கியூபா புரட்சியில் எனக்கு அளிக்கப்பட்டிருந்த கடமைகளை நிறைவேற்றி விட்டேன் என நினைக்கிறேன். நான் உங்களிடமிருந்தும், தோழர்களிடமிருந்தும் என்னுடையவர்களாகி விட்ட மக்களிடமிருந்தும் விடைபெறுகிறேன்”** என்று பிடல் காஸ்ட்ரோவிற்கு மடல் வரைந்து விட்டு பொலிவியப் புரட்சியிலே தன்னை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டார்.

பொலிவியா நாட்டின் புரட்சியின் வெற்றிக்காக முழு முனைப்புடன் பாடுபடும் சேகுவாராவின் வாழ்க்கைக்கு முற்றுப்புள்ளி வைக்க ஏகாதிபத்தியம் முயற்சித்தது. சேகுவாராவைப் பிடித்துக் கொடுப்பவர்களுக்கு 4200 டாலர்கள் சன்மானம் அளிக்கப்படும் என்று விலை நிர்ணயிக்கப்பட்டது. ஒரு நாள், சேகுவாரா, உலகத்திலிருந்து காணாமல் அடிக்கப்பட்டார் என்று செய்தி வருகிறது. அவர் இருக்கிறாரா? இல்லையா? என்ற கேள்விகள் எல்லாம் எழுப்பப்படுகின்றன. உண்மை உலகத்திற்குச் சரியாக அறிவிக்கப்படவில்லை. ஆனால் அமெரிக்க ஆவணங்களில் பின்னர் வெளிவந்த தகவல்களின்படி, அவர் கொல்லப்பட்டார் என்பதுதான் செய்தி. அந்த மரணத்தின் முனையிலே கூட, சேகுவாரா தன்னை சுடுவதற்காக வந்த ராணுவ தளபதியிடம் **“நீ எதற்கு வந்திருக்கிறாய் என்று தெரியும். நான் தயார். ஒரு மனிதனைத் தானே கொல்லப் போகிறாய். கோழையே சுடு”** என்றாராம். அவனும் சுட்டான். சேகுவாரா சுவரில் சாய்ந்து விழுந்தார். ஆனால், சாயாமல் நிமிர்ந்து நிற்கிறார் இன்றளவும் நம் நெஞ்சங்களில்!

**அன்புள்ள**
**மு.க.**

(முரசொலி - 15.11.2007)

## முதல்வர் மு.க. ஸ்டாலின் உரை... முதல் பக்கத் தொடர்ச்சி

இரண்டு பணியையும் எனக்கு கொடுத்ததற்கு முதலில் நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கொங்கு வேளாளர் அறக்கட்டளைத் தலைவர் பெஸ்ட் S.ராமசாமி அவர்களுக்கும், அறக்கட்டளையின் உறுப்பினர்கள் எல்லோருக்கும் என் பாராட்டுகள்! வாழ்த்துகள்!

தீரன் சின்னமலை பெயரில் கல்லூரி அமைக்க 28 ஏக்கர் நிலம் வாங்கியும் அனுமதி கிடைக்காமல் இருந்தது. கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில், இதே மேற்கு மண்டலத்திலிருந்து 9 பேர் அமைச்சர்களாக இருந்தும் அனுமதி கிடைக்கவில்லை. கல்லூரி கட்டியதற்காக இந்த நிலத்தின் வகையை கூட மாற்றிக் கொடுக்கவில்லை.

**கல்லூரி கட்டுவதற்கான தடையை உடனடியாக நீக்கித் தந்தேன்!**

நம்முடைய திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகு, நம்முடைய நாடாளுமன்ற உறுப்பினர் அருமை தோழர் சுப்பராயன் அவர்கள் தீரன் சின்னமலை கல்லூரி தொடர்பான அறக்கட்டளை நிர்வாகிகளை எல்லாம் அழைத்துக் கொண்டு வந்து இந்தக் கோரிக்கையை என்னிடத்தில் வைத்தார். நான் நேரடியாக கண்காணித்து, நில “வகை”யை மாற்றிக்கொடுத்து கல்லூரி கட்டுவதற்கு இருந்த முதல் தடையை நீக்கினேன். பிறகு, உயர்கல்வித் துறை அனுமதி, கட்டட அனுமதி எல்லாவற்றையும் வழங்க ஆணையிட்டு அதையும் நிறைவேற்றிக் கொடுத்தோம்.

இன்றைக்கு இந்தப் பகுதியில் இருக்கின்ற பெண்களுக்கான கல்லூரியாக இது மாறியிருக்கிறது. இதை நேரில் வந்து திறந்து வைக்கவேண்டும் என்று மிகவும் ஆசைப்பட்டேன். ஆனால், என்னுடைய உடல்நிலை காரணமாக, நீண்ட தூர பயணத்தை தவிர்க்கவேண்டும் என்று மருத்துவர்கள் கண்டிப்பாக சொல்லிவிட்டதால், காணொலிக்காட்சி மூலமாக திறந்து வைத்திருக்கிறேன்.

**கழக ஆட்சியில்தான் கொங்கு பகுதிக்கு இரண்டு பெண்கள் கல்லூரி!**

நான் மட்டுமல்ல, முத்தமிழறிஞர் கலைஞரும் கொங்குப் பகுதி மக்களுக்காக நிறைய பாடுபட்டார். இதே மாதிரி, செயின்ட் ஜோசப் பெண்கள் கல்லூரிக்கு அருமை தோழர் சுப்பராயன் கோரிக்கைய ஏற்று அனுமதி கொடுத்தார். அப்போது இது ஒன்றுபட்ட கோவையாக இருந்தது. எனவே, தி.மு.க ஆட்சியில்தான் இந்தப் பகுதிக்கு இரண்டு பெண்கள் கல்லூரிகள் வந்திருக்கிறது என்று பெருமையாக சொல்லிக்கொள்கிறேன்

அதுமட்டுமில்லை, திருப்பூருக்கே ஆதாரமாக விளங்குகின்ற பனியன் தொழில் செழிக்க, உற்பத்தி வரியை தள்ளுபடி செய்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். அதுவும் “சட்டமன்ற உறுப்பினர் சுப்பராயன் கேட்டபடி ரத்து செய்யப்படுகிறது” என்று சட்டமன்றத்திலேயே கலைஞர் அறிவித்தார்.

கொங்கு வேளாளர் சமுதாயத்தை பிற்படுத்தப்பட்ட சமுதாயமாக அறிவித்ததும் முத்தமிழறிஞர் கலைஞர்தான். இப்படி இந்தப் பகுதி வளரவும், இந்தப் பகுதி மக்கள் முன்னேறவும் பெண்களுடைய கல்வி முன்னேற்றத்திற்காகவும் பாடுபட்டு வருவதுதான் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி.

இந்த வாய்ப்பை எனக்கு வழங்கிய திருப்பூர் நாடாளுமன்ற உறுப்பினர் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான அருமை நண்பர் சுப்பராயன் அவர்களுக்கு இந்த் தருணத்தில் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரும்பிய பக்கம் எல்லாம் பள்ளியும், கல்லூரியும் உருவாக்கப்பட்டதால்தான், இன்றைக்கு வீடுகள்தோறும் பட்டதாரிகள் வலம் வருகிறார்கள்! இன்னொரு பக்கம், உங்களை மாதிரியான சமூக அமைப்புகளும், சேவை மனப்பான்மையோடு பள்ளி - கல்லூரிகளை தொடங்கினார்கள். அதனால்தான் கல்வி நீரோடை தடங்கல் இல்லாமல் நாடு முழுவதும் பாயுது! இந்தக் கல்வி வாய்ப்பை எல்லாம் தமிழ்நாட்டு இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முக்கியமாக பெண் பிள்ளைகள், கல்லூரிக் கல்வி - உயர்கல்விகள் என்று நிறைய படிக்கவேண்டும்!**

**பாட்டாளி வர்க்கத்துக்காக தொடர்ந்து போராடும் சுப்பராயன்!**

ஒடுக்கப்பட்ட மக்களுக்காகவும் பாட்டாளி வர்க்கத்துக்காகவும் தன்னை ஒப்படைத்துக்கொண்டு, நெடுநாட்களாக போராடி வருகிறவர்தான் நம்முடைய அருமை தோழர் சுப்பராயன் அவர்கள்!

அதேபோல், ஒருங்கிணைப்பு செய்த செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் அவர்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர் திருப்பூர் செல்வராஜ் அவர்களுக்கும் என்னுடைய மனமார்ந்த நன்றி!

ஒரு காலத்தில் கல்வி என்பது எல்லாருக்கும் எளிதாக கிடைத்துவிடவில்லை.

எட்டாக்கனியாக இருந்த கல்வி, இன்றைக்கு எல்லாருக்கும் கிடைக்கிறது என்றால், அதற்குப் பின்னால் ஏராளமான போராட்டங்கள் இருக்கிறது!

**கல்லூரி கல்வியாக விரிவு படுத்தியவர் கலைஞர்!**

நீதிக்கட்சிக் காலத்திலிருந்து சமூகநீதியை வலியுறுத்தி வருகின்ற சமூக சீர்திருத்தத் தலைவர்களால்தான் இந்த மாற்றம் சாத்தியமாச்சு!

பெருந்தலைவர் காமராசர் பள்ளிக் கல்வியை ஊக்கப்படுத்தினார்!

அதை கல்லூரிக் கல்வியாக முத்தமிழறிஞர் கலைஞர் விரிவுபடுத்தினார்!

திரும்பிய பக்கம் எல்லாம் பள்ளியும், கல்லூரியும் உருவாக்கப்பட்டதால்தான், இன்றைக்கு வீடுகள்தோறும் பட்டதாரிகள் வலம் வருகிறார்கள்!

**பெண்கள் உயர்கல்வி கற்க வேண்டும்!**

இன்னொரு பக்கம், உங்களை மாதிரியான சமூக அமைப்புகளும், சேவை மனப்பான்மையோடு பள்ளி - கல்லூரிகளை தொடங்கினார்கள். அதனால்தான் கல்வி நீரோடை தடங்கல் இல்லாமல் நாடு முழுவதும் பாயுது!

இந்தக் கல்வி வாய்ப்பை எல்லாம் தமிழ்நாட்டு இளைஞர்கள் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். முக்கியமாக பெண் பிள்ளைகள், கல்லூரிக் கல்வி - உயர்கல்விகள் என்று நிறைய படிக்கவேண்டும்!

பெண் கல்வியை ஊக்குவிப்பதற்குதான் அரசு பள்ளியில் படித்துவிட்டு, கல்லூரிக்கு வர மாணவிகளுக்கு நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் தருகிறோம்!

பெண்களுக்கு விடியல் பயணம் என்று கட்டணமில்லா பேருந்து வசதி செய்து கொடுத்திருக்கிறோம்!

என்னுடைய கனவெல்லாம், தமிழ்நாட்டு மாணவர்களும் - மாணவிகளும் உலகம் எல்லாம் சென்று சாதிக்கவேண்டும்! நீங்கள் சாதிப்பதை பார்த்து நான் மகிழ்ச்சி அடையவேண்டும்!

பெண்களை வீட்டுக்குள் முடக்குகின்ற பழைய காலம் எல்லாம் மலையேறி சென்றுவிட்டது! பெண்கள் உலகை ஆளுகின்ற காலம் வந்து விட்டது!

வாங்க... உலகம் உங்களுக்காக காத்திருக்கிறது!

படித்து முன்னேறி வாங்க... வரலாற்றில் உங்களுக்கான இடம் காத்திருக்கிறது!

இதற்கெல்லாம், அரசு மாதிரியே சமூகநல அமைப்புகளும், கல்வி மருத்துவம் போன்றவற்றில் சேவையாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். முடிந்தவரைக்கும் இலவசமாக... இல்லையென்றால், குறைந்த கட்டணத்தில் அந்த சேவையை வழங்கவேண்டும்!

அதுமாதிரியான சேவையில் ஈடுபடுகின்ற கொங்கு வேளாளர் அறக்கட்டளை மேலும் மேலும் வளர வேண்டும் என்று நான் மனதார வாழ்த்துகிறேன்.

தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் படிக்கின்ற மாணவிகள் எதிர்காலத்தில் மிகச் சிறந்தவர்களாக எல்லா உயர்வையும் அடைய என்னுடைய வாழ்த்துகள்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று முன்தினம் (28.11.2023) செங்கல்பட்டு மாவட்டம், குரோம்பேட்டை யில் உள்ள ரேலா மருத்துவமனையில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்துடன் ஒருங்கிணைந்த பிரதம மந்திரி மக்கள் ஆரோக்ய திட்ட பயனாளிகளுக்கு காப்பீட்டு அட்டையினை வழங்கினார். இந்நிகழ்வில் தாம்பரம் மாநகராட்சி மேயர் திருமதி.கே.வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அரசு முதன்மைச் செயலாளர் ககன்தீப் சிங் பேடி, தமிழ்நாடு சுகாதார அமைப்பு திட்ட இயக்குநர் ம.கோவிந்தராவ், ரேலா மருத்துவமனை இயக்குனர் மரு.முகமது ரேலா, ரேலா மருத்துவமனை தலைமை நிர்வாக அலுவலர் மரு. இளங்குமரன் கலியமூர்த்தி, இணை இயக்குநர் மரு.ரவிபாபு மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.



தி.மு.க. இளைஞரணி செயலாளரும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை சிந்தாதிரிப்பேட்டை கலவை தெருவில் மேற்கு மாவட்டம் சேப்பாக்கம் பகுதி 62 ‘அ’ வட்ட தி.மு.க சார்பில் பொது மக்களுக்கு நலதிட்ட உதவிகளை பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு வழங்கினார். உடன் திமுக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன், மண்டல குழு தலைவரும் சேப்பாக்கம் பகுதி செயலாளர் மதன் மோகன், வட்டச் செயலாளர் மகேஷ். மாமன்ற உறுப்பினர் ஜெகதீசன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### அரசுக் கொறடா கோவி.செழியன் முன்னிலை! மயிலாடுதுறை மாவட்டத்தில்

### பள்ளி, கல்லூரிகளில் சட்டமன்ற நாயகர் கலைஞர் கருத்தரங்கம்!

# மாணவ - மாணவிகளுக்கு அமைச்சர் சிவ.வீ.மெய்ய நாதன் பரிசு பாராட்டுச் சான்றிதழ் வழங்கினார்!

### நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., செ. ராமலிங்கம் எம்.பி ! எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

நாகை நவ.30-

மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அரசு மேல் நிலைப்பள்ளி, பொறையார் டி.பி.எம்.எல். கல்லூரி, மயிலாடுநாகைதுறை ஏ.வி.சி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “சட்டமன்ற நாயகர் கலைஞர்” கருத்தரங்கில் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

‘மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அரசு மேல் நிலைப்பள்ளி, பொறையார் டி.பி.எம்.எல் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி.கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “சட்டமன்ற நாயகர் கலைஞர்”கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

**கலைஞர் நூற்றாண்டு விழா!**

மயிலாடுதுறை மாவட்டம் ஆக்கூர் அரசு மேல் நிலைப்பள்ளி, பொறையார் டி.பி.எம்.எல் கல்லூரி, மயிலாடுதுறை ஏ.வி.சி. கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆகிய இடங்களில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு “சட்டமன்ற நாயகர் கலைஞர்”கருத்தரங்கம் நடைபெற்றது கருத்தரங்கிற்கு மாவட்ட ஆட்சி வரும் 01.12.2023 வெள்ளிக்கிழமை மாலை 04.00 மணி அளவில் ஏ.பி. மகாபாரதி தலைமை தாங்கினார். அரசு தலைமை கொறடா முனைவர் கோவி.செழியன், மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ ராமலிங்கம் சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம்.பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் .எஸ்.ராஜகுமார் ஆகியோர் முன்னிலை யத்தனர். கருத்தரங்கில் சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் .சிவ.வீ.மெய்யநாதன் கலந்து கொண்டு கருத்தரங்கில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகளுக்கு பரிசு ‘பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சிகளில்சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் கி சத்தியசீலன்: . ஜெக வீரபாண்டியன் எம் எம் சித்திக். .”தமிழ்நாடு சட்டமன்ற கூடுதல் செயலர் திரு.ரவிசந்திரன், தமிழ்நாடு சட்டமன்ற இணையச் செயலர் ஜெயகணேசன், இணை இயக்குநர் முனைவர்.தனராஜன், முதன்மை கல்வி அலுவலர் அம்பிகாபதி, மயிலாடுதுறை வருவாய் கோட்டாட்சியர்வ. யுரேகா, மாவட்ட ஊராட்சிக்குழு தலைவர். உமாமகேஸ்வரி சங்கர், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜிஎன் ரவி, முத்து மகேந்திரன், மாவட்ட கழக அவைத் தலைவர் கே ஜி சீனிவாசன், துணை செயலாளர் மு. ஞானவேலன், எஸ் செல்வமணி, பொருளாளர் கண்ணகி பன்னீர், ஒன்றிய கழக செயலாளர்கள் செல்ல சேது ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், எம்.அப்துல் மாலிக், அமுத விஜயரங்கன், பஞ்ச் குமார், ஏ.ஜி.ஜே. பிரபாகரன், என். இளையபெருமாள், ஞான இமய நாதன், முருகமணி, முகலூர் எம் மூர்த்தி, மங்கை எம். சங்கர், ஏ.ஆர். ராஜா, கு.வைத்திய நாதன், நகரக் கழகச் செயலாளர்கள் குண்டாமணி (எ) என்.செல்வராஜ், ம.சுப்பராயன், பொதுக்குழு உறுப்பினர்கள் ஹர்ஷத், எஸ்.சாமிநாதன், ஒன்றியக் குழு தலைவர்கள் ஜெயப்பிரகாஷ், காமாட்சி மூர்த்தி, மகேந்திரன், சீர்காழி நகர் மன்றத் தலைவர் துர்கா பரமேஸ்வரி ராஜசேகர், தரங்கம்பாடி பேரூராட்சித் தலைவர் சுகுணாசங்கரி குமர வேல், மாவட்ட சார்ப அணி அமைப்பாளர்கள் வி.எஸ் என்.செந்தில், முத்து குபேந்திரன், செல்வராஜ், தீபா மனோகரன்,மயிலாடுதுறை ஒன்றிய குழு தலைவர் திருமதி.காமாட்சி மூர்த்தி, தரங்கம்பாடி செம்பனார்கோவில் ஒன்றிய குழு துணைத் தலைவர் த. பாஸ்கரன், ஒன்றிய குழு உறுப்பினர் வே.சாந்தி,

ஆக்கூர் ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரமோகன் மயிலாடுதுறை நகர துணைச் செயலாளர் ஆர். கே.சங்கர் உள்ளிட்ட ஏராள மான கலந்து கொண்டனர். கருத்தரங்கில் சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசு மற்றும் பாராட் சான்றிதழ் வழங்கி பேசுகையில் சட்டமன்றம் என்பது அதிகாரம் வாய்ந்த இடம் இல்லை. சாமானிய மக்களுக்கான பணிகளை நிறை வேற்றக்கூடிய இடம். அதை செயல்படுத்திக் காட்டியவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள். இந்தியாவில் இருக்கக்கூடிய சிறந்த மாநிலம் தமிழ்நாடு என்ற இடத்தை பெற்றிருக்கின்றோம். உங்களுக்கு சமச்சீர் கல்வியை தந்தவர் கலைஞர் அவர்கள். வசதியானவர்களுக்கு ஒரு கல்வி, ஏழைக்கு ஒரு கல்வி என்பதனை மாற்றி அனைவருக்கும் சமமான கல்வியை தந்தவர். இன்னும் ஒரு 100 ஆண்டுகளுக்கு கலைஞர் அவர்களின் புகழை எடுத்து செல்லக்கூடிய அடுத்த இலக்கை நாம் பெற்றுவிட்டோம். மாணவ செல்வங்களாகிய நீங்களும் வெற்றியாளர்கள் தான். கலைஞர் அவர்களின் செயல்பாடுகளை படித்தாலே நீங்களும் எதிர்காலத்தில் வெற்றியாளர்களாக, மிகப்பெரிய சாதனையாளர்களாக உருவாக முடியும். நாம் எப்படி இந்த இடத்திற்கு வந்தோம் என்று சிந்திக்க வேண்டும். இன்றைக்கு தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய படித்த இளைஞர்கள் உயர் மேலை நாடுகளில், உலகில் இருக்கக்கூடிய மொத்த நாடுகளில் 100 இடங்களில் நம் தமிழர்கள் உயர் பதவியில் இருக்கின்றனர். அதற்கு வித்திட்டவர் நம் கலைஞர் அவர்கள். நாம் ஒவ்வொருவரும் படித்து முடித்து வெளிநாடுகளில் விமானம் மூலம் செல்லும் தருவாயில் நம் தாய், தந்தையருக்கு நன்றி சொல்வோம். அது போல், அடுத்து நாம் நன்றி சொல்லக்கூடியவர் நம் கலைஞர் அவர்களுக்கு தான். அப்படி, அடித்தட்டு மக்களை உயர்த்திக் காட்டியவர் நம் கலைஞர் அவர்கள். கலைஞர் அவர்களின் பெருமைகளை எடுத்துச் செல்கின்ற வகையில் நமது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் செயல்பட்டு கொண்டிருக்கின்றார். பள்ளிக்கல்வித்துறைக்கு இன்றைக்கு அதிக நிதி ஒதுக்கி ரூ.40 ஆயிரம் கோடி வழங்கி, நம் பிள்ளைகளை படிக்க வைக்க வேண்டும் என்ற நோக்கில் இன்றைக்கு பல்வேறு திட்டங்களை தந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். 7.5 சதவீதம் அரசு பள்ளியில் படித்த மாணவர்களுக்கு இட ஒதுக்கீடு தந்து மருத்துவ படிப்பில் சேருவதற்காக வாய்ப்பளித்தவர். 450க்கும் மேற்பட்டவர்கள் இந்த மருத்துவ படிப்பில் சேர்ந்துள்ளனர். வேளாண் கல்லூரியாகட்டும், பொறியியல் துறை ஆகட்டும், இப்படி அனைத்து உயர்படிப்பாகட்டும் அனைத்திற்கும் 7.5 சதவீத இடஒதுக்கீட்டை கொண்டு வந்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். ஏழை, எளிய மக்கள் அவர்கள் உயர்கல்வி படிப்பதற்கு கட்டணமில்லா உதவிகளை செய்தவர் நம் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். எதிர்காலத்தில் நீங்கள் சாதனையாளர்களாக, வெற்றி வீரர்களாக களம் காண்பதற்கு இந்த மேடை உங்களுக்கு உதவும் என சுற்றுச் சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் பேசினார்.

### வல்லம் ஒன்றியம் துடுப்பாக்கம் ஊராட்சியில்

# புனரமைக்கப்பட்ட குளம்: அமைச்சர் மஸ்தான் திறந்து வைத்தார்!

செஞ்சி, நவ. 30 -

விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் துடுப்பாக்கம் ஊராட்சியில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு பிறந்த நாள் விழாவை முன்னிட்டு தமிழ்நாடு முதலமைச்சரின் பசுமை திட்டத்தின் கீழ் புதிதாக கட்டப்பட்ட குளம் திறப்பு விழா நிகழ்ச்சி மற்றும் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு வல்லம் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் முன்னிலை வகித்தனர்.

துடுப்பாக்கம் ஊராட்சி மன்ற தலைவர் வழக்கறிஞர் மழைமேனி பாண்டியன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்ற துணைத் தலைவர் மாரியம்மாள் விஸ்வநாதன் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில்சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு புதிதாககட்டப்பட்ட குளத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் குளத்தின் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரை ஆற்றினார்.

நிகழ்ச்சியில் பேசிய அமைச்சர் செஞ்சி மஸ்தான்:

ஏழை எளிய மக்கள் பயன்பெறுகின்ற திட்டங்களை முதலமைச்சர் .அறிவித்ததின் பேரில் குடும்பத் தலைவிக்கு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தின் கீழ் மாதம் 1000 ரூபாய் வழங்கும் திட்டத்தை அறிவித்ததன் பேரில் இன்று ஒரு கோடியே 17 லட்சம் பேர் பயன்பெற்று வருகின்றனர்.

தமிழ்நாட்டில் உள்ள வனங்களையும், நீர் நிலைகளையும் காப்பாற்ற வேண்டும் என்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கொள்கை வடிவிலான அரசு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார் .

அந்த வகையில் 33 சதவீதம் வனங்களை காப்பாற்றும் வகையில் தமிழ்நாடு முழுவதும் மரக்கன்றுகள் நட வேண்டும் என்று அரசு திட்டமாக செயல்பட்டு வருவதாக அமைச்சர் செஞ்சி மஸ்தான் தெரிவித்தார்.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை ,துரை, இளம்வழுதி, மாவட்ட கவுன்சிலர்கள் அன்பு செழியன், சசிகலா மோகனசுந்தரம்,ஒன்றிய கவுன்சிலர்கள் விஜயா கண்ணன் சிலம்பரசி பாண்டிய ராஜன் ,பக்தவச்சலம், முருகன்,மாவட்ட அமைப்பு சாரா தொழிலாளர் அணி அமைப்பாளர் தமிழரசன், ஊராட்சி மன்ற தலைவர்கள் கோவிந்தன், காமாட்சி சத்தியமூர்த்தி, ஒன்றிய நிர்வாகிகள் ஏழுமலை, ஏ.கண்ணன், லட்சுமி லட்சுமணன், ராமதாஸ், கதிரவன், மகளிர் அணி துணை அமைப்பாளர் பரிதா அன்வர்,பொறியாளர் அணி துணை அமைப்பாளர்மலையரசன்,ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் விமலா, செல்வம், தயாளம், மணி, குப்பம்மாள், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.ஊராட்சி செயலாளர் பூபால் நன்றி கூறினார்.

### அமைச்சர் டி.ஆர்.பி. ராஜா தலைமையில்

# டி.என்.பி.எல். தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் கையெழுத்து!

### மு.சண்முகம் எம்.பி., தொழிற்சங்க நிர்வாகிகள் பங்கேற்பு!

சென்னை, நவ. 30 -

தமிழக அரசின் பொதுத் துறை நிறுவனங்களில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வரும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின். 10-வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் (2022-2026) 27.11.2023 அன்று, தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையிலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.சாய்குமார் முன்னிலையிலும் மற்றும் எம்.சண்முகம், பாராளுமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, ஆர்.கமலக்கண்ணன், செயலாளர், அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் டி.கே.ரங்கராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ ஆலோசகர், டி.என்.பி.எல். தொழிலாளர் சங்கம் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி மூன்று தொழிற்சங்கங்களும் ஒருமித்த கருத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.

வரலாற்று சிறப்பு மிக்க ஊதிய உயர்வு ஒப்பந்தம் சிறப்பம்சங்கள் வருமாறு:-

1. அடிப்படைச் சம்பளத்தில் 30 சதவீதம் உயர்த்தி, திருத்தியமைக்கப்பட்ட ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது.

2. வருடாந்திர ஊதிய உயர்வு, அடிப்படைச் சம்பளத்தில் 3 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது.

3. மாறும் அகவிலைப்படி 0.29 சதவீதமாகவும், அதன் உச்சவரம்பு ரூ.63/ ஆக உயர்த்தப்பட்டது.

4. 2015-ஆம் ஆண்டில் பணியில் சேர்ந்த தொழிலாளர்களுக்கும் மாறும் அகவிலைப்படி(FDA) வழங்கப்படும்.

5. வீட்டு வாடகைப்படி, ஆலைக் குடியிருப்பில் உள்ள பணியாளர்களுக்கு 12 சதவீதமாகவும், ஆலைக் குடியிருப்பில் இல்லாத பணியாளர்களுக்கு 15 சதவீதமாகவும் நிர்ணயம் செய்யப்பட்டது.

6. அனைத்து (கொடுப்பனவுகள்) அலவன்ஸ்களிலும் சென்ற 9 ஒப்பந்தங்களை காட்டிலும் நல்ல உயர்வு நிர்ணயிக்கப்பட்டது.

7. தொழிலாளர்களுக்கு 100% ஈடுசெய்யப்படும் தீவிர நோய்களின் பட்டியலில் கல்லீரல் மற்றும் கணைய நோய்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

8. பெண் ஊழியர்களுக்கு கொடுக்கப்படும் பேறு கால விடுப்பு, LTC விடுமுறை கணக்கிடுதலுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

9. 33 வருடம் நிறைவு செய்தவர்களுக்கு சர்வீஸ் வெயிட்டேஜ் கொடுக்கப்படும்.

10. பணி உயர்வில் 4,5 மற்றும் 6வது கிரேடுகளில் 3 ஆண்டுகள் தளர்வு, கொடுக்க நிர்ணயிக்கப்பட்டது.

11. பட்டம் படித்து வேலையில் சேர்ந்து, 20 ஆண்டுகள் பணி செய்தவர்களுக்கு 1 படிநிலை பணி உயர்வு கொடுக்க நிர்ணயம் செய்யப்பட்டது.

12. ஆலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பணிக் காலத்தில் இறக்க நேரிட்டால் (விபத்து மற்றும் இயற்கை மரணம்) அவர்களின் வாரிசுகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கப்படும்.

தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் அவர்களின் சிறப்புரையில், ஒப்பந்த தொழிலாளர்களின் பல ஆண்டு கால கோரிக்கையான, ஒப்பந்த தொழிலாளர்களை பணி நிரந்தரப்படுத்துதல் என்பது தமிழக அரசின் முதல்வரின் ஆணையின்படி, 600 தொழிலாளர்களுக்கு நிரந்தரப் பணி ஆணை வழங்கப்பட்டது என்று குறிப்பிட்டார். மேலும், சுமார் 4000 ஒப்பந்த தொழிலாளர்களுக்கு மதிய உணவு வழங்கும் அறிவிப்பும் வெளியிடப்பட்டது.

இந்நிகழ்வில், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் செயல் இயக்குநர் (இயக்கம்)பொறுப்பு ஆர். சீனிவாசன், முதன்மை பொது மேலாளர்(நிதி) திருமதி.சத்யா ஆனந்த், மனித வளத்துறை பொது மேலாளர் கா.கலைச்செல்வன் மற்றும் மனிதவளத்துறை & நிதித்துறையைச் சார்ந்த அதிகாரிகள் உடனிருந்தனர்.

## மாதவரம் 30-வது வட்டத்தில் நல உதவிகள்!

சென்னை, நவ. 30 -

கழக இளைஞர் அணி செயலாளர் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் தெற்கு பகுதி 30அ வட்டம் சார்பில் நேற்று கழகக் கொடியேற்றி இனிப்பு வழங்கி பகல் 12 மணி அளவில் மனநலம் குன்றிய சமர்ப்பணா இல்ல மாணவர்களுக்கு பகல் உணவு ஒரு வாரத்திற்கு தேவையான அரிசி, பால், முட்டை, ரொட்டி, காய்கறிகள் மளிகை பொருட்களை மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. வழங்கினார்.

# இராணிப்பேட்டை மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் ஆர்.காந்தி அறிவிப்பு!



இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. செயற்குழுக் கூட்டம் நாளை (01.12.2023-வெள்ளிக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி தலைமையில் இராணிப்பேட்டை மாவட்டக் கழக அலுவலகம் (பாரதி நகர், சிப்காட்டில்) கூட்டம் நடைபெறும்.

எனவே மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள், நகர, ஒன்றியச் செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், பேரூர் செயலாளர்கள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், உள்ளாட்சி நிர்வாகிகள், சிறப்பு அழைப்பாளர்கள் தவறாது பங்கேற்க கோருகிறேன்.

**பொருள்:**

1.டிசம்பர் 17 அன்று சேலத்தில் நடைபெறும் தி.மு.க. இளைஞர் அணி மாநில மாநாடு.

2.BLA2, BLC உறுப்பினர்கள் வாக்காளர்களின் விவரங்களை சேகரித்தல்.

3.கழக ஆக்கப் பணிகள் குறித்து.

**அமைச்சர் ஆர்.காந்தி.**
மாவட்டச் செயலாளர்
இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க.



தமிழ்நாடு அரசின் பொதுத்துறை நிறுவனங்களில் மிகவும் சிறப்பாக செயல்பட்டு வரும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின். 10–வது தொழிலாளர் ஊதிய உயர்வு ஒப்பந்தம் (2022–2026) 27.11.2023 அன்று, தொழில்துறை, முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வணிகம் அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா தலைமையிலும், தமிழ்நாடு செய்தித்தாள் காகித நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் முனைவர் எம்.சாய்குமார் முன்னிலையிலும் மற்றும் எம்.சண்முகம், பாராளுமன்ற உறுப்பினர், பொதுச் செயலாளர், தொழிலாளர் முன்னேற்ற சங்கப் பேரவை, ஆர்.கமலக்கண்ணன், செயலாளர், அண்ணா தொழிற் சங்க பேரவை மற்றும் டி.கே.ரங்கராஜன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர், கௌரவ ஆலோசகர், டி.என்.பி.எல். தொழிலாளர் சங்கம் ஆகியோர்களின் வழிகாட்டுதல்களின்படி மூன்று தொழிற்சங்கங்களும் ஒருமித்த கருத்துடன் ஊதிய உயர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) முகாம் அலுவலகத்தில், தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், சமூக நலன் – மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், முதன்மைச் செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தலைவர்/ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத்துறை இயக்குநர் கமல் கிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நுற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் திருக்கோவில் கலையரங்கத்தில், கலைப்பண்பாட்டு இயக்ககத்தின், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் 100 கலைஞர்கள் பங்குபெற்ற கலைத்திருவிழாவை நேற்று முன்தினம் (28.11.2023) தொடங்கி வைத்து, சிறந்த கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கினார். அருகில் தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய தலைவர் வாகை சந்திரசேகர், திண்டுக்கல் மாநகராட்சி மேயர் திருமதி இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராஜப்பா உட்பட பலர் உள்ளனர்.

### திருப்பூரில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள

# தீரன் சின்னமலை மகளிர் கலை - அறிவியல் கல்லூரி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.30-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்து, தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) காணொலிக் காட்சி வாயிலாக திருப்பூர் மாவட்டம், வஞ்சிபாளையம், அவிநாசிமங்கலம் சாலையில் கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் கட்டப்பட்டுள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியை திறந்து வைத்து, புதிதாக கட்டப்படவுள்ள தீரன் சின்னமலை சி.பி. எஸ்.இ. பள்ளிக்கு அடிக்கல் நாட்டினார்.

**தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

கொங்கு வேளாளர் அறக்கட்டளை சார்பில் 15 கோடி ரூபாய் செலவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன், தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டப்பட்டுள்ளது. இக்கல்லூரியில் பி.காம், பி.காம் (CA), பி.பி.ஏ., பி. எஸ்.சி. கணினி அறிவியல் (செயற்கை நுண்ணறிவு), பி.எஸ்.சி. (ஆடை வடிவமைப்பு மற்றும் ஃபேஷன்) ஆகிய பட்டப் படிப்புகள் பயிற்றுவிக்கப்படும். மேலும், இக்கல்லூரி, கணினி ஆய்வகம், ஆடை வடிவமைப்பு ஆய்வகம், கருத்தரங்குக் கூடம், ஸ்மார்ட் கிளாஸ் வசதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டமைப்பட்டுள்ளது.

**தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளி**

தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி வளாகத்தில் 35,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் இரண்டு தளங்களுடன் தீரன் சின்னமலை சி.பி.எஸ்.இ. பள்ளி கட்டப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், தலைமைச் செயலகத்திலிருந்து காணொலிக் காட்சி வாயிலாக உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் க. பொன்முடி மற்றும் உயர் கல்வித்துறை முதன்மைச் செயலாளர் ஏ.கார்த்திக், ஆகியோரும், திருப்பூர் மாவட்டத்தில் வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ. சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர் கே. சுப்பராயன், சட்டமன்ற உறுப்பினர் க. செல்வராஜ், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் தா. கிறிஸ்துராஜ், திருப்பூர் மாநகராட்சி மேயர் ந.தினேஷ் குமார், துணை மேயர் ஆர். பாலசுப்பிரமணியம், திருப்பூர் மாநகராட்சி ஆணையர் பவன் குமார் ஜி. கிரியப்பனவர், கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் தலைவர் பெஸ்ட் எஸ்.ராமசாமி, அறக்கட்டளையின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### பிற்படுத்தப்பட்ட, மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ - மாணவியருக்காக

# ரூ.12.54 கோடியில் கட்டப்பட்ட 5 விடுதிக் கட்டடங்கள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

சென்னை, நவ.30-

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்காக ரூ.12.54 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 5 விடுதிக் கட்டடங்கள் மற்றும் ரூ. 6.52 கோடி செலவில் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நிறைவுற்ற உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை சார்பில் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களையும் மற்றும் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார்.

மக்கள் தொகையில் பெரும் பகுதியினரான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் வகுப்பினரின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார நிலைகளை உயர்த்துவதை சிறப்பு நோக்கமாகக் கொண்டு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 1969 ஆம் ஆண்டு பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககத்தையும், 1989ஆம் ஆண்டு மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல இயக்ககத்தையும் ஏற்படுத்தினார். பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினரின் கல்வி வளர்ச்சியில் கவனம் செலுத்தி, அம் மாணவ, மாணவியர் இடைநிற்றல் இன்றி கல்வி கற்றிட கல்வி உதவித் தொகை வழங்குதல், புதிய பள்ளி மற்றும் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் போன்ற பல்வேறு திட்டங்களை இவ்வரசு செயல்படுத்தி வருகிறது. இதனால் சமூகநீதி கொள்கைகளை நிறுவுவதிலும், அதனை செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு நாட்டிற்கே முன் மாதிரி மாநிலமாக திகழ்கிறது.

**பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான விடுதிக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

நாமக்கல் மாவட்டம், குமாரப்பாளையத்தில் 100 மாணவர் தங்கும் வசதியுடன், 2 கோடியே 16 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்; பெரம்பலூர் மாவட்டம், வேப்பூரில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன்,

2 கோடியே 77 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; புதுக்கோட்டை மாவட்டம், மருதன்கோன் விடுதியில் 100 மாணவர்கள் தங்கும் வசதியுடன், 2 கோடியே 12 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவர் விடுதிக் கட்டடம்; திருவாரூர் மாவட்டம், நன்னிலத்தில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 3 கோடியே 34 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணியில் 100 மாணவியர் தங்கும் வசதியுடன், 2 கோடியே 15 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவியர் விடுதிக் கட்டடம்; என மொத்தம் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 5 விடுதிக் கட்டடங்களை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

**கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் நிறைவுற்ற உட்கட்டமைப்பு பணிகள் மற்றும் கூடுதல் வகுப்பறைக் கட்டடங்களை திறந்து வைத்தல்**

மதுரை மாவட்டம் கோவிலாங்குளம் மற்றும் திண்டுக்கல் மாவட்டம் - தெப்பத்துப்பட்டி ஆகிய இடங்க ளளளிலுள்ள 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் தேசிய விவசாய மற்றும் கிராமப்புற வளர்ச்சி வங்கி (நபார்ட்) நிதி உதவியுடன் 6 கோடியே 51 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் செலவில் அறிவியல் ஆய்வகங்கள், கூடுதல் கழிப்பறைகள், ஆழ்துளைக் கிணறுகள் மற்றும் கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் ஆகிய நிறைவுற்ற உட்கட்டமைப்புப் பணிகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அணில் மேஷ்ராம், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக இளைஞரணி செயலாளர் – இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நெல்லை கிழக்கு மாவட்டம் பணகுடி மனோ கல்லூரியிலிருந்து 3 கிலோமீட்டர் தூரம் நடந்த மாரத்தான் போட்டியை நெல்லை மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாபு கொடியசைத்து துவக்கி வைத்தார். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ஜெகதீஷ், ஜோசப்பெல்சி,ராஜன், ஆரோக்கிய எட்வின்,பணகுடி நகர செயலாளர் தமிழ்வாணன் உள்பட கழகத்தினர் பலர் கலந்து கொண்டனர். போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 5000 ம்,2வது பரிசு ரூபாய் 2000–ம்,3வது பரிசு 1000 ம் மற்றும் கேடயங்கள் சான்றிதழ்கள் ஆகியவற்றை மாவட்ட மாணவரணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வழங்கினார்.

### முத்தமிழறிஞர் கலைஞரைப் போன்றே இன்று

# கலைகளையும், கலைஞர்களையும் பாதுகாத்து வருகிறார் நம் முதல்வர்!

## திண்டுக்கலில் கலைத் திருவிழாவை தொடங்கி வைத்து ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு!

திண்டுக்கல், நவ. 30 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, திண்டுக்கல் கோட்டை மாரியம்மன் திருக்கோவில் கலையரங்கத்தில், கலைப் பண்பாட்டு இயக்ககத்தின், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் சார்பில் 100 கலைஞர்கள் பங்குபெற்ற கலைத்திருவிழாவை தொடங்கி வைத்து, சிறந்த கலைஞர்களுக்கு பரிசுகள் வழங்கினார். தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மற்றும் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நலவாரிய தலைவர் வாகை சந்திரசேகர் முன்னிலை வகித்தார்.

விழாவில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ. பெரியசாமி பேசியதாவது:

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், பல்வேறு கலை சார்ந்த கலைஞர்களையும், கலைகளையும் பாதுகாத்து, அங்கீகரிக்கும் வகையில் அரசு சார்பில் பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்படுத்தினார். கலைஞர்களின் கஷ்டங்களை அறிந்து அவற்றை தீர்க்க அரசு சார்பில் நடவடிக்கை மேற்கொண்டு, கலைஞர்களை காப்பாற்றினார்.

அந்தவழியில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், தந்தையைப் போல் செயல்பட்டு, கலைகளையும், கலைஞர்களையும் பாதுகாத்து வருகிறார். கொரோனா காலத்தில் கலைநிகழ்ச்சிகள் நடத்த முடியாமல் கலைஞர்கள் வாழ்வாதாரத்தை இழந்து தவித்தபோது, அவர்களுக்கு நிதியுதவிகள் வழங்கி, அவர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாத்தவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். கலைஞர்களுக்கு புதிய அங்கீகாரம் வழங்கும் வகையில், கலைஞர் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு பல்வேறு கலை திருவிழாக்கள் நடத்த உத்தர விட்ட தன்பேரில், கலைதிருவிழாக்கள் நடத்தப்பட்டு வருகிறது.

நாடக கலைஞர்களுக்கு பின்புலமாக, துணையாக, உறுதியாக, உதவியாக செயல்பட்டு வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என்றென்றும் ஆதரவுடன் இருக்க வேண்டும், என ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி, பேசினார்.

விழாவில், கரகாட்டம், மயிலாட்டம், காளையாட்டம், ஒயிலாட்டம், சிலம்பாட்டம், பெரிய மேளம், நையாண்டி மேளம், தப்பாட்டம், கிராமிய தெம்மாங்கு பாடல்கள், சத்தியவான் சாவித்திரி இசை நாடகம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

விழாவில், மாவட்ட துணை செயலாளர் நாகராஜன், பொருளாளர் சத்திய மூர்த்தி திண்டுக்கல் மாநகராட்சி மேயர் இளமதி ஜோதிபிரகாஷ், துணை மேயர் ச.ராஜப்பா, தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் உறுப்பினர் - செயலாளர் விஜயா தாயன்பன், தமிழ்நாடு இசை நாடகக் கலைஞர்கள் மாநிலப்பேரவை தலைவர் எம்.ஆர். எம்.பாலசுப்பிரமணியன், முத்தமிழ் நாடக நடிகர் சங்கத் தலைவர் செல்ல முத்தையா உட்பட பலர் கலந்துகொண்டனர்.

# இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழக செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், எம்.எல்.ஏ.அறிவிப்பு!

இராமநாதபுரம், நவ.30-

இராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் காதர் பாட்சா முத்துராமலிங்கம் அறிக்கை வருமாறு:

இராமநாதபுரம் மாவட்டக் கழக செயற்குழுகூட்டம் இன்று (30.11.2023 - வியாழக்கிழமை) மாலை 04.00 மணி அளவில் இராமநாதபுரம், பாரதி நகர், பீமாஸ் வைஸ்ராய் மகாலில், மாவட்ட அவைத் தலைவர் வ.சத்தியமூர்த்தி, தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை மற்றும் கதர் வாரியத் துறை அமைச்சர், கழக தேர்தல் பணிக் குழு தலைவர் ஆர்.எஸ்.இராஜகண்ணப்பன், கலந்து கொள்கிறார். ஆகவே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் ஆகியோர் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



**பொருள் :**

1. 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெறும் கழக இளைஞர் அணி இரண்டாவது மாநில மாநாடு,

2. கழக இளைஞரணி செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்ளும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்குதல்.

3. மாவட்ட இளைஞர் அணி செயல்வீரர் கூட்டம்.

4. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# தேனி தெற்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. அறிக்கை!

தேனி, நவ.30-

தேனி தெற்கு மாவட்டச் செயலாளர் கம்பம் நா. இராமகிருஷ்ணன் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தேனி தெற்கு மாவட்டக் கழக கூட்டம் நாளை (01.12.2023 - வெள்ளிக்கிழமை), காலை 10.00 மணிக்கு சின்னமனூர் நகர்,ஓடைப்பட்டி ரோட்டில் உள்ள கவிப்பிரியா மஹாலில் மாவட்ட கழக அவைத் தலைவர் த.மனோகரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்திற்கு மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கிளைக்கழகச் செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், இளைஞர் அணி உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், சார்பு அணிகளின் தலைவர்கள் மற்றும் துணைத்தலைவர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், தொண்டர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.



பொருள்: 1.26.11.2023ம் நாள் கழக தலைவர் தளபதியார் அவர்கள் தலைமையில் சென்னையில் நடைபெற்ற மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்ட முடிவுகள் குறித்து.

2.டிசம்பர் 17ம் தேதி சேலம் மாநகரில் இளைஞர் அணிசார்பில் நடைபெறவுள்ள இரண்டாவதுமாநில இளைஞர் அணி மாநாடு குறித்து.

3கழகஆக்கப்பணிகள்.

இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.



செங்கல்பட்டு மாவட்டம், மறைமலைநகர் நகராட்சி மைதானத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு வருவாய் மற்றும் பேரிடர் நலத்துறையின் சார்பில் மாபெரும் பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் 4497 பயனாளிகளுக்கு ரூ.130.11 கோடி மதிப்பிலான வீட்டுமனை பட்டாக்களை குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில் வருவாய்த்துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் வழங்கினார். உடன் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை செயலாளர் வே.ராஜாராமன், மாவட்ட ஆட்சித் தலைவர் ஆ.ர.ராகுல் நாத், நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.ஆர்.ராஜா, இ.கருணாநிதி, அரவிந்த ரமேஷ், எஸ்.எஸ் பாலாஜி, மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் காமராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் சுபா நந்தினி, நகர மன்ற தலைவர்கள் ஜெ.சண்முகம், எம்.கே.டி. கார்த்திக், தேன்மொழி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் செம்பருத்தி துர்கேஷ், ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன், உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு நடைபெற்ற கவிதை மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டியை மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன், மாநில துணைச் செயலாளரும், மண்டலப் பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் ஆகியோர் துவக்கி வைத்தனர். இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் பார்.இளங்கோவன், நக்கீரன், நகரச் செயலாளர்கள் ராணா ஆனந்த், பூபதி, நகர் மன்றத் தலைவர் கலாநிதி, மாவட்ட அமைப்பாளர் இரா.குமரவேல் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் மற்றும் புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் புதிய கட்டிடப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டு விழா, 4 முடிவுற்ற திட்டப் பணிகள் திறப்பு விழாவில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### இரா.குமரவேல் சிறப்புரை! நாமக்கல் கிழக்கு மாவட்ட

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாணவர்களுக்கான போட்டி!

## செ.எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்புரை!

நாமக்கல், நவ. 30 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டை முன்னிட்டு நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை சார்பில் மாவட்ட அளவிலான பள்ளி மாணவ / மாணவியர்களுக்கு கவிதை மற்றும் திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டி நாமக்கல் உழவர் சந்தை எதிரில் உள்ள கவின் கிஷோர் திருமண மண்டபத்தில் நடைபெற்றது.

நாமக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை தலைவர் கே.அய்யாவு வரவேற்றார். துணை அமைப்பாளர்கள் டி.அருள், எஸ்.பூபாலன், சி.ஜெயக்குமார். செ.ஸ்டாலின் தமிழ்நாடு நாட்டுப்புறக் கலைஞர்கள் நல வாரிய நிர்வாக குழு உறுப்பினர் வே.பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் இரா.குமரவேல் தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளரும், மண்டலப் பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார். நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் விழாவினை துவக்கி வைத்தார்.

கவிதை ஒப்புவித்தல் போட்டியில் 150 பேரும், திரைப்பட வசனங்கள் ஒப்புவித்தல் போட்டியில் 120 பேரும் பங்கேற்றனர். இதில் முதல் பரிசு ராசிபுரம் ஆர் சி ஸ்கூல் பி.நசீபா, இரண்டாம் பரிசு தேங்கல் பாளையம் விக்னேஸ்வரன், மூன்றாம் பரிசு ஒரு வந்தூர் அரசு பள்ளி எல் தர்ஷினி,

மற்றும் ஸ்ரீமதி, தரணி, பனிமலர், கிஷோர் குமார், சஜியா ஸ்ரீ, ஸ்ரீ வகனி, பிரியதர் ஷினி, ஸ்மைலி சுபா, தனபிருந்தா தேவி, மதுமிதா ஆகியோர் ஆறுதல் பரிசாக பெற்றனர். வெற்றி பெற்ற மாணவ, மாணவிகளுக்கு சான்றிதழ் மற்றும் பரிசு பொருள் வழங்கப்பட்டது.

போட்டியில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசாக ரூ. 5,000/, இரண்டாம் பரிசாக ரூ. 3,000/, மூன்றாம் பரிசாக ரூ. 2,000/ வழங்கப்பட்டது. 10 மாணவர்களுக்கு ஆறுதல் பரிசு வழங்கப்பட்டது. நடுவர்களாக உழவர் தங்கவேல் புலவர் வளையப்பட்டி சுப்பிரமணியம் புலவர் சங்கரன் கணினி ஆசிரியர் சங்கரன் பங்கேற்றனர்.

தொடர்ந்து மாலை நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் மாவட்ட அமைப்பாளர் இரா.குமரவேல் தலைமை தாங்கினார். மாநில துணைச் செயலாளரும், மண்டலப் பொறுப்பாளருமான திருச்சி செ.எழில்மாறன் செல்வேந்திரன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழக அவைத் தலைவர் சி.மணிமாறன் ஆகியோர் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசுகளை வழங்கினர்.

இந்நிகழ்ச்சியில் மாநில நிர்வாகிகள் பார்.இளங்கோவன், இரா.நக்கீரன், நகர் மன்றத் தலைவர் து.கலாநிதி, மாவட்ட நிர்வாகிகள் ந.நலங்கிள்ளி,

நகரக் கழகச் செயலாளர்கள் எஸ்.பூபதி. ராணா ஆர்.ஆனந்த், ஒன்றிய செயலாளர்கள் வி.கே.பழனிவேல், கே.பி.ஜெகநாதன், பெ.நவலடி, பேரூர் கழக செயலாளர்கள் சி.செல்லப்பன் (எ) செல்லவேல்,

பொதுக்குழு உறுப்பினர்கள் சசிதரன், வே.சரவணக்குமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் சி.விஸ்வநாத், மாவட்ட தகவல் தொழில் நுட்ப அணி துணை அமைப்பாளர் சுதா ஜெயக்குமார், ராசிபுரம் தொகுதி ஒருங்கிணைப்பாளர் காந்தி,

நாமக்கல் மேற்கு நகர இளைஞரணி அமைப்பாளர் வினோத், மோகனூர் ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் வேலுபாலாஜி, மாவட்ட பிரதிநிதிகள் உதயபானு, வரதராஜன், மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் வைஸ்பாலு, நகர் மன்ற உறுப்பினர் மூர்த்தி, தலைமைக் கழகப் பேச்சாளர் ராஜகோபால் மற்றும் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியாக மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை துணை அமைப்பாளர் இரா.மேகநாதன் நன்றி கூறினார்.

### ஈரோடு மாநகராட்சி மண்டல

# மாமன்ற உறுப்பினர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மண்டலத் தலைவர்கள் ப.க.பழனிசாமி - காட்டு சுப்பு - குறிஞ்சி என்.தண்டபாணி - சசிக்குமார் தலைமை!

ஈரோடு, நவ. 30 -

ஈரோடு மாநகராட்சி மாமன்ற கூட்டம் மாதந்தோறும் நடைபெற்று வருகிறது. ஆனால் 4 மாநகராட்சியில் உள்ள 4 மண்டலங்களிலும் மண்டல அளவிலான மாமன்ற உறுப்பினர்கள் கூட்டம் நடத்தப்படாமல் இருந்தது. இதையடுத்து அந்தந்த மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் மண்டல ( வார்டு குழு ) கூட்டங்கள் நடத்த வேண்டும் என கோரிக்கை விடுத்து வந்தனர். இந்த கோரிக்கையை ஏற்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாநகராட்சி ஆணையர் சிவகிருஷ்ணமூர்த்திக்கு உத்தரவிட்டதையடுத்து 4 மண்டலங்களிலும் மண்டல கூட்டம் நடத்த மாநகராட்சி ஆணையாளர் மண்டல கூட்டங்கள் நடத்த உத்தரவிட்டார். இதனடிப்படையில் ஈரோடு மாநகராட்சி 4 மண்டல அலுவலகத்திலும் கூட்டம் நடைபெற்றது.

ஈரோடு சூரியம்பாளையம் உள்ள மாநகராட்சி 1ம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் ப.க.பழனிசாமி தலைமையில் மண்டல கூட்டம் 27.11.2023 அன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு 1ம் மண்டல உதவி ஆணையர் அண்ணாதுரை, உதவி செயற் பொறியாளர் தனுஷ் கோடி முன்னிலை வகித்தனர். கூட்டத்தில் 1ம் மண்டலத்தை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் பங்கேற்று தங்களுடைய வார்டுகளில் நிலவும் பிரச்சினைகள் குறித்து பேசினார்கள். அதில் பேபிகால்வாயை தூர்வார வேண்டும். பழுதடைந்துள்ள பொதுகழிப்பறையை சீரமைக்க வேண்டும். மழையால் சேதமடைந்துள்ள கான்கிரீட் சாலைகளை புதிதாக அமைக்க வேண்டும். குண்டும் குழியுமான சாலைகளை சீரமைக்க வேண்டும். பாதாள சாக்கடை குழாயில் ஆங்காங்கே அடைப்பு ஏற்பட்டு கழிவு நீர் சாலையில் செல்வதால் தொற்றுநோய் ஏற்படும் பாதிப்புக்கள் உள்ளது. இதனால் அடைப்புகளை நீக்கி பழுதடைந்துள்ள மூடிகளுக்கு பதிலாக புதிய மூடிகள் போட வேண்டும். ஊராட்சிகோட்டை கூட்டு குடிநீர் திட்டத்தில் தற்போது வழங்கப்பட்ட புதிய இணைப்புகளில் குடிநீர் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் . புதிய தெருவிளக்குகள் பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். தெரு விளக்குகளை மறைக்கும் மரக்கிளைகளை வெட்ட வேண்டும். பி.பி. அக்ரஹாரம் அரசு மேல்நிலைப் பள்ளியின் பின்புறம் உள்ள கழிவு நீர் சாக்கடையை சிலாப் வைத்து மறைக்க வேண்டும். என்பன போன்ற அடிப்படை பிரச்சினைகளை விரைந்து தீர்வு காண வேண்டும் என பேசினர்.

இதற்கு 1ம் மண்டல தலைவர் ப.க.பழனிசாமி பதிலளித்து பேசுகையில் மண்டல கூட்டங்கள் நடத்த அனுமதி அளித்த அரசுக்கும் மாநகராட்சி ஆணையாளருக்கும் இந்த கூட்டம் நன்றியை தெரிவித்து கொள்கிறோம். மண்டல கூட்டங்கள் மாதந்தோறும் 20ம் தேதிக்கு முன்னதாக நடத்தப்படும். இந்த கூட்டத்தில் பெறப்படும் கோரிக்கைகள் மாநகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் மாமன்ற கூட்டத்தில் மேயர், ஆணையாளர் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு விரைந்து நடவடிக்கை எடுத்து தீர்வு காண நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்தார்.

இதேபோல் மூலப்பாளையத்தில் உள்ள 4ம் மண்டல அலுவலகத்திலும் மண்டல தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி தலைமையில் உதவி ஆணையர் கிருஷ்ணமூர்த்தி, செயற் பொறியாளர் சண்முகவடிவு முன்னிலையில் நடைபெற்றது.

டீச்சர் காலனியில் உள்ள 3ம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் சசிகுமார் தலைமையில் உதவி ஆணையர் குணசுந்தரம் முன்னிலையில் நடைபெற்றது.

பெரியசேமூர் அருகேயுள்ள 2ம் மண்டல அலுவலகத்தில் மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம் தலைமையில் உதவி ஆணையர் (பொறுப்பு) பாஸ்கர் முன்னிலையில் நடைபெற்றது.

இந்த மண்டல கூட்டங்களில் அந்தந்த மண்டலங்களை சார்ந்த மாமன்ற உறுப்பினர்கள் வார்டுகளில் உள்ள அடிப்படை பிரச்சினைகளைகள் வார்டில் மேற்கொள்ளபட வேண்டிய வளர்ச்சித் திட்ட பணிகள் மண்டல தலைவரிடம் கோரிக்கை மனுக்களாக வழங்கி பேசினர்.

இதில் அந்தந்த மண்டலத்தை சார்ந்த மாநகராட்சி அதிகாரிகள், அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முதல் முறையாக மண்டல கூட்டம் நடைபெறுவதையொட்டி அனைத்து மண்டல அலுவலங்களிலும் மண்டல தலைவர் சார்பில் மாமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள், அலுவலர்கள், தொழிலாளர்களுக்கு மதிய விருந்து ஏற்பாடு செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது.

### ஊத்தங்கரை வடக்கு ஒன்றியம் சார்பில்

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா!

## தளபதி நகரில் இருளர் மக்களுக்கு கேக் வெட்டி அறுசுவை உணவு வழங்கப்பட்டது!

கிருஷ்ணகிரி, நவ. 30 -

கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை வடக்கு ஒன்றிய திமுக சார்பில் மாண்புமிகு தமிழக விளையாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள் விழா முன்னிட்டு பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது, கோவிந்தாபுரம் ஊராட்சியில் ஒன்றிய குழுத் தலைவர் உஷாராணி குமரேசன் தலைமையில் அண்ணா சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்யப்பட்டது,அதனைத் தொடர்ந்து மூன்றம்பட்டி ஊராட்சி தளபதி நகரில் உள்ள இருளர் மக்களுக்கு கேக் வெட்டி பிரியாணி வழங்கப்பட்டது. நிகழ்ச்சிக்கு மாவட்ட துணை செயலாளர் சந்திரன், முன்னால் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி,ஊராட்சி மன்ற தலைவர் பூபாலன், ஒன்றிய துணைச் செயலாளர் ஜெயச்சந்திர பாண்டியன், நகரவைத் தலைவர் தணிகை குமரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இதில் மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் சத்தியநாராயணமூர்த்தி, மாவட்ட சிறுபான்மை நல. துணை அமைப்பாளர் கலீல், மாவட்ட பிரதிநிதிகள் இதயநாதன், காமராஜ், ஊராட்சி மன்றத் துணைத் தலைவர் ஜெயலட்சுமி ராதாகிருஷ்ணன், ஒன்றிய பொருளாளர் குமார், ஒன்றிய துணை செயலாளர் சைலேந்திரி, மாவட்ட பொறியாளர் அணி துணை அமைப்பாளர் அசோக், மாவட்ட தொண்டர் அணி துணை அமைப்பாளர் வெல்டிங் குமார், சுற்றுச்சூழல் அணி மாவட்ட துணை அமைப்பாளர் அன்பு, நெசவாளர் அணி மாவட்ட துணை அமைப்பாளர் சிவகுமார், முன்னாள் ஒன்றிய இளைஞரணி நிர்வாகி ஜாவித், ஒன்று இளைஞர் அணி மோகன், கற்பூர சுந்தர பாண்டியன் கிருஷ்ணமூர்த்தி, சுதாகர், மகேந்திரன், ஆதி, சிவா, அருணகிரி, ஒன்றிய குழு உறுப்பினர் சுப்பிரமணி,முருகன் மற்றும் திமுக நிர்வாகிகள் ஏராளமனோர் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரும் கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி ஈரோடு மாநகரம் பெரியசேமூர் பகுதி கழக செயலாளரும் ஈரோடு துணை மேயருமான வி.செல்வராஜ் தலைமையில் கழக கொடியேற்றியும் இனிப்புகள் வழங்கியும், பெரிய வலசு அரசு உயர்நிலைப்பள்ளி மாணவ மாணவியருக்கு நோட்டு புத்தகம் எழுது பொருள் மற்றும் பெரிய வலசு அங்கன்வாடியில் பயிலும் குழந்தைகளுக்கு நலத்திட்ட உதவிகள் குக்கர் சேர்பாய் தலையணை வழங்கினர். நிகழ்வில் இரா.சேகரன், மனோகரன், அன்பழகன், பாலசுப்பிரமணி, செ.க.துரைசாமி, மாமன்ற உறுப்பினர்கள் ஜெகநாதன், வனிதாமணி கலையரசன், எஸ்.பி.வினோத், செல்லமணி, முருகன் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### தருமபுரி மேற்கு மாவட்டத்தில்

# கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை சார்பில் போட்டிகள்!

## மாவட்டச் செயலாளர் முனைவர் பி.பழனியப்பன் தலைமை!

தருமபுரி, நவ. 30 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட தி.மு.க. கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவை சார்பில் கலைஞரின் கவிதை,வசனங்கள் ஒப்பிவித்தல் போட்டி இன்று நடைபெறுகிறது என மாவட்ட அமைப்பாளர் தேசிங்குராஜன் அறிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

தருமபுரி மேற்கு மாவட்டக் கழக கலை, இலக்கியபகுத்தறிவு பேரவை சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு பள்ளி மாணவர், மாணவியர்க்கு தமிழினத்தலைவர் முத்தமிழறி ஞர் கலைஞர் அவர்களின் கவிதைகள் மற்றும் திரைப்பட வசனங்கள்þ ஒப்பித்தல் போட்டி இன்று ( 30.11.2023 - வியாழக் கிழமை) காலை 09.00 மணிக்கு மொரப்பூர் இந்து சமய அறநிலையத் துறை மண்டபத்தில் நடைபெற உள்ளது.

தருமபுரி மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர், முனைவர்.பி.பழனி யப்பன் தலைமையேற்று போட்டிகளை துவக்கி வைத்து வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுகளை வழங்க உள்ளார்.

அதுசமயம் கழக மாநில, மாவட்ட, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள்,நிர்வாகிகள், சார்பு அணி மாவட்ட, தொகுதி, ஒன்றிய பேரூர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதி கள்,இந்நாள், முன்னாள் நிர்வாகிகள் உள்ளிட்ட கழகத்தினர் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

### ராசிபுரம் புதுச்சத்திரம் ஒன்றியத்தில்

# ரூ.1.18 கோடி மதிப்பில் கூடுதல் புதிய துணை சுகாதார நிலையம்!

## கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி. திறந்து வைத்தார்!

நாமக்கல், நவ. 30 -

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் மற்றும் புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியங்களில் ரூ.57.64 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பள்ளி வகுப்பறைகள், நியாய விலைக் கடை, வேளாண் இடுப்பொருள் வைப்பு கிடங்கு மற்றும் ஊராட்சி மன்ற அலுவலகம் உள்ளிட்ட 4 முடிவுற்ற திட்டப் பணிகள் துவக்க விழா நடைபெற்றது.

மாவட்ட ஆட்சித் தலைவர் மருத்துவர் ச. உமா, தலைமை தாங்கினார். சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்கவை உறுப்பினருமான கே.ஆர். என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு, ரூ.60.00 இலட்சம் மதிப்பீட்டில் 1 கூடுதல் துணை சுகாதார நிலையம் கட்டும் பணிக்கு திறந்து வைத்தும், அடிக்கல் நாட்டினார்.

இராசிபுரம் ஊராட்சி ஒன்றியம், மலையாம்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளியில் பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ.19 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 2 புதிய வகுப்பறைகளை கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி திறந்து வைத்தார். ;அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II ன் கீழ், வேளாண் இடுப்பொருள் வைப்பு கிடங்கு, குருக்கபுரம் ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் II ன் கீழ், கட்டப்பட்டுள்ள புதிய நியாய விலைக்கடை, புதுசத்திரம் ஊராட்சி ஒன்றியம், செல்லப்பம்பட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக திட்டத்தின் கீழ், புதிய ஊராட்சி மன்ற அலுவலகம் திறந்து வைத்து,

முதலைப்பட்டியில் 15 வது மத்திய நிதி ஆணையம் மற்றும் தேசிய நல வாழ்வு இயக்கத்தின் கீழ், கூடுதல் துணை சுகாதார நிலையம் அமைக்கும் பணிக்கு அடிக்கல் நாட்டினார்.

சேந்தமங்கலம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பயிலும் பழங்குடியினர் மாணவியர்கள் 100 பேர் தங்கி பயிலுவதற்கு ஏதுவாக தற்போது அரசு விடுதி கட்டடம் கட்டப்படும் வரை, துத்துக்குளம், ஸ்ரீ அம்மன் தங்கலட்சுமி திருமண மண்டபத்தில் தற்காலிக பழங்குடியினர் நல கல்லூரி மாணவியர் விடுதியினை கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் எம்.பி திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் நாமக்கல் நகர்மன்றத் தலைவர் து.கலாநிதி, துணைத் தலைவர் செ.பூபதி, இராசிபுரம் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கே.பி.ஜெகநாதன், ஒன்றியச் செயலாளர் அ.அசோக்குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் எம்.சிவக்குமார், இணைபதிவாளர், கூட்டுறவு சங்கங்கள் க.பா.அருளரசு, துணை இயக்குநர் சுகாதார பணிகள் மரு.க.பூங்கொடி, நாமக்கல் நகராட்சி ஆணையாளர் சென்னுகிருஷ்ணன், பழங்குடியினர் நல திட்ட அலுவலர் பீட்டர், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### திலீபன் ஏற்பாட்டில் சி.சு.ரவிச்சந்திரன் தலைமையில்

# திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் உணவு!

திருவள்ளூர், நவ. 30 -

திருவள்ளூர் மேற்கு மாவட்ட இளைஞரணி சார்பில் கழக இளைஞரணிச் செயலாளர் எழுச்சி நாயகன் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ். சந்திரன் எம்.எல்.ஏ திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் ஆகியோர் அறிவுறுத்தலில் பெரியகுப்பத்தில் உள்ள அன்னை தெரேசா பள்ளியில் பயிலும் மனவளர்ச்சி குன்றிய மற்றும் காது கேளாத, வாய் பேசாத மாணவ, மாணவிகளுக்கும், திருவள்ளூர், ஆயில்மில் அருகே ஏழை, எளிய மக்களுக்கும் அறுசுவை உணவு இனிப்பு மற்றும் கேக் வழங்கும் விழா மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் டி. ஆர்.திலீபன் ஏற்பாட்டில் நடைபெற்றது.

சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பாக பயணங்களை மேற்கொள்வோம்!

# குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம்!

## 'இன்னுயிர் காப்போம் - நம்மைக் காக்கும் 48' திட்டத்தில் 2 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவ சிகிச்சை - முதல்வர் மு.க.ஸ்டாலின் வலைதளப்பதிவு!

சென்னை, நவ.30-

**'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தில் 2 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டது தொடர்பாக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விடுத்த சமூக வலைதளப் பதிவில் "சாலை விதிகளைப் பின்பற்றி பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்வோம்! குடும்பங்களின் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம்!" என்று குறிப்பிட்டுள்ளார்.**

முதல்வர் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**2008ஆம் ஆண்டிலேயே 108 ஆம்புலன்ஸ் சேவையைத் தொடங்கி னார் தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள்.**

**இந்தியாவிலேயே அதிகளவில் மக்கள்தொகைக்கேற்ப ஆம்புலன்ஸ் சேவைகள் தமிழ்நாட்டில் இருந்தாலும், சாலை விபத்துகளால் ஏற்படும் உயிரிழப்புகளும் அதிகமாக இருந்தன.**

**அதனைக் குறைக்க, 'இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும் 48' திட்டத்தைக் கடந்த 2021 டிசம்பரில் அறிமுகப்படுத்தினேன்.**

**இந்த இரண்டாண்டுகளில், இன்று 2 இலட்சமாவது பயனாளிக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. பயனாளிகள் என்பதைவிட 2 இலட்சம் பேர்களின் உயிர்களும் உடலுறுப்புகளும் காக்கப்பட்டுள்ளன என்பதே சரி!**




**சாலை விதிகளைப் பின்பற்றிப் பாதுகாப்பான பயணங்களை மேற்கொள்வோம்! குடும்பங்களில் மகிழ்ச்சியை நிலைபெறச் செய்வோம்!**

இவ்வாறு அப்பதிவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.




முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, திருச்சி கிழக்கு தொகுதி கரூர் பைபாஸ் சாலையில் குடமுருட்டி அருகில் 100 அடி உயர கொடி மரத்தில் கழக இரு வர்ண கொடியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் ஏற்றினார். இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தி.மு.க. கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமைச் செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், சபியுல்லா, மாவட்டக் கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன் மற்றும் மாநில,மாவட்ட, மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# எதையும் சாதிக்கும் திறமை கொண்டவர் - அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி!

## திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் - குடமுருட்டி அருகில் 100 அடி கொடிக்கம்பத்தில் கழகக் கொடியேற்றி - பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் பேச்சு!

*திருச்சி, நவ.30-*

*திருச்சி தெற்கு மாவட்டக் கழகம் சார்பில், கரூர் பைபாஸ் சாலையில், குடமுருட்டி அருகில் 100 அடி உயர கொடிக் கம்பத்தில் கழகக் கொடி யேற்றி வைத்துப் பேசிய கழகப் பொதுச் செயலாளர் - அமைச்சர் துரைமுருகன் அவர்கள், 'எதையும் சாதிக்கும் திறமை கொண்டவர் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி!' என்று புகழலாரம் சூட்டினார்.*

*முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்டக் கழகத்தின் சார்பாக, திருச்சி கிழக்கு தொகுதி கரூர் பைபாஸ் சாலையில் குடமுருட்டி அருகில் 100 அடி உயர கொடி மரத்தில் கழக இரு வர்ண கொடியை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் கழக பொதுச்செயலாளர் அமைச்சர் துரைமுருகன் கொடி ஏற்றினார்.*

*அதனைத் தொடர்ந்து திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்துரை கூட்டம் கலைஞர் அறிவாலயத்தில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தி.மு.க வின் பொதுச்செயலாளரும் நீர் வளத்துறை அமைச்சருமான துரைமுருகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். கூட்டத்தை தெற்கு மாவட்ட செயலாளரும் பள்ளி கல்வி துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடக்கி வைத்து பேசினார். அதில், கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தி.மு.க தெற்கு மாவட்டம் செய்துள்ள பணிகள் குறித்து மூத்த நிர்வாகிகளுக்கு காட்ட விரும்பினேன். அந்த வகையில் எங்கள் ரிப்போர்ட் கார்டை எங்கள் தலைமை ஆசிரியர் பொதுச்செயலாளரிடம் காட்டியுள்ளோம். 2016 ஆம் ஆண்டு நான் தேர்தலில் போட்டியிட விரும்பிய போது நான் ஒரு தொகுதியைக் கேட்டேன்.*

*அப்பொழுது அந்த தொகுதியை கூட்டணிக் கட்சியைச் சேர்ந்தவர்களும் கேட்டார்கள். அந்த நேரத்தில் நம்முடைய தற்போதைய தலைவர் "அந்த தொகுதியை என் மகனுக்காக கேட்கிறேன்" எனக் கூறியுள்ளார். அதை என்னிடம் பொதுச்செயலாளர் அண்ணன் துரைமுருகன் கூறினார். அதைக் கேட்டதும் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.*

*அடுத்து பேசிய அமைச்சர் துரை முருகன் அவர்கள் குறிப்பிட்டதாவது:*

*ஆயிரம் கொடி இருந்தாலும் தி.மு.க. கொடி போல் எதுவும் இல்லை. அதை பார்க்கும் போதே ஒரு மகிழ்ச்சி வருகிறது. திருச்சியில் சற்று முன்னர் 100 அடியில் கொடியை ஏற்றினேன் கண்டிப்பாக அசந்து போனேன்*

*எதையும் சாதிக்கும் திறமை அமைச்சர் அன்பில் மகேசுக்கு இருக்கிறது ஆனால் எதுவும் தெரியாதாது போல் நடிக்கும் திறமையும் அவரிடம் உள்ளது. தி.மு.க.வே முதன் முதலில் தேர்தலில் போட்டியிடுவதாக முடிவு செய்து அறிவிக்கப்பட்ட இடமும் திருச்சி தான். அன்பிலார், பொய்யாமொழி ஏற்பாடு செய்த கூட்டத்தில் பேசி உள்ளேன். தற்போது மூன்றாவது தலைமுறையான மகேஸ் ஏற்பாடு செய்த கூட்டத்திலும் கலந்து கொண்டுள்ளேன். தமிழ்நாட்டின் தலைநகர் மத்தியில் இருக்க வேண்டும் என்றால் அது திருச்சி தான் அப்படியும் காலம் வரும். இயக்கத்தின் உயிர் நாடியே தொண்டர்கள் தான். மற்ற கட்சிகளில் உயிர் நாடி உயிரோடு இல்லை. நம் இயக்கத்தின் மீது வீசிய புயல் இமயமலை மீது வீசி யிருந்தால் இமயமலை சுக்கு நூறாகி யிருக்கும். ஒவ்வொரு தி.மு.க தொண்டனும் கட்சியின் காவல் தெய்வங்கள். இந்தியாவில் எமர்ஜென்சியை எதிர்த்து தீர்மானம் இயற்றிய ஒரே கட்சி திமுக தான். தலைவரின் பெயரை, கட்சியை காப்பாற்றுவாரா நம் தளபதி என்று எண்ணினேன் ஒவ்வொரு இடத்திலும் உற்று நோக்குவேன், இதை நான் ஸ்டாலினிடமும் கூறி இருக்கிறேன் ஆனால் அவர் சிறப்பாக செயல்பட்டுக் காட்டினார்.*

*இவ்வாறு கழகப் பொதுச் செலயாளர் துரைமுருகன் அவர்கள் புகழாரம் சூட்டினார்.*

*இந்நிகழ்வில் மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன், தி.மு.க. கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் இனிகோ இருதயராஜ், தலைமை செயற்குழு உறுப்பினர் வண்ணை அரங்கநாதன், கே.என்.சேகரன், சபியுல்லா, மாவட்டக் கழக அவைத் தலைவர் கோவிந்தராஜ், மாவட்ட பொருளாளர் குணசேகரன், பகுதி கழகச் செயலாளர் மோகன், மற்றும் மாநில,மாவட்ட, மாநகரம், பகுதி, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.*



சீனியர் ஆண்கள் தேசிய சாம்பியன்ஷிப் 2023 – ஆண்கள் ஹாக்கி போட்டி சென்னை எழும்பூரில் உள்ள மேயர் ராதாகிருஷ்ணன் ஹாக்கி ஸ்டேடியத்தில் நடைபெற்றது. பஞ்சாப் அணி ஹரியானாவை வீழ்த்திய பரபரப்பான இந்த இறுதிப் போட்டியை இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் தறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டு களித்தார். வெற்றியாளர்களுக்கு பதக்கங்கள் மற்றும் சாம்பியன் கோப்பை வழங்கினார்.

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சொ.வேலு எம்.சி தலைமையில்

# எழும்பூர் வடக்கு: தூய்மைப் பணியாளர்களுக்கு 3 நாள் தொடர் மருத்துவ முகாம்!

## தயாநிதிமாறன் எம்.பி, டாக்டர் நா.எழிலன், மேயர் பிரியா, இ.பரந்தாமன் பங்கேற்பு

*சென்னை நவ.30-*

*சென்னை கிழக்கு மாவட்டம், எழும்பூர் தொகுதி தி.மு.க. சார்பில் உடன் பிறப்புகள் கொண்டாடும் கலைஞர் நூற்றாண்டு விழா கலைஞர் 100-65, ஆயுளை மீட்பது மருத்துவம்! அறிவினில் கலைஞர் தனித்துவம்! நிகழ்ச்சி நாளை (1.12.2023-வெள்ளிக்கிழமை) காலை 9 மணி அளவில் அறிஞர் அண்ணா மாளிகை கொசப்பேட்டையில் நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சியில் எழும்பூர் தொகுதியில் பணியாற்றும் மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்கான தொடர் 3 நாள் டிசம்பர் 1, 2, 3 முழு உடல் பரிசோதனை மருத்துவ முகாம் நடைபெறுகிறது.*

*நிகழ்ச்சியில் மாவட்டச் செயலாளரும் இந்து சமய அறநிலை துறை, பெருநகர சென்னை வளர்ச்சி குழுமத் தலைவர் பி.கே.சேகர் பாபு முன்னிலை வகிக்கிறார்.*

*நிகழ்ச்சிக்கு எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர், சென்னை மாநகராட்சி நியமனக்குழு உறுப்பினருமான சொ.வேலு தலைமை வகிக்கிறார்.*

*இம்மருத்துவ முகாமை டாக்டர் நா.எழிலன் எம்.எல்.ஏ துவக்கி வைக்கிறார்.*

*இதில் தயாநிதி மாறன் எம்.பி,மேயர் பிரியா ராஜன், இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, ஓ.எ. நாகலிங்கம், எழும்பூர் தெற்கு பகுதி செயலாளர் வி.சுதாகர் உள்ளிட்ட மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொள்கின்றனர்.*

*வட்டச் செயலாளர்கள் சு.மனோகர், ந.பாலு ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.*

# செய்யாறு - சிப்காட் திட்டத்தை விரைந்து நிறைவேற்ற வலியுறுத்தி விவசாயிகள் உண்ணாவிரதம்!

*திருவண்ணாமலை, நவ.30-*

*திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு சிப்காட் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தி காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலை, மேல்மா கூட்டு ரோட்டில் மாபெரும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்று வருகிறது.*



*திருவண்ணாமலை மாவட்டம்,செய்யாறுவட்டம், மேல்மா மற்றும் அதனை சுற்றியுள்ள 8 கிராமங்களில் சிப்காட் அலகு 3 திட்டத்தை தமிழ்நாடு அரசு கொண்டு வருவதை ஆதரித்து நேற்று முன்தினம் (28.11.2023) காஞ்சிபுரம் வந்தவாசி நெடுஞ்சாலை, மேல்மா கூட்டு ரோட்டில் சிப்காட் திட்டத்தை தமிழ்நாடு அரசு உடனடியாக செயல்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் வகையில் தென்னிந்திய கரும்பு விவசாயிகள் சங்கம், தமிழ்நாடு கே.வி.ராஜ்குமார் தலைமையில் மற்றும் அருள்மிகு அம்மை அப்பர் உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் ஆகியோரின் சார்பில் மாபெரும் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்று வருகிறது.*

*மேற்படி போராட்டம் காலை 11.00 மணி அளவில் தொடங்கப்பட்டது. இதில் 4000 ஆண்கள் மற்றும் 3500 பெண்கள் என மொத்தம் 7500 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர்.*

உத்தரகாண்ட் மாநிலத்தில்

# சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்பு!

## மீட்புக்குழுவினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு!

டேராடூன், நவ.30-

**உத்தரகாண்ட் மாநிலத்தில் சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்கள் பத்திரமாக மீட்கப்பட்டதற்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மீட்புக்குழுவினருக்கு பாராட்டுகளை சமூக வலைதளப் பக்கத்தில் தெரிவித்துள்ளார்.**





உத்தரகாண்ட் மாநிலத்தில் உத்தரகாசி மாவட்டத்தின் சில்க்யாரா மலைப்பகுதியில் 4.50 கிலோமீட்டர் தூரத்துக்கு மலைக்கு கீழ் சுரங்கப்பாதை அமைக்கும் பணி நடந்துவந்தது.

கடந்த 12ம் தேதி நடந்த சுரங்கப்பாதை விபத்தில் தொழிலாளர்கள் 41 பேர் சிக்கிக் கொண்டனர். அதனைத் தொடர்ந்து 17வது நாளாக மீட்புப் பணி நடைபெற்றது. நேற்று முன்தினம் மாலை தொழிலாளர்களை மீட்க துளையிடும் பணி நிறைவடைந்தது. இதனால் அவர்களது உறவினர்கள்சுரங்கத்தில்குவிந்தனர்.

இதற்கிடையே, ஒவ்வொரு தொழிலாளராக பத்திரமாக மீட்கப்பட்டனர். அவர்களுக்கு முதலுதவி சிகிச்சை வழங்கப்பட உள்ளது. மீட்கப்பட்ட தொழிலாளர்கள் ஆம்புலன்ஸ் மூலம் அருகிலுள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.



மீட்புப் பணிகளை முதல் மந்திரி புஷ்கர் சிங் தாமி நேரில் சென்று பார்வையிட்டார்.

மீட்கப்ப ட்டவர்களிடம் முதல் மந்திரி கலந்துரையாடினார்.

இந்நிலையில், சுரங்கத்தில் சிக்கிய 41 தொழிலாளர்களும் பத்திரமாக மீட்கப்பட்டனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மீட்கப்பட்ட தொழிலாளர்களை ஒன்றிய அமைச்சர் வி.கே.சிங் வரவேற்றார். தொழிலாளர்கள் மீட்கப்பட்டதும் அப்பகுதி மக்கள் இனிப்பு வழங்கி கொண்டாடினர்.

**தமிழ்நாடு முதல்வர் பாராட்டு!**

**17 சவாலான நாட்களுக்குப் பிறகு உத்தரகாசி சுரங்க விபத்தில் சிக்கியிருந்த 41 தொழிலாளர்களும் வெற்றிகரமாக மீட்கப்பட்டதை அறிந்து நிம்மதி அடைகிறேன்.**

**சில்க்யாரா சுரங்க விபத்து மீட்புப் பணியில் விடாமுயற்சி செய்து, திடத்துடன் போராடித் தொழிலாளர்களை மீட்ட நமது மீட்புக் குழுவினர்கள் மற்றும் 'எலிவளை' சுரங்க வல்லுனர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகள்.**

**மீட்கப்பட்ட 41 தைரியமிகு தொழிலாளர்களும் அவர்களது குடும்பத்தினரும் உறுதி படைத்த மனத்துடன் இதிலிருந்து தேறிட விழைகிறேன்.**

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சமூகவலை தளப்பதிவில் தெரிவித்துள்ளார்.



திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பாலாறு பொருந்தலாறு அணையிலிருந்து பழைய 6 அணைக்கட்டு கால்வாய் மூலம் பாசனத்திற்கு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி தண்ணீர் திறந்து வைத்தார். அருகில் பழனி வருவாய் கோட்டாட்சியர் சௌ.சரவணன், செயற்பொறியாளர் பொதுப்பணித்துறை நீர்வள ஆதார அமைப்பு பாலமுருகன் உட்பட பலர் உள்ளனர்.

### மாற்றுத் திறனாளிகள் நலத்துறையின் சிறப்பு பள்ளிகளில் பயிலும்

# மாணவ - மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்!

சென்னை, நவ. 30 - தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ரூ.2.92 கோடி மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சிறப்பு பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) முகாம் அலுவலகத்திலிருந்து தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சி கழகத்தின் 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார்.

ஏராளமான உள்ளூர் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்துதல், அன்னியச் செலாவணியினை ஈட்டுதல் ஆகியவற்றில் சுற்றுலாத் துறை முக்கிய பங்காற்றுகிறது. இந்தியாவில் சிறப்பான சுற்றுலாத்தலங்கள் அதிகமுள்ள மாநிலங்களில் தமிழ்நாடு முக்கிய இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் பல்வகையான சுற்றுலா தலங்கள், பிரம்மாண்டமான திருக்கோயில்கள், இயற்கை எழில் கொஞ்சும் மலை மற்றும் வனப்பகுதிகள், அழகிய கடற்கரைகள் போன்ற பல்வேறு சுற்றுலா தலங்கள் பலதரப்பட்ட சுற்றுலாப் பயணிகளையும் கவரும் வகையில் அமைந்துள்ளது. இத்தகைய பெரும் வாய்ப்புகள் அடங்கிய சுற்றுலாத்துறையை மேம்படுத்திட தமிழ்நாடு அரசு பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாட்டில் சுற்றுலாவை மேம்படுத்திட முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தை 1971 ஆம் ஆண்டு உருவாக்கினார். தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம், சுற்றுலா பேருந்து சேவைகள், சுற்றுலா பயணத்திட்டங்கள், ஓட்டல் தமிழ்நாடு என்ற பெயரிலான தங்கும் விடுதிகள், அமுதகம் என்ற பெயரிலான உணவு விடுதிகள், படகு குழாம்கள் போன்ற பல்வேறு சேவைகளை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கி வருகின்றது.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல், ஏற்காடு-ஒகேனக்கல், மைசூர்-பெங்களூர், குற்றாலம், நவக்கிரக கோவில்கள் தொகுப்பு மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா பயண திட்டங்களும், சென்னை மாமல்லபுரம்,காஞ்சிபுரம் மாமல்லபுரம், திருப்பதி, திருவண்ணாமலை, ஸ்ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி, என ஒரு நாள் சுற்றுலா பயண திட்டங்களும். எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவாமந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும். 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா பயண திட்டங்களும், யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சுற்றுலா பயண திட்டங்களை மேற்கொள்வதற்காக தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகம் குளிர் சாதன வசதியுடன் கூடிய வால்வோ சொகுசு பேருந்துகள், உயர்தர சொகுசு பேருந்துகள், சாதாரண சொகுசு பேருந்துகள், 18 இருக்கைகளுடன் கூடிய சிறிய ரக சொகுசு பேருந்துகள், என மொத்தம் 14 சொகுசு பேருந்துகளை இயக்கி வருகிறது.

சுற்றுலாப் பயணிகளின் வசதிக்காக பல்வேறு சுற்றுலாக்கள் குறித்த தகவல்கள், முன்பதிவு ஆகியவற்றை சுற்றுலா பயணிகளுக்கு வழங்கவும் மற்றும் சுற்றுலாவின்போது ஏற்படும் குறைகளை களையவும் உடனடி நடவடிக்கை மேற்கொள்ள தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தலைமை அலுவலகத்தில் 24 மணி நேரமும் (24 X 7) செயல்படும் சுற்றுலா உதவி மையம் (Tourism Help Desk) மற்றும் கட்டுப்பாட்டு அறை செயல்பட்டு வருகின்றது.

2023-24ஆம் ஆண்டிற்கான சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கையில், திருப்பதி சுற்றுலா மற்றும் பிற சுற்றுலாக்களை இயக்குவதற்கு ஏற்படும் கூடுதல் தேவைகளை பூர்த்தி செய்ய இரண்டு குளிர் சாதன வால்வோ சொகுசு பேருந்துகள் வாங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. அந்த அறிவிப்பிற்கிணங்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று 2.92 கோடி ரூபாய் மதிப்பிலான இரண்டு வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, பூவிருந்தவல்லி பார்வைத்திறன் குறைவுடையோருக்கான அரசு மேல்நிலைப்பள்ளி, தாம்பரம் சானிடோரியம் செவித்திறன் குறைவுடையோருக்கான அரசு நடுநிலைப் பள்ளி மற்றும் தாம்பரம் சானிடோரியம் அறிவுசார் குறையுடையோருக்கான அரசு நிறுவனம் ஆகிய மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சிறப்பு பள்ளிகளைச் சேர்ந்த 60 மாணவ, மாணவிகளை தமிழ்நாட்டின் தலைச்சிறந்த சுற்றுலா தலங்களுள் ஒன்றான மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சொகுசு சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளை வழியனுப்பி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், சமூக நலன் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் திருமதி. பி. கீதா ஜீவன், சுற்றுலாத் துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், முதன்மைச் செயலாளர் / சுற்றுலா ஆணையர் மற்றும் தலைவர்/ தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. காகர்லா உஷா, மாற்றுத்திறனாளிகள் நலத் துறை செயலாளர் திருமதி. ஜெயஸ்ரீ முரளிதரன், மாற்றுத்திறனாளிகள் நலத் துறை இயக்குநர் கமல் கிஷோர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாள்:

# 50 குழந்தைகளுக்கு தங்க மோதிரம் - பரிசுப் பொருட்கள்!

## இ.பரந்தாமன், எம்.எல்.ஏ., வழங்கினார்!

சென்னை, நவ. 30 - இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 46ஆவது பிறந்த நாளைச் சமூகத்தில் நலிவடைந்த பிரிவினருக்கு உதவிடும் வகையில் கொண்டாடும் விதமாக, மாவட்டச் செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை மற்றும் சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் அமைச்சருமான பி.கே.சேகர் பாபு மற்றும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன் ஆகியோரின் வழிகாட்டுதலின்படி, எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினரும், கழக சட்டத் துறை இணைச் செயலாளருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன் ஏற்பாட்டில் எழும்பூர் தொகுதியில் 28.11.2023 தொடங்கி 12 தொடர் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன்

இதன் முதல் நிகழ்வாக, எழும்பூர் தொகுதி, பாந்தியன் சாலையில் அமைந்துள்ள எழும்பூர் அரசு தாய்சேய் நல மருத்துவமனையில் 27.11.2023 அன்று பிறந்த 46 குழந்தைகளுக்கும், புரசைவாக்கம் கரியப்பா சாலையில் அமைந்துள்ள பெருமாள்பேட் மாநகராட்சி தாய்சேய் நல மருத்துவமனையில் அதே நாளில் பிறந்த 4 குழந்தைகளுக்கும், ஆக 50 குழந்தைகளுக்குத் தங்க மோதிரம் மற்றும் பரிசுப் பொருட்களை எழும்பூர் சட்டமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இ. பரந்தாமன் வழங்கினார்.

இந்நிகழ்விற்கு அவைத் தலைவர் வெ.மருதன் தலைமை வகித்தார். 58அ வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எல்.சுகுமாரன் முன்னிலை வகித்தார்.

எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் செயலாளர் ஜெ. விஜயகுமார், எழும்பூர் தெற்குப் பகுதி முன்னாள் பொருளாளர் ந.கலையரசன், முன்னாள் வட்டச் செயலாளர் ஆர்.புருஷோத்தமன், மாவட்டப் பிரதிநிதிகள் கமலக்கண்ணன், மா.காந்தி, ஏ.கே.ரஃபீக், முன்னாள் மாவட்டப் பிரதிநிதி புரசை எஸ்.குமார், 108வது வட்டத் துணைச் செயலாளர் கே.சீனிவாசன், எழும்பூர் தெற்குப் பகுதி மகளிர் அணி துணை அமைப்பாளர் முத்துலெட்சுமி, 77அ வட்டத் துணைச் செயலாளர் ஆர்.ஆரோக்கியம், எழும்பூர் தெற்குப் பகுதி வர்த்தகர் அணி அமைப்பாளர் இரா. வெற்றிவேல், எழும்பூர் தெற்குப் பகுதி இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜே. சிலம்பரசன், 108அ வட்ட இளைஞரணி அமைப்பாளர் பு.சதிஷ்குமார், 108வது வட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜோ.சந்தோஷ், தலைமைக் கழகப் பேச்சாளர் சூளை நேரு; சூளை பன்னீர்செல்வம், தனசேகரன், வட்டச் செயற்குழு உறுப்பினர்கள் சிற்றரசு, வீ.பாபு; அமீர்கான், வேலு, சுரேன், தலைமைக் கழகப் பேச்சாளர் எம்.இ.தேவநிதி, மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் யு.விஜயபோஸ்; எழும்பூர் ரமேஷ், கி.புஷ்பராஜ், பிரம்மதேவன், நாகராஜ், பாலாஜி அன்புமணி, கோமகன், மா.கார்த்திகேயன், அசினா பேகம், பாக முகவர்கள் கவிதா, கார்த்திக் மற்றும் தர்மதுரை, முத்து, ரவி, ராஜேந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் முன்னோடிகளும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், பார்த்திபனூர் மதகணையில் 25.11.2023 அன்று விவசாய பாசனத்திற்கான 4000 கனஅடி தண்ணீர் மாவட்ட இராமநாதபுரம் மாவட்டக் கழகச் செயலாளர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் காதர்பாட்சா முத்துராமலிங்கம், மாவட்ட ஆட்சித் தலைவர் பா விஷ்ணு சந்திரன், பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன், திருவாடனை சட்டமன்ற உறுப்பினர் இராம.கருமாணிக்கம் ஆகியோர் திறந்து வைத்தனர். உடன் பரமக்குடி சார் ஆட்சியர் அப்தாப், கீழ் வைகை வடிநிலக்கோட்ட செயற்பொறியாளர் கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.

# சரித்திரம் படைத்துவரும் கழக இருசக்கர வாகனப் பேரணி!

**கோ**டிக்கணக்கான மக்களின் ஆதரவுடன் ஜனநாயகக் களத்தில் புதிய எழுச்சியை ஏற்படுத்தியிருக்கிறது தி.மு.க. இளைஞர்களின் இருசக்கர வாகன பேரணி. சேலத்தில் டிசம்பர் 17ம் தேதி நடைபெறவுள்ள மாநில உரிமை மீட்புக்கான கழக இளைஞர் அணியின் 2 ஆவது மாநில மாநாட்டின் முழக்கத்தை தமிழ்நாட்டின் பட்டிதொட்டியெங்கும் சேர்க்கின்ற விதமாக, 188 இரு சக்கர வாகனங்களைக் கொண்ட DMKriders வாகனப் பேரணியை முக்கடல் சங்கமிக்கும் கன்னியாகுமரியில் தி.மு.க. இளைஞரணி செயலாளர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிறார். அவர் தொடங்கி வைத்த அந்தப் பேரணி மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும் கம்பீரமாக பயணித்து வருகிறது.

பொதுமக்களின் பேராதரவுடன் பயணிக்கும் இளைஞர் படையை எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் என் தொகுதி மானாமதுரையில் கழக நிர்வாகிகளுடன் நான் வரவேற்றது மிகுந்த மகிழ்ச்சியளிக்கிறது. ஒன்றிய அரசு தமிழ்நாட்டை எப்படியெல்லாம் வஞ்சித்து வருகிறது என்பதை மக்களிடம் எடுத்துரைத்து வருகிறார்கள் கழக இளைஞர்கள். பா.ஜ.க. செய்யும் கீழ்த்தரமான மதவாத, மொழி ஆதிக்க, மானுட விரோத செயல்களை மக்களிடம் அம்பலப்படுத்தி வருகிறார்கள். கூட்டாட்சி தத்துவத்தை சிதைத்துள்ள பா.ஜ.க. அரசிடம் இருந்து மாநில உரிமைகளை மீட்பதற்கான அவசியத்தை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் புரியும் வகையில் பரப்புரை செய்கிறார்கள். அதுமட்டுமல்ல, கழகத்திற்கும் ஆட்சிக்கும் தலைவரான மு.க.ஸ்டாலின் அவர்கள், மக்களுக்கு செய்துவரும் மகத்தான திட்டங்களையும் பட்டியலிட்டு வருகிறது இந்த இளைஞர் பட்டாளம்.

**தமிழரசி ரவிக்குமார்**
முன்னாள் அமைச்சர்
மாநில. தொண்டரணி இணை செயலாளர்
மானாமதுரை தொகுதி
சிவகங்கை



குறிப்பாக, கட்டணமில்லா பேருந்து பயணம் மூலம் மாதந்தோறும் குறைந்தது ஆயிரம் ரூபாய் சேமிக்க முடிவதையும், புதுமைப் பெண் திட்டத்தின் மூலம் மாணவிகள் ஆண்டுதோறும் 12,000 ரூபாய் பெறுவதையும், கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத்தின் மூலம் மகளிருக்கு மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுவதையும் வரிசையாக பட்டியலிடுகின்றனர். இதன் மூலம் பெண்களின் பொருளாதார நிலையில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தையும், அவர்களிடம் பணப்புழக்கம் அதிகரிப்பதையும், கழக இளைஞர்கள் மக்களிடம் எடுத்துரைப்பதை பார்க்கும் போது என்னைப்போன்ற கழக நிர்வாகிகளுக்கு மிகுந்த மகிழ்ச்சியும், உற்சாகமும் ஏற்படுகிறது. குழந்தைகளின் பசி தீர்க்கும் காலை உணவுத்திட்டத்திற்காக தாய்மார்கள் ஆனந்தக் கண்ணீருடன் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி சொல்வதையும் இந்த பேரணியில் காண முடிந்தது.

பேரணியாக செல்லும் இளைஞர்களுக்கு குடிநீர் வேண்டுமா, உணவு வேண்டுமா எனக் கேட்டு மக்கள்வழங்குவதைபார்க்கும்போது தி.மு.க.விற்கும் பொதுமக்களுக்குமான பந்தம் எந்தளவிற்கு ஆழமாக இருக்கிறது என்பது மீண்டும் உணர்த்தப்படுகிறது. இப்படி இந்த பேரணியில் என்னால் காண முடிந்த ஏராளமான அம்சங்களை பட்டியலிட்டுக்கொண்டே செல்ல முடியும். நாளைய தலைமுறையின் நம்பிக்கை “திராவிட முன்னேற்றக் கழகம்” என்பதை இந்த பேரணி அழுத்தமாக கூறுகிறது.

சமூக வலைதளங்களில் அதிகமாக தற்போது பகிரப்படும் செய்திகளில் நம்முடைய இளைஞர்களின் இரு சக்கர வாகன பேரணியும் ஒன்று. இதுபோன்ற நிகழ்வுகள் பா.ஜ.க.விற்கும் அதன் ரகசிய கூட்டாளியான அ.தி.மு.க.விற்கும் நிச்சயம் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. இது அந்த கட்சியினரின் சமீபத்திய நடவடிக்கைகள் மூலம் தெள்ளத்தெளிவாக அம்பலமாகியுள்ளது. அதைப் பொறுத்துக்கொள்ள முடியாமல் தான் ஒன்றிய அரசும், அ.தி.மு.க. போன்றோர்கள் தி.மு.க. மற்றும் அரசுக்கு எதிராக மனசாட்சியே இல்லாமல் வடிகட்டிய பச்சை பொய்யை பரப்புகின்றனர். இந்த பொய்யான செய்திகளை மக்களிடம் கொண்டு சென்று அம்பலப்படுத்தி வருகிறார்கள் நமது கழக இளைஞர் அணியினரால் கரை வேட்டிக்காரர்கள் போல் நியமனப்பதவியில் இருப்பவர்களின் முகத்திரை களும் இங்கே கிழிக்கப்படுகின்றன.

உத்தமர் காந்தியைக் கொன்ற கொடியவன் கோட்சே தூக்கிலிடப்பட்ட நாளில், கோட்சே வாரிசுகளின் அரசியல் அதிகார அராஜகத்தை எதிர்த்து, தந்தை பெரியார் - பேரறிஞர் அண்ணா - முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியோரின் கொள்கை வாரிசுகளான கழக உடன்பிறப்புகள் உரிமைப் போருக்கான ஆற்றல் மிக்க ஜனநாயகப் படையின் வீரர்களாக இருசக்கர வாகனத்தில் கழக இளைஞர்கள் பயணித்து வருகின்றனர். சாலையில் கட்டுக்கோப்புடனும் மிகுந்த கண்ணியத்துடனும் பயணிக்கும் இவர்கள் தமிழ்நாட்டு இளைஞர்களுக்கு முன்மாதிரியாக திகழ்கின்றனர்.

கருப்புசிவப்பு சீருடையுடன் பயணிக்கும் இளைஞர் படை, பாசிஸ்டுகளை விரட்டி மாநில உரிமைகளை மீட்பதற்கான ஜனநாயகப் போரில் மிகப்பெரிய பங்கு வகிக்கின்றனர். 13 நாட்கள் 234 தொகுதிகள் 504 பிரச்சார மையங்கள் 8,647 கிலோமீட்டர் என கோடிக்கணக்கான இளைஞர்களை சந்தித்துவரும் இந்த இருசக்கர வாகனப் பேரணி, கழக வரலாற்றில் என்றைக்கும் நிலைத்திருக்கும்.

### சேலத்தில் நடைபெறும் இளைஞர் அணி மாநாட்டில்

# வேலூர் மாவட்டக் கழகத்தினர் திரளாக பங்கேற்போம்!

## மாவட்டச் செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

வேலூர், நவ. 30 - வேலூர் மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழு கூட்டம் மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் நடந்தது. கூட்டத் திற்கு மாவட்ட அவைத்தலைவர்தி.அ.முகமது சகிதலைமை தாங்கினார்.

சிறப்புஅழைப்பாளராக மாவட்ட தி.மு.கசெயலாளரும், அணைக்கட்டு சட்டமன்ற உறுப்பினருமான ஏ.பி.நந்தகுமார் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இதில் மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன் எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எம்.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த குமார், முன்னாள் எம்.எல்.ஏ.கள் டாக்டர்வீ.எஸ். விஜய், ஞானசேகரன், ப.நீலகண்டன், மற்றும் என். சுப்பிரமணியன், கே. விகுப்பம் தொகுதி பொறுப்பாளர் சிவா மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறை வேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:

17.12.2023 அன்று கழக இளைஞரணி இரண்டாவது மாநில மாநாடு கழகத் தலைவர் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டுதலின்படி கழக இளைஞரணி செயலாளர் இளைஞர்களின் எழுச்சி நாயகர் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் சீரிய தலைமையில் சேலத்தில் நடைபெற உள்ளது. மாநாட்டில் நமது மாவட்டத்திற்கு உட்பட்ட இளைஞரணி நிர்வாகிகள் சீருடை அணிந்து திரளாக கலந்து கொண்டு கழக பொதுச்செயலாளர் நீர்வளம் கனிம வளம் மற்றும் சுரங்கத் துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கும் வேலூர் மாவட்ட தி.மு.க.விற்கும் நற்பெயர் ஈட்டித் தர வேண்டுமாய் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப் படுகிறது.

சமூக நீதி சமத்துவம் சகோதரத்துவம் மொழிப் பற்று இனப்பற்று ஆகிய சித்தாந்தத்தை உள்வாங்கி கடந்த 100 வருடங்களுக்கும் மேலாக திராவிட கொள்கையின் ஆழ்ந்த பற்று கொண்டு இன்று வரை மனிதத்தை போற்றி வளர்த்தெடுக்க சமத்துவ பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், ஆகியோர்களின்வழியில் கழகத் தலைவர் மற்றும் இளைஞர் அணி செயலாளர் ஆகியோர்கள் முன்னெடுக்கும் முற்போக்கு சிந்தனையின் வாயிலாக இந்தியாவில் இட ஒதுக்கீடு கொள்கையை அமல்படுத்திய சமூக சீர்திருத்த சிற்பி முன்னாள் இந்திய பிரதமர் மேதகு வி.பி .சிங் அவர்களுக்கு சென்னையில் சிலை அமைத்து நாடே மெச்சும் வண்ணம் திறப்பு விழாவை நடத்திக் காட்டிய கழக தலைவர் மாண்புமிகு தளபதி அவர்களுக்கு வேலூர் மாவட்ட தி.மு.க. சார்பில் பாராட்டையும் வாழ்த்தையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

2024ஆம்ஆண்டு நடைபெற உள்ள நாடாளுமன்ற தேர்தலில் 40ம் நமதே, நாடும் நமதே, என்ற கழக தலைவரின் வெற்றி முழக்கத்தை பிரதிபலிக்கும் வகையில் நமது மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து அமைப்புகளின் நிர்வாகிகளும் பி .எல் .ஏ 2 மற்றும் பி .எல். சி ஆகியோர்கள் கூட்டணி தோழமை கட்சியோடு இணைந்தும் பாசிச பா.ஜ.க. அரசையும் தமிழின துரோகிகள் அடிமை அ.தி.மு.க.வையும் தேர்தலில் தோல்வியுற்று புறமுதுகிட்டு மண்ணை கவ்வும் வகையில் அயராது தேர்தல் பணியாற்றி வெற்றிக்கனியை பறித்து கழக தலைவரின் கரங்களில் சேர்த்திட ஆயத்தமாகும் என நிர்வாகிகளை கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் வி. தயாநிதி எஸ் .கதிரேசன் மணிமாறன் மாப.அன்புநிதி ஜி .லோகநாதன் சிவகுமார் ஏ.கண்ணன் ஆலியார் அர்ஷத் அகமத், மாவட்ட துணை செயலாளர்கள் ஜி.எஸ். அரசு , எஸ். பாண்டியன், மலர்விழி லோகநாதன் , மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன் மாநகர அவை தலைவர் கோவிந்தன் என்ற சூரி, துணை மேயர் எம்.சுனில்குமார், மாநகர துணை செயலாளர்கள் முன்னாசெரீப், ஏ.தேவநேசன் தங்கமணி ஆனந்தன், மாநகர பொருளாளர் அசோகன், ஒன்றிய செயலாளர்கள், பகுதி செயலாளர்கள், அணிகளின் நிர்வாகிகள், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டதி.மு.க. அலுவலகத்தில் அவசர செயற்குழு கூட்டத்தில் மாவட்டக் கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ, பேசினார். அருகில் மாவட்ட அவைத்தலைவர் தி.அ.முகமதுசகி, மாநகரச் செயலாளர் ப.கார்த்திகேயன்எம்.எல்.ஏ, குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், மாவட்ட ஊராட்சி குழு தலைவர் எம்.பாபு, மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்தகுமார், முன்னாள் எம்.எல்.ஏ.க்கள் டாக்டர்வீ.எஸ். விஜய், ஞானசேகரன், ப.நீலகண்டன், மற்றும் என்.சுப்பிரமணியன்,கே.வி. குப்பம்தொகுதிபொறுப்பாளர் சிவா மற்றும் கழகநிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் மாநகராட்சி அறிஞர் அண்ணா அரசு மேல்நிலைப்பள்ளியில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் கும்பகோணம் பரஸ்பர சகாய நிதி லிமிடெட் மற்றும் கும்பகோணம் மாநகராட்சி சார்பில் கட்டப்பட்டுள்ள இயற்பியல் மற்றும் வேதியியல் ஆய்வக புதிய கட்டிடத்தினை நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு திறந்து வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.கல்யாணசுந்தரம், மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், நகராட்சி நிர்வாக இயக்குநர் க.சிவராசு, மாவட்ட ஆட்சித்தலைவர் தீபக் ஜேக்கப், சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன் (திருவையாறு), க.அன்பழகன் (கும்பகோணம்), மாநகராட்சி துணை மேயர் சு.ப.தமிழழகன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

### கரூர் மாவட்டத்திற்கு வருகை தந்த

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா - தேர் அலங்கார ஊர்தி!

## கழகத்தினர் உற்சாக வரவேற்பு!

கரூர், நவ.30-

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி முத்தமிழ்த் தேர் அலங்கார ஊர்தி வருகைக்கு கரூர் மாவட்டத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு கலைஞர் அவர்களின் புகழை போற்றிடும் வகையில் 'எழுத்தாளர் கலைஞர்" குழுவின் சார்பில் "முத்தமிழ்த்தேர்" அவங்கார ஊர்தி கரூர் மாவட்டம் புன்னம் சத்திரம் வந்தது. மாவட்ட ஆட்சித்தலைவர் மீ.தங்கவேல் மலர்தூவி வரவேற்று முத்தமிழ்த் தேரினை திறந்து வைத்து பார்வையிட்டார். அரவக்குறிச்சி தொகுதி எம்.எல்.ஏ. ஆர். இளங்கோ முன்னிலை வகித்தார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு அவ்விழாவினை தமிழகம் முழுவதும் சிறப்பாக கொண்டாடிடும் வகையில் முதலமைச்சர் அவர்களால் 12 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்றாக"எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட் டிற்கு ஆற்றிய அரும்பணிகள் மற்றும் அவரது. பரிமாணங்களை போற்றிடும் வகையில் பல்வேறு முன்னெடுப்புக்கள் சிறப்பாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அந்த வகையில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் புகழுக்கு புகழ் சேர்க்கின்ற வகையிலும், இன்றைய தலைமுறையினர்களுக்கு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பன்முகத்தன்மையை எடுத்துக் கூறும் வகையிலும் எழுத்தாளர் கலைஞர் குழுவின் சார்பில், கலைஞர் அவர்களின் புகழ் பாடும் 'முத்தமிழ்த்தேர்' அலங்காரஊர்தி பவனி வருகிறது.

முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடங்கி 04.11.2023 முதல் 05.12.2023 வரை அனைத்து மாவட்டங்களுக்கு பயணிக்கின்ற வகையில் திட்டமிடப் பட்டுள்ளது

1. புன்னம் சத்திரம் பேருந்து நிலையம் (கரூர் செல்லும் வழி) 2கரூர் பேருந்து நிலையம். 3 குமாரசாமி பொறியியல் கல்லூரி எதிரில் (சேலம் செல்லும் வழி) ஆகிய மூன்று இடங்களில் காட்சிப்படுத்தப் பட்டது.

கரூர் பேருந்து நிலையத்தில் நடைபெற்ற விழாவில் கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி தலைமையில் கரூர் மாநகராட்சி மேயர். க. கவிதா முன்னிலையில் மலர்தூவி பொதுமக்கள் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் வரவேற்றனர் குமாரசாமி பொறியியற் கல்லூரி அருகே நடைபெற்ற நிகழ்ச்சியில் பொதுமக்கள் மற்றும் பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவிகள் மலர் தூவி வரவேற்றனர்.

"முத்தமிழ்த்தேர் அலங்கார ஊர்தி வருகை முன்னிட்டு மாவட்ட விளையாட்டு மைதானத்தில் 100 மரக்கன்றுகளை நடும் பணியினை மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி வைத்தார்.

இந்திகழ்வில் மாவட்ட சமூக நல அலுவலர் ஷிகா சுந்தரி, தனித்துணை ஆட்சியர் சைபுதீன் ஒருங்கிணைப்பு மேற்கொண்டனர்.

இந்திகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம.கண்ணன் கரூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார். மண்டல தலைவர்கள் எஸ். பி.கனகராஜ், ஆர்.எஸ். ராஜா, சக்திவேல் மற்றும் உள்ளாட்சிப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

### ஆயிரம் பேர் ரத்தம் சிந்தி போராடினாலும் பெறமுடியாத திட்டத்தை

# "ஒரு துளி பேனா மையால் நிறைவேற்றித் தந்தவர் கலைஞர்!"

## இலவச பட்டா வழங்கும் நிகழ்வில் பூண்டி கே.கலைவாணன் புகழாரம்!

திருவாரூர், நவ.30-

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு திருவாரூர் மாவட்டம், கொரடாச்சேரி ஒன்றியம், தேவகண்டநல்லூர் கிராமத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைதுறையின் சார்பில் நன்னிலம் மற்றும் குடவாசல் வட்டத்திற்குட்பட்ட கிராமங்களில் வசிக்கும் 1212 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 22 லட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டு மனைப்பட்டாவினை சட்டமன்ற உறுப்பினர் பூண்டி.கே.கலைவாணன் வழங்கினார். எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஊராட்சி பெருந்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு, துணைத்தலைவர் சேகர் கலியபெருமாள், ஒன்றிய பெருந்தலைவர்கள் புலிவலம் ஏ.தேவா, உமாராணி பாலச்சந்திரன், மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ ஆகியோர் உடனிருந்தார்.

மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்வில் திருவாரூர் வட்டத்திற்குட்பட்ட 782 பயனாளிகளுக்கு தலா ரூ.45000 மதிப்பீட்டிலும், நன்னிலம் வட்டத்திற்குட்பட்ட 200 பயனாளிகளுக்கு தலா ரூ.30000 மதிப்பீட்டிலும், குடவாசல் வட்டத்திற்குட்பட்ட 230 பயனாளிகளுக்கு தலா ரூ.48000 மதிப்பீட்டிலும் என 1212 பயனாளிகளுக்கு ரூ.5 கோடியே 22 இலட்சத்து 30 ஆயிரம் மதிப்பீட்டிலான இலவச வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டது.

இந்த விழாவில் பேசிய பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தமது உரையின்போது,

"மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் தொலைநோக்கு பார்வையுடன் அன்றே இலவச வீட்டுமனைப் பட்டாக்களை குடும்பத் தலைவியின் பெயரிலேயே வழங்கி பெண்களுக்கு பெருமை சேர்த்தவர். பொதுவுடைமை இயக்க தலைவர்களில் ஒருவரான நமது மாவட்டத்தை சேர்ந்த மணலி சி.கந்தசாமி அவர்கள், மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் தந்த இலவச மனைப் பட்டா திட்டத்தை பற்றி கூறும்போது, "ஆயிரம் பேர்போராடி ரத்தம் சிந்தினாலும் பெறமுடியாத இலவச மனைப்பட்டா திட்டத்தை, ஒரு துளி பேனா மையால் கையெழுத்திட்டு நிறைவேற்றித்தந்தவர் கலைஞர்" என்று பெருமைப்பட தெரிவிக்கிறேன்.

தமிழ்நாட்டில் மண்ணின் மைந்தர் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் ஆட்சியில் பெண்கள் சமையலறையில் படும் அவதியை அறிந்து இலவச கேஸ் இணைப்பு தந்தார், அதேபோல் பெண்கள் திருமண உதவி திட்டத்தை அறிமுகப்படுத்தி அதற்கு அளவு கோளாக எட்டாம் வகுப்பு, பத்தாம் வகுப்பு, பனிரெண்டாம் வகுப்பு என கல்வித்தகுதிகளை படிப்படியாக உயர்த்தி அதன்வழியாக பெண்களின் கல்வியை உயர்த்தினார். அதன் வழி தொடரும் திராவிட நாயகர் முதல்வர் தளபதி அவர்கள் பெண்களுக்கு மேலும் பெருமை சேர்க்கும் வகையில் புதுமைப்பெண் திட்டம், பெண்கள் உரிமைத்திட்டம், இலவச பேருந்து பயணம் என பல அறிய திட்டங்களை தந்து பெண்களின் மேன்மையை உலக அரங்கில் உறுதிப்படுத்தி வருகிறார். பெண்களின் முன்னேற்றம் மட்டுமே குடும்பத்தின் முன்னேற்றம், அதுவே நாட்டின் முன்னேற்றம் என பொற்கால ஆட்சியை தளபதி அவர்கள் நாடே போற்றும் வகையில் தந்துவருகிறார் என்று குறிப்பிட்டார்.

முன்னதாக திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட தனியார் மண்டபத்தில் தொழில் முதலீடுகளை ஈர்க்கும் வகையில் குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கான சிறப்பு நோக்கு கூட்டம் நடைபெற்றது

இந்த கூட்டத்தில் பூண்டி. கே.கலைவாணன் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சித்தலைவர் சாருஸ்ரீ மற்றும் எம்.செல்வராஜ் எம்.பி., மாவட்ட ஊராட்சித்தலைவர் தலையாமங்கலம் ஜி.பாலு ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் சண்முகநாதன், நகர் மன்ற உறுப்பினர் வாரை. எஸ்.பிரகாஷ், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் இரா.சங்கர், ஒன்றியக்குழு உறுப்பினர் திருமதி.உமா மகேஸ்வரி, ஊராட்சிமன்றத்தலைவர் கேப்டன் எம். ரவி, வட்டாட்சியர் நக்கீரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரில் தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் மேம்பாட்டு நிதியில் இருந்து ரூ. 10 லட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்டுள்ள பயணியர் நிழலகத்தினை சட்டத்துறை அமைச்சர் எஸ்.ரகுபதி திறந்து வைத்தார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவருமான என்.கௌதமன், சட்ட மன்ற உறுப்பினர்கள் முகமதுஷாநவாஸ், நாகைமாலி, நாகை நகர்மன்ற தலைவர் இரா.மாரிமுத்து, தலைஞாயிறு ஒன்றியக் கழகச் செயலாளர் மகா.குமார், நாகை நகரக் கழக நிர்வாகிகள் பி.திலகர், அபுபக்கர் மற்றும் பலர் உள்ளனர்.

# ஆற்றலின் பிறப்பிடம் - வீரத்தின் மணிமகுடம் - எழுச்சிமிகு இளம் தலைவர்!



தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றில் நான்காம் தலைமுறை கண்ட இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். பேரறிஞர் அண்ணாவால் உருவாக்கப்பட்டு தலைமையேற்று நடத்தப்பட்ட திராவிட இயக்கம் தி.மு.க.

தமிழுக்காக. தமிழ் மக்களின் உரிமைக்காக தமிழ்நாட்டின் உயிர்நாடியாக இருந்து ஒட்டுமொத்த மக்களின் நெஞ்சங்களில் நீங்காஇடம்கொண்டு இப்பொழுதும் இதய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் வீரமும் விவேகமும் ஆற்றலும் எழுச்சியும் ஒருங்கிணைந்த தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 50 ஆண்டுகாலம் கட்டிக் காத்த தி.மு.க.

50 ஆண்டுகாலத்திற்கு மேலாக தன்னை முழுமையாக இளம் வயதிலிருந்து தி.மு.க. வின் வளர்ச்சிக்காக முன்னேற்றத்திற்காக ஒட்டுமொத்த இளைஞர்களையும் அரவணைத்து கட்டி காத்து கழகத்தில் இணைத்து மாபெரும் உழைப்பாளியாக எழுச்சிமிகு முன்னணி தொண்டராக தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நமக்காக உழைக்கும் ஒரு புனிதமான நேர்மையான மனிதநேயமிக்க ஒரு தலைவர் இருக்கிறார் என்கிற மன உறுதியில் மூத்தவர் முதல் இளைஞர்கள் வரை அனைத்து மக்களும் விரும்புகிற திராவிட இயக்கத்தின் எழுச்சிமிகு முன்னோடிகள் மூத்த தலைவர்கள் தொண்டர்கள் நகர்புற கிராமப்புற நிர்வாகிகள் உட்பட அத்துனை பேரையும் பெயர் சொல்லி அழைக்கிற அளவுக்கு உரிமையோடு அவர்களின் குடும்ப பாசத்துடன் மூத்தவர்களுக்கு தம்பியாக இளையவர்களுக்கு அண்ணனாக தமிழ்நாடு முழுமையாக கிராமங்களில். நகரங்களில். கால் வைக்காத இடமே இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு செயல்பட்டு இன்றைக்கு கழகத்தை கட்டிக்காத்து வருகிறார் எழுச்சிமிகு தலைவர் தளபதி.

கழகத்தையும் கட்டிக் காத்து மக்கள் செல்வாக்கோடு ஆட்சியிலும் அமர்ந்து மக்கள் பணி மகத்தான பணியாக. சமூக நீதியை நிலைநாட்டி எந்த நாளும்வாழ்வில் முன்னேற்றம் இல்லையே என்று ஏங்கிக் கிடந்த ஒட்டுமொத்த தமிழர்கள் வாழ்வில் கல்வியில் தொழிலில் விவசாயத்தில் மக்களின் அடிப்படை உரிமைகளை பெற்றிட பெண்கள் முன்னேற்றத்திற்காக ஆட்சியை முன்னிலைப்படுத்தி எல்லா மக்களையும் கட்டிக் காத்து அரவணைத்து ஏசினாலும் தூற்றினாலும் போற்றினாலும் எதைப்பற்றியும் கவலைப்படாமல் ஞானிகளை போல் யோகிகளை போல் அனை வரையும் அரவணைத்து ஆதரித்து கட்டிக் காத்து ஆட்சியை நடத்துகிற போற்றுதலுக்குரிய மக்களின் தலைவர்களாக பேரறிஞர் அண்ணா அவர்களும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களும் வாழ்ந்தார்கள்.



**கோவை**
**கே.செல்வராஜ்**
முன்னாள் எம்.எல்.ஏ.
கழக செய்தி தொடர்பு
துணைச் செயலாளர்

தமிழ்நாட்டில் இளம் தலைவராக மக்களின் நம்பிக்கை பெற்றவராக ஒட்டுமொத்த இளைஞர்களின் ஆற்றலுக்கும் செயலுக்கும் போற்றுதலுக்கும் உரிய மனிதநேய மிக்க நாயகனாக உதயநிதி ஸ்டாலின் செயல்படுகிறார்.

எப்பொழுதெல்லாம் ஒன்றிய அரசின் மூலம் மக்களுக்கு பாதிப்பு வருகிறதோ அப்பொழு தெல்லாம் முதல் குரலாக ஓங்கி ஒலிக்கும் அந்த மன உறுதியும் மன தைரியமும் துணிச்சல் மிக்க இளம்தலைவர்.

இன்றைய தமிழக இளைஞர்கள் தங்களுக்கு பாதுகாப்பான ஒரு மாவீரன் கிடைத்திருக்கிறார் என்று போற்றுகிறார்கள், பாராட்டுகிறார்கள். இளம் தலைவர் தி.மு.க. இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் தலைமையேற்று செயல்பட லட்சக்கணக்கான இளைஞர்கள், மாணவர்கள். இளம் மகளிர் அணிவகுத்து உறுதியேற்று இருக்கிறார்கள்.

தமிழ்நாட்டில் 60 வயதுக்கு மேலான மூத்த முன்னோடிகள் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆட்சியும் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியும் கட்சிப் பணிகளும் அறிந்திருப்பதற்கு வாய்ப்புண்டு திராவிட இயக்கத்தின் செயல்பாடுகள் தெரிந்திருப்பதற்கு வாய்ப்புண்டு.

ஆனால் 18 வயதில் இருந்து 45 வயதுக்குள் இருக்கிற இளைஞர்களுக்கு திராவிடம் செய்த சாதனைகள் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் தெரிந்திருப்பதற்கு வாய்ப்பில்லை 1967இல் இருந்து 197 5 வரை நடைபெற்ற ஆட்சியிலும் 1996 இல் இருந்து 2001வரை நடந்த ஆட்சியிலும் 2006 இல் இருந்து 2011 வரை நடந்த ஆட்சியிலும் செய்த சாதனைகள் தெரிவதற்கு வாய்ப்புகள் குறைவு .

திராவிடம் என்றால் என்ன என்று தெரியாத ஒரு சில இரண்டு வருட மூன்று வருட கற்றுக் குட்டி அரசியல் தலைவர்கள் என்ற பெயரில் செயல்பட்டு வரும் நபர்களுக்கு தமிழ்நாட்டின் வரலாறும் தெரியாது, திராவிட வரலாறும் தெரியாது, மக்களின் வளர்ச்சியைப் பற்றி தெரியாது, தி.மு.க. ஆட்சியின் சாதனைகளைப் பற்றியும் தெரியாது பெண்ணுரிமையைப் பெற்றுக் கொடுத்தது, தெரியாது. இந்தியாவிலேயே தமிழ்நாடு சிறந்த மாநிலமாக எழுச்சியோடு செயல்பட்டு வருவது தெரியாது

1980 இல் ஆரம்பிக்கப்பட்டு சுயநல கட்சியான பி.ஜே.பி. கட்சிக்கு தமிழகத்தின் ஒட்டுமொத்த வரலாறும் தெரியாது.

வாழ்நாள் முழுவதும் பொய்யும் புரட்டும் பித்தலாட்டமும். மதவெறி ஜாதி வெறி ஆன்மீகம் என்ற பெயரில் போலி வேஷம் போடும் கூட்டத்தை புற முதுகிட்டு ஓடும் அளவுக்கு மன உறுதியோடு தைரியமாக எழுச்சியோடு மக்களின் நாயகனாக இளைஞர்களின் இதயத்துடிப்பாக செயல்பட்டு சனாதனம் மக்கள் விரோத செயல் என்பதை தோல் உரித்துக் காட்டிய இளம் தலைவர்.

2019ல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலிலும் 2021 இல் நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலிலும் உள்ளாட்சி மன்றத் தேர்தலிலும் தன்னுடைய எழுச்சிமிகு உரையால் பி.ஜே.பி.யின் பொய்யான உறுதிமொழியை ஒரே செங்கலை உயர்த்தி காட்டி ஒட்டுமொத்த தமிழக மக்களையும் தன் வசமாக்கி 100 சதவீத வெற்றியை திமுககூட்டணிக்கு பெற்றுக் கொடுத்த இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள். எடுத்த காரியத்தை முடிக்கும் ஆற்றல்மிக்க அற்புதமான இளம் தலைவர் வெற்றி வீரர் சில நாட்களுக்கு முன்பு இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசாததை பேசியதாக பிஜேபி ஒரு கருத்தை சொல்லி எப்படியாவது இவர் பயந்து விடுவார் அடங்கி விடுவார். அமைதியாகி விடுவார் என்று ஒரு மாயத் தோற்றத்தை அவர்களே உருவாக்கி குரல் கொடுத்து பார்த்தார்கள்.

இந்தியா முழுவதும் வெத்து கோஷங்களை போட்டு பேசிப் பார்த்தார்கள் .போலி சாமியார்களை கோஷம் போடவைத்தார்கள். அந்த தகுதி இல்லாத கோஷத்தை அடக்கிக் காட்டி நான் எடுத்த முடிவில் மாற மாட்டேன் - சொல்லிய சொல்லிலிருந்து பின் வாங்க மாட்டேன், மனசாட்சி யோடு செயல்படுவேன். மக்களுக்காக உழைப்பதில் பின்வாங்க மாட்டேன், மக்கள் விரோதச் செயலை கடுமையாக எதிர்ப்பேன் என்று கூறி உரத்த குரலில் மன உறுதியோடு கர்ஜித்த இளம் சிங்கம் அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடைய குரலுக்கு முன்னால் பி.ஜே.பி. என்கிற இயக்கம் அடங்கிவிட்டது சொல்லப் போனால் அடக்கப்பட்டுள்ளது .

இந்தியா முழுவதும் ஒட்டுமொத்த மக்களும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை பார்க்க வேண்டும் என்று விரும்புகிறார்கள் எல்லா மாநிலங்களிலும் ஆட்டம் போட்டவர்கள் அமைதியாகிவிட்டார்கள்

தமிழ்நாட்டின் அரசியல் வரலாற்றில் தமிழ்நாட்டில் திராவிடம் என்றால் என்ன, அதனுடைய கொள்கை என்ன, லட்சியம் என்ன, எத்தனை கொள்கை மறவர்கள் உயிர்த்தியாகம் செய்து தங்களை கொள்கைக்காக மாய்த்துக் கொண்ட தியாகிகளால் வளர்த்த இயக்கம் தி.மு.க. என்பதை இப்பொழுது இருக்கிற இளைஞர்களுக்கு சுமார் 50 வயது வரை இருப்பவர்களுக்கு கூட தெரியாது. ஒட்டுமொத்த மக்கள் தொகையில் தமிழகத்தில் 55 சதவீதம் பேர் 18ல் இருந்து 60 வயசு வரை உள்ளவர்கள் அத்தனை பேருக்கும் எதுவும் நேரடியாக தெரியாது. படித்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும் .

அப்படிப்பட்ட நிலைப்பாட்டில் தமிழ்நாட்டில் ஒட்டு மொத்த மக்களுக்கும் 75 ஆண்டுகால தி.மு.க. வின் வரலாற்றைத் தெரிவிப்பதற்கு நேரடியாக எடுத்துச் சொல்வதற்கு தொலைக்காட்சி வாயிலாக, தினசரி பத்திரிக்கைகள் வாயிலாக, அறிக்கைகள் வாயிலாக, விவாதங்கள் வாயிலாக, ஒட்டு மொத்த மக்களும் தெரிந்து கொள்கிற அளவுக்கு உடனுக்குடன் பி.ஜே.பி. கட்சியின் போலி விமர்சனம், தமிழ்நாடு ஆளுநரின் அடாவடித்தனத்துக்கும் பதில் சொல்லுகிற விதத்தில் மற்றவர்களுடைய பணத்தில் நன்கொடை என்ற பெயரில் பணத்தை பெற்று வாழ்க்கை நடத்தும் தலைவர் என்கிற பெயரில் செயல்படுபவருக்கும் உடனுக்குடன் பதில் சொல்லுகிற நிலையில் தி.மு.க.வின் தலைவர்கள், அமைச்சர்கள், பதில் அளித்தும் 75 ஆண்டுகாலம் தி.மு.க. மக்களுக்கு ஆற்றிய செயல்களை இந்த புரியாத மனிதர்களுக்கு புரியும் விதத்தில் பதிலளித்து பேசிய உரைகள் அற்புதம். மக்களுக்கு 75 ஆண்டு கால தி.மு.க. செயல்களை. சாதனைகளை எடுத்துச் சொல்வதற்கான ஒரு வாய்ப்பை இவர்கள் கொடுத்ததற்கு நன்றி.

தமிழ்நாடு அரசியல் வரலாற்றில் இளம் தலைவராக வலம் வந்து அரசுப் பணிகளை ஆய்வு செய்து, விளையாட்டு வீரர்களை உருவாக்கி உலக அளவில் மாபெரும் சாதனை படைக்கும் அளவுக்கு பயிற்சி கொடுத்து அவர்களுக்கு எல்லா உதவிகளும் செய்து உலக விளையாட்டு அரங்கில் ஏராளமான தங்கப்பதக்கம், வெள்ளி பதக்கம், வெண்கலப்பக்கம் பெற்று தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்த்த விளையாட்டு வீரர்களை உருவாக்கி செயல்பட்டு வரும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள்

தமிழ்நாட்டில் படிப்பதற்கு வசதி வாய்ப்பு இல்லாத மாணவ மாணவியர்களுக்கு நிதி உதவி செய்து அற்புதமான வாழ்வை அமைத்துக் கொடுக்கும் புதிய திட்டம் மூலம் தற்போது ஐ.ஏ.எஸ். ஐ.பி.எஸ். படிக்கும் மாணவ மாணவியர் தமிழ்நாட்டில் மிகக் குறைந்து இருந்த நிலையை மாற்றி இந்தியாவிலேயே அதிகமாக தேர்வு பெற்று மாவட்ட ஆட்சித் தலைவர்களாக காவல்துறை அதிகாரிகளாக வருவதற்கு வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுத்து எல்லா துறைகளிலும் தமிழ்நாட்டை முதல் இடத்திற்கு கொண்டு செல்ல அற்புதமாக உழைத்து வரும் இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை ஒட்டுமொத்த மக்களும் பாராட்டுகிறார்கள்.

சேலத்தில் டிசம்பர் 17ஆம் தேதி இளைஞர் அணி மாநாடு நடத்துவது புதிய வரலாற்றை எழுச்சியை ஒட்டு மொத்த இளைஞர்கள் மத்தியில் ஏற்படுத்துவது உறுதி.

தி.மு.க.வில் உழைத்த மூத்த முன்னோடிகளை. தலைவர்களை அரவணைத்து அவர்களைப் போற்றிப் பாராட்டி அவர்களுக்கு பொற்கிழி வழங்கிக் கௌரவித்து அவர்களின் நல்வாழ்த்துகள் பெற்று தமிழ்நாடு முழுவதும் அனைத்து தரப்பு மக்களின் நன்மதிப்பை பெற்று நல்வாழ்த்துக்கள் பெற்று பல்லாண்டு வாழ்ந்து மக்கள் பணியாற்ற வாழ்த்துகிறோம்.

உங்கள் தலைமையில் தமிழ்நாடு எழுச்சியோடு தளபதி அவர்கள் செய்து வரும் அத்தனை பணிகளுக்கும் உறுதுணையாக இருந்து மக்களாட்சித் தத்துவத்தை தாங்கள் நிலை நிறுத்துவீர்கள் என்று உறுதியாக நம்புகிறோம்.




விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் துடுப்பாக்கம் ஊராட்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் புனரமைக்கப்பட்ட குளத்தினை மக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தும் குளத்தினைச் சுற்றி நூற்றுக்கும் மேற்பட்ட மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்தார். உடன் ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார்,ஒன்றிய செயலாளர்கள் அண்ணாதுரை ,துரை, இளம்வழுதி ஆகியோர் உள்ளனர்.

கரூர் மாவட்டத்தில்

# மருத்துவமனை கட்டிடங்கள் திறப்பு விழா!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பங்கேற்பு!

கரூர். நவ. 30 -

கழக ஆட்சியில் மருத்துவத் துறை செய்து வரும் சாதனைகளை கரூர் மாவட்டத்தில் நடைபெற்ற மருத்துவமனை கட்டடங்கள் திறப்பு விழாவில், நாய் பாம்புக் கடிக்கு சுகாதார நிலையங்களில் மருந்துகள் வழங்கப்படுகிறது. இதயம் காப்போம் திட்டத்தில் ஆறாயிரத்திற்கும் மேற்பட்ட உயிர்கள் காப்பாற்றப்பட்டுள்ளன என சுகாதாரத் துறை அமைச்சர் மா.சுப்பிர மணியன் பட்டியலிட்டார்.

கரூர் மாவட்டம் செல்லாண்டிபாளையத்தில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன் ரூ4.70 கோடி மதிப்பீட்டில் நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம், மற்றும் துணை சுகாதார நிலையங்கள் செவிலியர் குடியிருப்பு ஆய்வு கட்டடம் என மாவட்டத்தில் 15 புதிய மருத்துவமனை கட்டடங்களை திறந்து வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் இரா.மாணிக்கம்(குளித்தலை) ஆர்.இளங்கோ (அரவக்குறிச்சி), க. சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்), கரூர் மாநகராட்சி மேயர் வெ. கவிதா, துணைமேயர் ப.சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பின்னர் அமைச்சர் மா சுப்பிரமணியன் பேசியதாவது:

அமைச்சர் செந்தில் பாலாஜி முயற்சியின் காரணமாக கரூர் மாவட்டத்திற்கு பல்வேறு நலத்திட்டபடிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன குறிப்பாக மருத்துவத் துறையில் இதுவரை இல்லாத அளவுக்கு திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன. தமிழ்நாட்டிலேயே எங்கும் இல்லாத அளவுக்கு கரூர் மாவட்டத்தில் கரூர் மற்றும் குளித்தலை என இரண்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை அமைக்கப்பட்டுள்ளது.

மக்களை தேடி மருத்துவம் இன்னுயிர் காக்கும் நம்மை காக்கும் 48. கலைஞரின் வருமுன் காப்போம். இதயம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்பு திட்டம் என்று ஏராளமான திட்டங்கள் இன்றைக்கு கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு குஜராத்தில் இருந்து 120 மருத்துவர்கள் தமிழ்நாட்டில் உள்ள மருத்துவ கட்டமைப்பினை பார்ப்பதற்கு வந்தார்கள். 120 மருத்துவர்களின் குழுக்கள் தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு மருத்துவ கட்டமைப்புகளை மூன்று நாட்கள் ஆய்வு செய்தார்கள். உறுப்பு தானம் மாற்று சிகிச்சைகள் இவை அனைத்தையும் பார்த்து ஆய்வு செய்துவிட்டு அவர்கள் நாங்கள் பார்த்த ஆய்வினை பத்திரிக்கை வாயிலாக தெரிவிக்க வேண்டும் என்று ஒப்புதல் கேட்ட போது அமைச்சர் என்ற முறையில் நானும் அந்த நிகழ்ச்சியில் பங்கேற்றேன்.

அப்பொழுது அந்த மருத்துவ நிபுணர்கள், நினைத்தே பார்க்க முடியாது. வெளிநாடுகளில் இல்லாத அளவிற்கு மருத்துவ கட்டமைப்புதமிழ்நாட்டில் இருக்கிறது. தமிழ்நாட்டில் உள்ள கட்டமைப்பில் உள்ள பத்தில் ஒரு பங்கு தங்கள் மாநிலத்தில் இல்லை என்று வெளிப்படையாகத் தெரிவித்தனர்.

ஒன்றிய துறை அமைச்சர் அவர்கள் சென்னைக்கு வந்தபோது நமது ஓமந்தூரார் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனை, கலைஞர் பண்ணோக்கு மருத்துவமனை, முதியோருக்கான சிறப்பு மருத்துவமனை, சைதாப்பேட்டை நகர்ப்புற நல வாழ்வு மையம், மறைமலை நகரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையம் இவற்றையெல்லாம் ஆய்வு செய்துவிட்டு பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கையில், நாங்கள் நினைத்தே பார்க்கவில்லை தமிழ்நாடு மருத்துவ கட்டமைப்பில் மிக சிறப்பாக இருந்து கொண்டிருக்கின்றது. கடந்த இரண்டு ஆண்டுகளாக தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் ராஜீவ் காந்தி மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவினை தொடங்கி வைத்தார்கள். அதை பார்த்து வந்தவர் பிரமித்து விட்டார்கள். பத்திரியைளர்களை சந்தித்து மருத்துவத்துறை பாராட்டிருக்கின்றார்கள். மிகப்பெரிய ஒருவர் தமிழ்நாடு மருத்துவதுறைக்கு சான்று அளித்து பெருமை. அளவிற்கு ஒன்றிய அரசின் சுகாதாரத் துறையின் செயலாளர் அவர்களே தமிழ்நாட்டின் மருத்துவ கட்டமைப்பினை குறித்து மிகவும் சிறப்பாக பாராட்டி இருக்கின்றார்கள். இப்படி தமிழ்நாட்டில் கரூர் மாவட்டம் மருத்துவத்துறையில் மிகச் சிறப்பான அளவிலான மகத்துவம் பெற்ற மாவட்டமாக விளங்கி வருகின்றது அமைச்சர் செந்தில் பாலாஜி அனைத்து அமைச்சர் இடத்திலும் அன்போடு பழகியும். நட்போடு பழகியும் கரூர் மாவட்டத்திற்கு தேவையானவற்றை கேட்டு பெற்று அவை நிறைவேற்று தருவதில் முன்னணி அமைச்சராக இருந்தவர். அதனால் தான் கரூர் மாவட்டத்திற்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவமனை திறந்து வைத்தார்கள். ஏற்கனவே ஐந்து சுகாதார நிலை யங்கள் துணை சுகாதார நிலையங்கள் இப்பொழுது பதினைந்து கட்டிடங்கள் திறந்து இருக்கின்றது. இன்னும் 25 கட்டிட பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இரண்டு மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைக்கு என்று 50 கோடி செலவில் பணிகள் முடித்து தொடங்கப்பட இருக்கின்றது. இவ்வளவு பணிகளும் நடைபெறுவதற்கு எல்லா வகையிலும் மாண்புமிகு அமைச்சர் செந்தில் பாலாஜி, மாண்புமிகு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் வழிகாட்டுதல், அறிவுறுத்தலையும் பெற்று கரூர் மாவட்டத்திற்கு நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றார்.

அனைத்து மருத்துவமனைகளிலும் பாம்பு நாய் கடிக்கும் மருந்துகள் அளிக்கப்படுகின்றது. கடந்த ஆட்சியில் இந்த மருந்துகள் கிடைக்காத நிலை இருந்தது. கழக ஆட்சியில் தான் 2286 ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புற சுகாதார நிலையங்களில் பாம்பு கடி மருந்து மற்றும் நாய் கடி மருந்து 2288 மருத்துவமனைகளிலும் இப்பொழுது மருந்து இருப்பு உறுதி செய்யப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆட்சியில் கிராமங்களில் குக்கிரமங்கள் மற்றும் மலைப்பகுதிகளில் பாம்பு மற்றும் நாய் கடிகளுக்கு கரூர் அரசு மருத்துவக் கல்லூரிக்கு அல்லது அரசு மாவட்ட தலைமை மருத்துவமளைக்கு வர வேண்டும் ஆனால் இப்பொழுது அந்த தேவை இல்லை அனைத்து கிராமப்புறங்களில் உள்ள அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களில் பாம்பு மற்றும் நாய்க் கடிக்கு ஆன மருந்துகள் கிடைக்கும் என்ற நிலை உருவாக்கி இருக்கின்றது.

இதயம் காப்போம் திட்டத்தின் மூலம் 8713 ஆரம்ப சுகாதார நிலையங்களிலும், நகர்ப்புற சுகாதார நிலையங்கள் ஏறத்தாழ 10000 மருத்துவமனைகளிலும் இன்றைக்கு 14 வகை மாத்திரைகள் இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது. அந்த மாத்திரைகளை ஆரம்ப நிலையில் மாரடைப்புக்கான அறிகுறி வருபவர்களுக்கு அந்த மாத்திரையை தந்தால் அந்த உயிரினை தற்காலிகமாக பாதுகாக்கப்படும். ஒரு 4 இல் இருந்து 5 மணி நேரம் அவருடைய உயிரினை பாது காக்கப்படுகிறது எனவே அந்த வகையில் மருந்துகளை இன்றைக்கு 10990 மருத்துவ மனையில் இருப்பு வைக்கப்பட்டிருக்கின்றது இதற்கு முன்னால் மருத்துவத்துறை வரலாற்றில் வேற எப்போதும் இது போன்ற மருந்துகள் மருத்துவமனையில் இருத்தது இல்லை.

அந்த வகையில் பாதிப்போடு வந்தால் 14 வகையான மாத்திரைகளை செவிலியர்கள் அவர்களிடம் தருவார்கள். மூன்று வகையான இந்த 14 மாத்திரைகளை உடனடியாக தந்தால் அவர்களுடைய உயிர் பாதுகாக்கப்படுகிறது.

நான் மருத்துவமனைக்கு வந்த உடனேயே எனது உயிரை காப்பாற்றி 108 ஆம்புலன்ஸ் மூலம் அரசு தலைமை மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள் அங்கு எனக்கு தீர சிகிச்சை செய்யப்பட்டு நன் இப்பொழுது நலமுடன் உள்ளேன் என்று உயிர் பிழைத்தவர்கள் கூறியிருக்கின்றார்கள். நான் உயிர்பிழைத்ததற்கு தளபதி மு .க ஸ்டாலின் அவர்களின் அரசு தான் காரணம் என்று மகிழ்ச்சியோடு சொல்கின்ற அந்த நிலையினை கேட்டும் போது மிக மகிழ்ச்சியாக இருக்கின்றது.

இன்றைக்கு 6000 த்திற்க்கும் மேற்பட்டோர் உயிர் பிழைத்து இருக்கின்றார்கள். இப்பொழுது இந்த மருத்துவமனையில் கூட இப்பொழுது இரண்டு ப பயன் பெற்றிருப்பதாக பட்டியலை தந்திருக்கின்றார்கள்.

இவ்வாறு அமைச்சர் பேசினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் ம. கண்ணன், கரூர் மாநகராட்சி ஆணையர் சரவணகுமார். கரூர் மருத்துவமனை மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு. தாமோதரன், இணை இயக்குனர் (நலப்பணிகள்) மரு.ரமாமணி.

துணை இயக்குனர் (சுகாதாரப் பணிகள்) மரு சந்தோஷ் குமார், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் வாணீஸ்வரி, மாநகராட்சி மண்டல தலைவர்கள் ஆர்.எஸ்.ராஜா, எஸ்.பி. கனகராஜ், சக்திவேல் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## வில்லிவாக்கத்தில் நலத்திட்ட உதவிகள் வழங்கல்!

சென்னை, நவ. 30 –

கழக இளைஞர் அணி செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதிஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு, சென்னை வடகிழக்கு மாவட்ட கழக இளைஞர் அணி மற்றும் வில்லிவாக்கம் வடக்கு ஒன்றிய இளைஞர் அணி சார்பபில், அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. அறிவுறுதலின்படி, வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மோரை கோ. தயாளன் தலைமையில் நடைபெற்றது.

புதிய கன்னியம் நகரில் சென்னை வடகிழக்கு மாவட்ட இளைஞர் அணி துனை அமைப்பாளரும், மாவட்ட கவுன்சிலருமான மோரை மு.சதிஷ்குமார் ஏற்பாட்டிலும் அன்னை தெரேசா கல்வி மற்றும் அறக்கட்டளை இல்லத்தில் ஆதரவற்றோர்களுக்கு மதிய அசைவ விருந்து மோரை க.இளமாறன் (இளைஞர் அணி வில்லிவாக்கம் வடக்கு ஒன்றியம்) ஏற்பாட்டிலும் வழங்கப்பட்டது. இதில் மாவட்ட, ஒன்றிய கழக நிர்வாகிகள் ஆலத்தூர் ஏழுமலை, பமதுகுளம் அண்ணாதுரை, பொத்தூர் மாரி, பாலவேடு இரவிகுமார் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

'வாட்ஸ் அப்'பில் வந்த செய்தி!




மதுரை மாநகர் மாவட்டத்தில்

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா : வினாடி - வினா நிகழ்ச்சி!

### மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. அறிக்கை!

மதுரை, நவ. 30 -

மதுரை மாநகர் மாவட்டக் கழகச் செயலாளர் கோ.தளபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

நவீன தமிழகத்தின் சிற்பி கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு மாணவ - மாணவியர்க்கான வினாடி வினா நிகழ்ச்சி கழக துணை பொதுச்செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்களின் தலைமையில், நிதி மற்றும் மனிதவள மேம்பாட்டு துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களின் முன்னிலையில் 02.12.2023 -சனிக்கிழமை அன்று காலை 10.00மணியளவில் பசுமலை கோபால்சாமி மண்டபத்தில்நடைபெறவுள்ளது. இந்நிகழ்ச்சி களில் மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக, வட்டக் கழக, ஒன்றிய, பேரூர், கிளை செயலாளர்கள், நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மாமன்ற உறுப்பினர்கள், கழக முன்னோடிகள் மற்றும் கழக உடன்பிறப்புகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டிகிறேன்.



இவ்வாறு அவர் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம்

## தொண்டர் அணி சார்பில் கருத்தரங்கம்!

### அமைச்சர் எஸ்.ரகுபதி தலைமை! அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் - கே.கே.செல்லபாண்டியன் சிறப்புரை!

புதுக்கோட்டை நவ.30

புதுக்கோட்டை தெற்கு மாவட்டம், தி.மு க மாவட்ட தொண்டர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா கருத்தரங்கம்

இன்று (30.11.2023- வியாழன்) காலை 10.00 மணியளவில் கே.வி.எஸ் மஹால் ஏசி (பட்டுக்கோட்டை ரோடு) அறந்தாங்கியில் கலைஞரின் தொலைநோக்கு பார்வை என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெறுகிறது. புதுக்கோட்டை தெற்கு மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர் மு. கருணாகரன் வரவேற்புரையாற்றுகிறார்.

சட்டம், நீதிமன்றங்கள் சிறைச்சாலை மற்றும் ஊழல் தடுப்புத்துறை அமைச்சர், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட செயலாளர் எஸ்.ரகுபதி தலைமை வகிக்கிறார்.

கருத்தரங்கம் சிறப்பு அழைப்பாளராக மாநிலங்களவை குழுத் தலைவர், கழக கொள்கை பரப்புச் செயலாளர் திருச்சி என். சிவா எம்.பி கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

சுற்றுச்சூழல், காலநிலை மாற்றம், முன்னாள் இராணுவத்தினர் நலத்துறை அமைசசர், தலைமை செயற்குழு உறுப்பினர், ஒன்றிய கழகச் செயலாளர் சிவ.வீ.மெய்யநாதன், புதுக்கோட்டை வடக்கு மாவட்டக் கழக செயலாளர் கே.கே.செல்லபாண்டியன், கவிச்சுடர் கவிதைப்பித்தன், அறந்தாங்கி ராஜன் எம்.எம்.அப்துல்லா எம்.பி,பரணி இ.ஏ.கார்த்திகேயன், சுப.சரவணன், மிசா. ராமநாதன், டாக்டர் ரகு. அண்ணாமலை ஆகியோர் சிறப்புரையாற்றுகின்றனர். அ.சுப்ரமணியன், ஞான.இளங்கோவன், ஸ்ரீதேவி அண்ணாதுரை, க.அடைக்கலம், ஜெ.அபுதாகீர், க.ராஜேந்திரன், சு.உதயம் சண்முகம், வே. பொன்துரை, டி.தங்கமணி. பொன்.கணேசன், அரு. வடிவேல்,

கே.எஸ்.ரவி, எஸ்.எம். முகமது அப்துல்லா. சக்தி இராமசாமி, அ.முத்து, எஸ்.குமார் (எ) துரைக்கண்ணு, அ.அடைக்கலமணி, ஏ.ஆர்.அழகு சிதம்பரம். ஆர்.கணேசன், பொன்.ராமலிங்கம், வி. ஆர்.இளையராஜா, கே. சி.சிவக்குமார், ஏ.பழனி குமார், அ.அழகப்பன், செந்தில்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர். தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.ஆர்.கே. கலைமணி, எஸ்.ஜெயராமன், இரா.ஆனந்த், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.வி.செல்வம், சீனி. பழனியப்பன், கே.எம்.சுப்பிர மணியன். என். வீரையா, ரெத்தினவேல், க.கலைவாணி, மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் த.மணிராஜன், சிவ. பால.இளங்கோ, ஆ.கலைச்செல்வன். தி.முத்து, டாக்டர் சுதர்சன், இ.ஏ.பெரிய கருப்பன்,

ராமலிங்கம், எல். சுந்தரபாண்டியன், எஸ்.என்.குமரேசன், ஏ. பாத்திமா பீவி, கே.ஆர்.இராமசாமி, ஹரி விமலாவதி, மணிகண்டன், எம்.ஜி (எ) ராமச்சந்திரன், டி.வளர்மதி, பொன்.லோகநாதன், சர்வேயர் நடேசன், ரம்யாபாலு, அப்துல் ஹமீது, சக்திவேல், எம். தேவி, மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் சாமி.சுரேஷ், எஸ். காளீஸ்வரன், ராஜ சரவணன், என்,ராஜா, நா.சரவணன். கே.நாகராஜன், கே.வி.மயில்வாகணன், டி. வி.சாத்தையா, ந.செ.முத்தையா. ரமேஷ் மற்றும் மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளை கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

முடிவில் மாவட்டத் தொண்டரணி துணை அமைப்பாளர் சோ.ஆறுமுகம் நன்றி கூறுகிறார்.



கடலூர் பகுதியில் பெய்த தொடர் மழை காரணமாக கடலூர் சிங்காரதோப்பைச் சேர்ந்த சக்திவேல் என்பவரின் வீட்டு மேற்கூரை இடிந்து சேதம் அடைந்து விழுந்தது. இத்தகவல் அறிந்த கோ.அய்யப்பன் எம்.எல்.ஏ. சம்பவ இடத்திற்குச் சென்று இடிந்து சேதமடைந்த வீட்டினை பார்வையிட்டு பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் தாசில்தார் விஜய் ஆனந்த், வருவாய் ஆய்வாளர் சஞ்சய், மாநகராட்சி கவுன்சிலர்கள் கர்ணன், பிரகாஷ், சரத் தினகரன், சுமதி ரங்கநாதன், பாரூக் அலி, ராதிகா பிரேம்குமார், மகேஸ்வரி விஜயகுமார், கீர்த்தனா ஆறுமுகம், கூட்டுறவு சங்கத் தலைவர் ஆதி பெருமாள், அரசு ஒப்பந்ததாரர் ராஜசேகர், லட்சுமி செக்யூரிட்டி சர்வீஸ் தினகரன், முன்னாள் நகர மன்ற உறுப்பினர் கோமதி சம்பத், கலைமணி, பாபு, பிரகாஷ், ரோட்டரி ராசன், யுவராஜ், செந்தில், வெங்கடேசன், பாஸ்கர், நடராஜன் மற்றும் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

மணலியில்

## நலத்திட்ட உதவி வழங்கல்!

சென்னை,நவ.30-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. பொன்னேரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 15 வது வட்டம், மணலி புது நகர் பகுதியில் பள்ளி மாணவ - மாணவிகளுக்கு இளைஞர் நலன் விளையாட்டு மேம்பாட்டுத் துறை மற்றும் சிறப்பு செயலாக்கத் திட்டத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. இதில் பகுதிச் செயலாளர் புழல் எம். நாராயணன் பங்கேற்று பள்ளி மாணவர்களுக்கு நல உதவி, அறுசுவை உணவு வழங்கினார்.



கழக இளைஞரணி செயலாளரும், தமிழ்நாடு விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் இளம்தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளையொட்டி,தர்மபுரி மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் முன்னாள் அமைச்சர் முனைவர். பி.பழனியப்பன் வழிகாட்டுதலின்படி பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றியம் பி.பள்ளிப்பட்டி ஊராட்சியின் கிளைக்கழகங்களின் சார்பில் கார்மேல் அன்னை ஊராட்சி தொடக்கப் பள்ளியில் ஊராட்சிமன்றத் தலைவர் திருமலாதினேஷ் ஏற்பாட்டில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் தலைமையில் பள்ளி குழந்தைகளுக்கு இனிப்புகள், நோட்டு பத்தகம், பேனா, பென்சில் வழங்கப்பட்டது. உடன் கிளைகழக செயலாளர்கள் இராஜேந்திரன், சுகந்திரம், ஜனா மற்றும் கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பழ.அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார். இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ.குமரகுருபரன், வைக்கம் போராட்டம் நூல் ஆசிரியர் எழுத்தாளர் பழ.அதியமான், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இரா.கஜலட்சுமி, மொழிபெயர்ப்புப் பிரிவு இணை இயக்குநர் டாக்டர். சங்கர சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை சார்பில் 12 கோடியே 54 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலக் கல்லூரி மாணவ, மாணவியருக்கான 5 விடுதிக் கட்டடங்களையும் மற்றும் 2 கள்ளர் சீரமைப்புப் பள்ளிகளில் 6 கோடியே 52 இலட்சம் ரூபாய் செலவில் உட்கட்டமைப்பு பணிகள் நிறைவுற்ற பள்ளிக் கட்டடங்களையும் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், பிற்படுத்தப்பட்டோர் நல ஆணையர் அனில் மேஷ்ராம், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல ஆணையர் வா.சம்பத் ஆகியோர் கலந்து கொண்டனர்.







முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) முகாம் அலுவலகத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் 2 புதிய வால்வோ சொகுசு சுற்றுலா பேருந்துகளின் பயன்பாட்டினை தொடங்கி வைக்கும் விதமாக, சென்னை, செங்கல்பட்டு மற்றும் திருவள்ளூர் மாவட்டங்களில் அரசு சிறப்பு பள்ளிகளில் பயிலும் 60 மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகள் மாமல்லபுரத்திற்கு சுற்றுலா பயணம் மேற்கொள்ள அச்சுற்றுலா பேருந்துகளை கொடியசைத்து தொடங்கி வைத்து, மாணவ, மாணவிகளுக்கு சிற்றுண்டிகள் வழங்கி வழியனுப்பி வைத்தார்.

### எழுத்தாளர் பழ.அதியமான் எழுதிய

# ‘வைக்கம் போராட்டம்’ நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூல்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டார்!

சென்னை, நவ.29-

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுத்தாளர் பழ. அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலை வெளியிட்டார் அதன் விபரம் வருமாறு:-**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், எழுத்தாளர் பழ. அதியமான் அவர்கள் எழுதிய “வைக்கம் போராட்டம்” நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலினை வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

கேரள மாநிலம், கோட்டயம் மாவட்டம், வைக்கத்திலுள்ள மகாதேவர் கோயிலைச் சுற்றி அமைந்துள்ள தெருக்களில் ஒடுக்கப்பட்டவர்கள் நடப்பதற்கு தடைவிதிக்கப்பட்டிருந்ததை நீக்கக் கோரி நடந்த வைக்கம் போராட்டத்தில் கேரளத் தலைவர்களின் அழைப்பின் பேரில் தந்தை பெரியார் அவர்கள் வைக்கம் சென்று, அந்தப் போராட்டத்திற்கு தலைமை ஏற்றார். பின்பு பல நாட்கள் அங்கு தங்கியிருந்து போராட்டத்தை ஒருங்கிணைத்து, அனைத்து மக்களிடமும் வைக்கம் போராட்டம் குறித்து தமது சீர்திருத்த, சமூக நீதிக் கருத்துக்கள் மூலம் பிரச்சாரம் செய்து, வைக்கம் போராட்டத்தை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றார். 1923 மார்ச் மாதம் தொடங்கிய வைக்கம் போராட்டம் நடைபெற்று நூறு ஆண்டுகள் ஆகின்றது.

“வைக்கம் போராட்டம் தொடங்கி நூறாண்டுகள் நிறைவு செய்ததையொட்டி, தமிழ்நாடு அரசின் சார்பில் 2023ஆம் ஆண்டு மார்ச் 30ஆம் நாள் தொடங்கி ஓராண்டு காலம் பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்தப்படும்” என்றும், போராட்டத்தின் வரலாற்றையும், வெற்றியையும் பொதுமக்கள் மற்றும் மாணவ, மாணவியர்களுடன் சேர்ந்து கொண்டாடும் வகையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 30.3.2023 அன்று விதி 110ன் கீழ் 11 அறிவிப்புகளை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

அதைத் தொடர்ந்து, கடந்த ஏப்ரல் 1 ஆம் நாள் கேரளாவில் உள்ள வைக்கத்தில், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மற்றும் கேரளா மாநில முதலமைச்சர் பினராயி விஜயன் ஆகியோர் கலந்து கொண்ட வைக்கம் சத்தியாகிரக போராட்டத்தின் நூற்றாண்டு விழாவில், எழுத்தாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதிய வைக்கம் போராட்டம் நூலின் மலையாள மொழிப்பெயர்ப்பு வெளியிடப்பட்டது.

இன்றைய தினமான நவம்பர் 29ம் நாள், 1925 ஆம் ஆண்டு வைக்கம் போராட்டத்தின் வெற்றிவிழா வைக்கத்தில் கொண்டாடப்பட்ட நாளாகும். அந்த விழாவிற்கு தந்தை பெரியார் அவர்கள் தலைமையேற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இத்தகைய வரலாற்றுச் சிறப்புமிக்க நாளினை நினைவு கூரும் வகையில் இன்றையதினம் எழுத்தாளர் பழ.அதியமான் அவர்கள் எழுதிய வைக்கம் போராட்டம் நூலின் கன்னட மொழிபெயர்ப்பு நூலை முதலமைச்சர் அவர்கள் வெளியிட, திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பெற்றுக்கொண்டார். பேராசிரியர் ஸ்ரீதரா மேற்பார்வையில் செல்வகுமார் இந்நூலினை மொழிபெயர்த்துள்ளார். கௌரி மீடியா டிரஸ்ட் நிறுவனத்தோடு இணைந்து தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பள்ளிக்கல்வித் துறை செயலாளர் ஜெ. குமரகுருபரன், வைக்கம் போராட்டம் நூல் ஆசிரியர் பழ.அதியமான், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் திருமதி. இரா. கஜலட்சுமி, மொழிபெயர்ப்புப் பிரிவு இணை இயக்குநர் டாக்டர். சங்கர சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (29.11.2023) தலைமைச் செயலகத்தில், கோத்தாரி குழுமத்தின் தலைவர் ரஃபிக் அஹமத் மற்றும் எவர்வேன் மற்றும் ஷுடவுன் குழுமத்தின் தலைவர் ரான் ஆகியோர் சந்தித்து, பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சிப்காட் தொழில் வளாகத்தில் அமைந்துள்ள ஃபீனிக்ஸ் கோத்தாரி காலணிப் பூங்காவில் நிறுவப்பட்டுள்ள JR One காலணி உற்பத்தித் தொழிற்சாலையை திறந்து வைத்ததற்காக நன்றி தெரிவித்தனர்.

### கேரளா தொடர்ந்த வழக்கு: மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றி வைக்கப்படும்

# மசோதாக்கள் மீது ஆளுநர்கள் விரைந்து முடிவு எடுக்க வேண்டும் - உச்சநீதிமன்றம் உத்தரவு!

புதுடெல்லி, நவ.30-

**மாநில சட்டமன்றங்களில் நிறைவேற்றி வைக்கப்படும் மசோதாக்கள் மீது ஆளுநர்கள் விரைந்து முடிவு எடுக்க வேண்டும் என்று கேரள மாநில அரசு தொடுத்த வழக்கில் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆளுநர்கள் உரிய நேரத்தில் செயல்படவில்லை என்றால் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக விதிமுறைகள் வகுக்க வேண்டி வரும் என்றும் நீதிபதிகள் எச்சரித்துள்ளனர்.**

எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் ஆளுநரை கொண்டு இரட்டை ஆட்சி நடத்த ஒன்றிய பா.ஜ.க அரசு முயற்சி மேற்கொண்டு வருகிறது. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பும் மசோதாக்களுக்கு ஆளுநர்கள் ஒப்புதல் அளிக்காமல் காலம் தாழ்த்தி வருகின்றனர்.

ஆளுநர்களின் இந்த நடவடிக்கையை கண்டித்து தமிழ்நாடு, கேரளா, பஞ்சாப் உள்ளிட்ட மாநிலங்கள் உச்சநீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தன.

இதில் பஞ்சாப் அரசு தொடர்ந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம் ஆளுநர் என்பவர் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு ஆட்சியில் உள்ள மாநில அரசுகள் நிறைவேற்றும் மசோதாக்களுக்கு காலதாமதமின்றி ஒப்புதல் வழங்க வேண்டும் என்று உத்தரவிட்டது.

இந்நிலையில் கேரள ஆளுநருக்கு எதிராக அம்மாநில அரசு தொடர்ந்த வழக்கு உச்சநீதிமன்றத்தில் நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது கேரள அரசு சார்பில் ஆஜரான வழக்கறிஞர் கே.கே.வேணுகோபால், உச்சநீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வர இருந்த நிலையில் ஒரு மசோதாவிற்கு ஆளுநர் ஒப்புதல் அளித்து இருப்பதாகவும், 7 மசோதாக்களை குடியரசு தலைவருக்கு அனுப்பி வைத்து இருப்பதாகவும் தெரிவித்தார்.

நிதி மசோதா உள்ளிட்ட 8 மசோதாக்களை ஆளுநர் நிலுவையில் வைத்து இருப்பதாகவும் அவர் கூறினார்.

நீண்ட நாட்களாக மசோதாக்களை நிலுவையில் வைத்து விட்டு 7 மசோதாக்களை குடியரசு தலைவருக்கு ஆளுநர் அனுப்பி வைத்து இருப்பது மேலும் தாமதப்படுத்தும் முயற்சி என்றும் கேரள அரசு சார்பில் வாதிடப்பட்டது. இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள், 8 மசோதாக்கள் மீது முடிவு எடுத்துள்ள ஆளுநர், மீதமுள்ள நிதி மசோதா உள்பட 8 மசோதாக்கள் மீது அரசியல் சாசன பிரிவு 200 படி விரைவாக முடிவு எடுக்க வேண்டும் என்று அறிவுறுத்தினர்.

பஞ்சாப் வழக்கில் பிறப்பித்த உத்தரவில் குறிப்பிட்ட படி காலதாமதம் இன்றி ஆளுநர் முடிவு எடுக்க வேண்டும் என்றும் நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

### ஒன்றிய அரசின் கோரிக்கை நிராகரிப்பு

ஆளுநர் தனது அதிகாரத்தை பயன்படுத்தி சட்டத்தை நிறுத்தி வைக்க முடியாது என்றும் நீதிபதிகள் கருத்து தெரிவித்தனர். ஆளுநர்கள் உரிய நேரத்தில் செயல்படவில்லை என்றால் சட்ட மசோதாக்களுக்கு ஒப்புதல் அளிப்பது தொடர்பாக விதிமுறைகள் வகுக்க வேண்டி வரும் என்று நீதிபதிகள் எச்சரித்தனர்.



தொடர்ந்து கூடுதல் கோரிக்கைகளுடன் மனுத்தாக்கல் செய்ய கேரள அரசு அனுமதி கோரியது.

இதற்கு ஒன்றிய அரசு சார்பில் கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டது. ஒன்றிய அரசின் கோரிக்கையை நிராகரித்த உச்சநீதி மன்ற நீதிபதிகள் கேரள அரசு திருத்திய மனுவை தாக்கல் செய்ய அனுமதி அளித்து வழக்கு விசாரணையை ஒத்தி வைத்தனர்.



# இடம் பொருள் கலைஞர் 46

பல்வேறு துறைகளில் தொலைநோக்குப் பார்வையுடன், முத்தமிழறிஞர் கலைஞர் செயல்படுத்திய திட்டங்கள், உருவாக்கிய கட்டமைப்புகள் குறித்து இந்தப் பகுதியில் பார்த்து வருகிறோம். இந்த வாரம் கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்.





## கோவை சிறுவாணி குடிநீர்த் திட்டம்

### பொன்விழா காணும் 99 ஆண்டு ஒப்பந்தம்!

‘தென்னிந்தியாவின் மான்செஸ்டர்’ என்ற பெருமைக்குரியது தமிழ்நாட்டின் கோயம்புத்தூர் மாவட்டம். ஜவுளி, கல்வி, மருத்துவம் என சகல துறைகளிலும் இன்று போலவே அன்றும் வேகமாக வளர்ந்து வந்தது இந்த மாநகரம். நகரம் வளர்ச்சி அடைய அடைய, மக்கள்தொகையும் பெருகிக் கொண்டே வந்தது.



ஒரு குறிப்பிட்ட பகுதி, நகர்மயமானால், அந்த மாநிலத்தின் பொருளாதார வளர்ச்சி பெருகும் என்றாலும், அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கான அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய பெரும்பாலான அரசுகள் மறந்துவிடுகின்றன. அப்படித்தான் 50 மற்றும் 60-களில் தமிழ்நாட்டை ஆண்ட காங்கிரஸ் கட்சியும் மறந்துவிட்டிருந்தது.

கோவை மாவட்ட மக்கள், தங்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்வதற்கு, சிறுவாணி ஆற்றிலிருந்து தண்ணீர் கொண்டு வர வேண்டுமென்று நீண்டகாலமாகக் கோரிக்கை வைத்தபடி இருந்தனர்.

கோவையில் சிங்காநல்லூர் பகுதியில் இருந்து தன் திரைப்படப் பணிகளை மேற்கொண்டவர் அல்லவா கலைஞர்..? அதனால் அந்த மக்களின் கோரிக்கையில் இருந்த நியாயம் புரிந்தது. ஆகவே, அவர்களது குரலை 1966-ஆம் ஆண்டு மார்ச் 4 அன்று, சட்டமன்றத்தில் தி.மு.கழகம் எதிர்க்கட்சியாக இருந்தபோது எதிரொலித்தார்.

“சிறுவாணித் திட்டம் என்பது தமிழ்நாட்டின் எல்லையிலிருந்து இரண்டு பர்லாங்கு தூரத்தில் உள்ளது. கோவை நகரத்திற்கு 22 மைல் தூரத்தில் உள்ளது. கேரள மாநிலத்துடன் சேர்ந்துள்ள சிறுவாணிப் பகுதியிலிருந்து கேரள மாநில அரசின் உதவியோடு திட்டத்தை நிறைவேற்றி, கோவை மாநகர மக்களின் குடிநீர்த் தேவையை நிறைவு செய்திட வேண்டும்" என்றார்.

#### வறட்சியில் எழுந்த சபதம்

கலைஞர் சட்டமன்றத்தில் வைத்த கோரிக்கையை அன்றைய அரசு நிறைவேற்றவில்லை. பிறகு 1969-இல் பேரறிஞர் அண்ணாவின் மறைவுக்குப் பிறகு, முதலமைச்சராகப் பொறுப்பேற்றார் கலைஞர். அந்த ஆண்டு தமிழ்நாட்டில் கடுமையான வறட்சி நிலவியது. அப்போது கோவை மாநகர மக்களுக்கு சிறுவாணி நீர்த் திட்டத்தை நிறைவேற்றி, குடிநீர் வசதி செய்து தருவேன் என்று உறுதி பூண்டார்.

தொடர்ந்து, 1969-ஆம் ஆண்டு மே 10-ஆம் தேதி அன்று, திருவனந்தபுரம் சென்று கேரள மாநில முதலமைச்சர் ஈ.எம்.எஸ்.நம்பூதிரிபாடு அவர்களை சந்தித்து சிறுவாணித் திட்டம் குறித்து, பேச்சுவார்த்தை நடத்தினார். அதன் தொடர்ச்சியாக இருமாநில அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகள், பலகட்ட பேச்சுவார்த்தை நடத்தினர்.

அவற்றின் அடுத்த கட்டமாக, ‘கோயம்புத்தூர் குடிநீர்ப் பெருக்குத் திட்டம்’ என்ற பெயரில், சிறுவாணி குடிநீர்த் திட்டக் கால்கோள் விழா 1970-ஆம் ஆண்டு செப்டம்பர் 15 -ஆம் தேதி அன்று நடைபெற்றது. அப்போது பேசிய முத்தமிழறிஞர் கலைஞர், “பெயர்தான் சிறுவாணியே தவிர, இப்பிரச்சினை கொடுத்த கஷ்டங்கள் பெரிய அளவாகும்” என்றார்.

#### பனகல் அரசர் வழியில்...

இந்தத் திட்டம் தொடர்பாக 1970-இல் வெளியான செய்திக் குறிப்பு ஒன்றில், “இந்தத் திட்டத்தின் மூலம் சிறுவாணிப் பள்ளத்தாக்கில் 6,500 இலட்சம் கன அடி கொண்ட நீர்த் தேக்கத்தைக் கட்டி, குடிநீர் எடுக்க வசதியுள்ள அமைப்பு மூலம் தற்போதுள்ள சுரங்கப்பாதை வழியே, கோவை மாவட்ட எல்லைக்குள் உள்ள நீர்ச் சுத்திகரிப்பு நிலையத்திற்கு நீர் கொண்டு வர ஏற்பாடு செய்யப்படும். சுத்திகரிக்கப்பட்ட பின்னர், 33 அங்குல விட்டமுள்ள குழாய் மூலம் நீர், கோவை நகருக்குக் கொணர்ந்து விநியோகிக்கப்படும். கோவை நகரத்துக்கும், நகரை ஒட்டியுள்ள சுற்றுப்புறச் சிற்றூர்களுக்கும் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு, மக்களின் நெடுநாள் குடிநீர்த் தேவை பூர்த்தி செய்யப்படும்.

இத்திட்டத்திற்கு முதலீட்டுத் தொகையாக ரூ.6.33 கோடி ரூபாயும், ஆண்டொன்றுக்குப் பராமரிப்புச் செலவுக்கு ரூ.15 இலட்சமும் ஆகும். இம்முழுத் திட்டத்தையும் மூன்று வகையாகப் பிரித்து செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மூலம் தற்பொழுது கிடைக்கும் குடிநீர் அளவு, ஐந்து மடங்கு அதிகமாகும்” என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் திட்டத்தின் அடிக்கல் நாட்டு விழாவின் போது, “நீதிக்கட்சி ஆட்சி செய்த காலத்தில் முதலமைச்சர் பனகல் அரசர் அவர்கள் குடி தண்ணீர் திட்டத்துக்கு இங்கே இதே இடத்தில் 1935-இல் அடிக்கல் நாட்டினார் என்பதைப் பார்க்க நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். நீதிக் கட்சியின் பாரம்பரியத்தில் வந்த திராவிட முன்னேற்றக் கழக அரசின் முதல்வனாக இங்கே வந்து சிறுவாணி குடி நீர்த் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகிறேன்!” என்றார்.

மேலும், “ஒரு மாதம் கழித்து, கருணாநிதி அடிக்கல் நாட்டினாரே, எங்கே தண்ணீர்? என்று கேட்பார்கள். அப்படிக் கேட்பவர்கள் யார் என்பது உங்களுக்குத் தெரியும். இந்தத் திட்டம் நிறைவேற 1.5 ஆண்டுகள் ஆகலாம். அப்பொழுது நானும் வந்து உங்கள் மகிழ்ச்சியில் பங்கு கொள்வேன்” என்றார் கலைஞர்.

#### தண்ணீர்-அரிசி-மின்சாரம்

அந்தத் திட்டம் வேகமாக செயல்படுத்தப்பட்டு வந்த நிலையில், கேரளத்தில் அரசியல் மாற்றம் ஏற்பட்டு, அச்சுதமேனன் முதலமைச்சராகப் பொறுப்பேற்றார். தொடர்ந்து, 1973-ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19-ஆம் தேதி அன்று, இருமாநில அரசுகளுக்கிடையே, 99 ஆண்டுகளுக்கு முழுமையாக செயலில் இருக்கக்கூடிய சிறுவாணி குடிநீர்த் திட்டத்தை நிறைவேற்றும் ஒப்பந்தம் ஏற்பட்டது.

அதன்படி கோவை நகரின் வீட்டு, சமூக மற்றும் தொழிற்சாலைப் பயன்பாடுகளுக்குத் தேவையான நீரைத் தேக்கிட (1,300 மில்லியன் கன அடி), தமிழ்நாடு அரசின் செலவில் கேரள அரசு சிறுவாணி அணையைக் கட்டி அதற்கான கேரள மாநில நிலத்தை தமிழ்நாடு அரசிடம் பராமரிப்புக்கு ஒப்படைத்தது.

தான் சொன்னது போலவே, அந்த ஆண்டு கோவையில் நடைபெற்ற சிறுவாணித் திட்டத்தின் திறப்புவிழாவில் கலந்துகொண்டார் கலைஞர். அவருடன், அச்சுதமேனனும் கலந்துகொண்டார். அப்போது பேசிய கலைஞர், “கேரளமும் தமிழ்நாடும் பக்கத்திலே இருக்கின்ற மாநிலங்கள். இவை ஒன்றுக்கொன்று எவ்வாறெல்லாம் உதவி கொண்டிருக்கின்றன என்பதை எடுத்துக்காட்டுகின்ற முறையில் கேரளத்திற்கு ஓர் ஆண்டிற்கு 15 ஆயிரம் டன் அரிசி வழங்கத் தயாராக இருக்கிறது தமிழகம்” என்றார்.

அவரைத் தொடர்ந்து பேசிய அச்சுதமேனன், “தமிழகத்திலே மின்சாரப் பற்றாக்குறை வருகிறபோது, மின்சாரம் கொடுக்க கேரளம் தயாராக இருக்கிறது” என்றார்.

இவ்வாறு அந்த காலத்தில் அண்டை மாநிலங்களுக்கிடையே ஒரு நல்லுறவு நிலவியதற்கு இன்றும் சாட்சியாக இருக்கிறது சிறுவாணி..!

...வலம் வருவோம்

> சிறுவாணி குடிநீர்த் திட்ட திறப்பு விழாவில், அன்றைய குடிநீர் வாரியத் தலைவராக இருந்த செ.கந்தப்பன் பேசும் போது, “சிறுவாணியிலிருந்து, கோவைக்குப் போதுமான அளவு குடிதண்ணீர் கிடைக்க வழி வகுத்துள்ளார் முதல்வர். குடிநீர்ப் பிரச்சினை இன்றோடு தீர்ந்துவிட்டது. எனவே, முதல்வருக்கு, ‘சிறுவாணி வென்றாய்’ என்ற சிறப்புப் பட்டத்தை, உங்கள் சார்பாக அளிக்கலாம் என்று எண்ணி உள்ளேன்...” என்றார்.
>
> அவருக்குப் பின் கலைஞர் உரையாற்றும்போது, “என் அருமை கந்தப்பன், ‘சிறுவாணி வென்றாய்’ என்ற சிறப்புப் பட்டத்தை எனக்கு அளிக்கயிருப்பதாகக் கூறினார். ஏற்கெனவே எனக்குள்ள பல பட்டங்கள், மாற்றுக் கட்சிக்காரர்களிடம் சிக்கி, என்ன பாடுபடுகின்றன என்பது உங்களுக்குத் தெரியும். ‘சிறுவாணி வென்றாய்’ என்ற பட்டத்தை, நாளை அவர்கள், ‘சிறுவா... நீ வென்றாய்!’ என்று, ஏளனமாய்ப் பேசக்கூடும். ஆகவே, நான் சிறுவனாக மாற ஆசைப்படவில்லை” என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

## அச்சில் ஏறாத கவிதை!

54-வது இந்திய சர்வதேசத் திரைப்பட விழா, கோவாவில் நவம்பர் 20-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை நடைபெற்றது. விழா நாட்களில், ‘தி பீக்காக்’ எனும் பெயரில் திரைப்பட விழா சார்ந்த செய்திகள், புகைப்படங்கள், பிரபலங்களின் படைப்புகள் ஆகியவற்றைத் தாங்கி வரும் நாளிதழ் வெளியிடப்படுவது வழக்கம்.

அந்த நாளிதழில், ஞாயிறு இதழில் (நவம்பர் 26) மறைந்த விஷ்ணுசூர்யா வாக் என்ற தலித் கவிஞரின் கவிதை, சித்தேஷ் கவுதம் எனும் சாதி எதிர்ப்பு ஓவியரின் ஓவியத்துடன் அச்சிடப்படுவதற்குத் தேர்வு செய்யப் பட்டிருந்தது. ஆனால், ஞாயிறு இதழில் அந்தக் கவிதை இடம் பெறவில்லை. ஓவியம் மட்டுமே இடம்பெற்றிருந்தது.

இதற்கு திரைப்பட விழாவை நடத்தும் அதிகாரிகள் எந்த விளக்கத்தையும் கொடுக்கவில்லை. இதைத் தொடர்ந்து அந்தக் கவிஞருக்கு ஆதரவாகப் பிரபலங்கள் குரல் எழுப்பி வருகின்றனர்.

அந்தக் கவிதையின் தலைப்பு ‘செக்யூலர்’. அதாவது, மதச்சார்பின்மை. அந்தக் கவிஞர் வாக் யார் தெரியுமா...? கோவாவின் செயின்ட் ஆந்த்ரே தொகுதியின் பா.ஜ.க. முன்னாள் எம்.எல்.ஏ..! சொந்தக் கட்சி, தலித் படைப்பாளிகளுக்கே இதுதான் நிலை.

## :ப்ளாஷ்பேக்



### சிவப்புக் கம்பள வரவேற்பு!

மண்டல் ஆணையை நிறைவேற்றி, வேலைவாய்ப்பில் பிற்படுத்தப்பட்ட மக்களுக்கான இட ஒதுக்கீட்டை நிறைவேற்றியதற்காக இந்தியா முழுவதும் வி.பி சிங் அவர்களுக்கு எதிர்ப்பு கிளம்பியது. தமிழ்நாடு மட்டும் இதற்கு விதிவிலக்காக இருந்தது. தமிழ்நாட்டில் தலைவர் கலைஞர் முதலமைச்சராக இருந்த காரணத்தால், சமூக நீதிக் காவலர் வி.பி சிங் அவர்களுக்கு தமிழ்நாடு முழுக்க சிவப்புக் கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது. அப்போது உளுந்தூர்பேட்டையில் அளித்த வரவேற்பில், தலைவர் கலைஞர், ‘மண்டல் நாயகர்’ வி.பி சிங், எஸ்.ஆர்.பொம்மை ஆகியோர் பங்கேற்று சிறப்பித்தனர்.



இராமலிங்கம்

-மருதூர் ஏ.இராமலிங்கம்,
இணைச் செயலாளர்,
ஆதிதிராவிடர் நலக்குழு.


இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண்:90033-24473, மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### மீண்டும் கலைப்பயணம்!

**1967-ஆம் ஆண்டு முதல் 1977-ஆம் ஆண்டு வரை கலைஞர் திரையுலகப் பணிகளில் நேரடியாகப் பங்குபெறவில்லை. 1978-ஆம் ஆண்டு, இயக்குநர் [கிருஷ்ணன்] பஞ்சு அவர்கள் இயக்கிய படம் மூலம் மீண்டும் திரையுலகப் பயணத்தைத் தொடங்கினார். கலைஞர் கதை, வசனம் எழுதிய அந்தப் படத்தின் தலைப்பு ‘நெஞ்சுக்கு நீதி’. அவர் எழுதிய நூலின் தலைப்பையே திரைப்படத்தின் பெயராக சூட்டப்பட்டது.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 315




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131